# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 11 செவ்வாய்க்கிழமை (25.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 060


# அ'புரம் சிறையில் நேற்று மோதல் கைதி ஒருவர் பலி; 25 பேர் காயம்

## உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஜனவரி 25

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் அதிகாரிகளுக்குமிடையே நேற்று இடம்பெற்ற மோதலில் கைதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்; சிறைச்சாலை அதிகாரிகள் ஒன்பது பேர் உட்பட 25 பேர் காயமடைந்துள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், சம்பவத்தில் மேலும் சிலர் உயிரிழந்தனர் என்றும் அந்த எண்ணிக்கை நான்கு வரை இருக்கலாம் என்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

பெண் கைதி ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் உயிரிழந்திருக்கிறார். சம்பவத்தையடுத்து அநுராதபுரச் சிறைச்சாலை போர்க் களமாகக் காட்சியளித்ததாகவும், அங்கு பெரும் பதற்றநிலை ஏற் பட்டுள்ளது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலையின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி, நேற்றுமுன்தினம் முதல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கூரைகளின் மேல் ஏறி இருந்த அவர்கள் இறங்க மறுத்தனர். இதனை அடுத்து சம்பவம் குறித்து விசாரிக்க சிறைச்சாலை ஆணையாளரால் விசேட குழு ஒன்று நேற்றும் சிறைக்கு அனுப்பப்பட்டது.

எனினும், நேற்றுப் பகல் சிறை அதிகாரிகள் குழு ஒன்று கைதிகள் மீது தாக்குதல் நடத்தி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் துப்பாக்கிப் சூடு நடத்தி உள்ளது என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்கு, பாதுகாப்பு அதிகாரிகளை தொடர்புகொண்டு கேட்டபோது அவர்கள் கருத்துக்கூற மறுத்து விட்டார்கள்.

இதனையடுத்து அநுராதபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் டபிள்யூ.டி.எம்.பி.விஜயகோனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தினார்.

"அநுராதபுர சிறைச்சாலையிலிருந்து நேற்று மாலை 25 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்

(27 ஆம் பக்கம் பார்க்க)



அநுராதபுரம் சிறையில் நேற்று நடந்த மோதலில் காயமடைந்த கைதி ஒருவர் அ'புரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்.

## நவசமசமாஜக் கட்சியில் சிவாஜிலிங்கம் போட்டி

### கூட்டமைப்புக்குப் பாடம் புகட்டுவேன் என்கிறார்

கொழும்பு, ஜன.25

வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் நவசமசமாஜக் கட்சியின் தலைமை வேட்பாளராக என்.கே.சிவாஜிலிங்கம் போட்டியிடுகின்றார்.

தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடத் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததை அடுத்து நவசமசமாஜக் கட்சியு டன் இணைந்து மேசைச் சின்னத்தில்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## சிகிச்சை பெறவே ஜனாதிபதி அமெ. பயணமானார்?

கொழும்பு, ஜன. 25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிகிச்சை பெறுவதற்காகவே அமெரிக்கா சென்றுள்ளார் என 'ஸ்ரீலங்கன் கார்டியன்' இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் தனிப்பட்ட அமெரிக்கப் பயணம் தொடர்பில் பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், அவர் உயிராபத்துள்ள நோய் ஒன்றுக்கு சிகிச்சை பெறவே அங்கு சென்றுள்ளார் என 'ஸ்ரீலங்கன் கார்டியன்' இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

"ஜனாதிபதியின் நோய் தொடர்பாக அரச வட்டாரங்கள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றன. இதனால் அவரது நோய் தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வெளியாகிவருகின்றன.

அவசர பயணமாக அமெரிக்கா சென்ற ஜனாதிபதி, ஹூஸ்டனில் உள்ள அவரது சகோதரரான டட்லி ராஜபக்ஷவுடன் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## இணைய வசதியுடன் யாழ். நகரில் அமெரிக்கத் தகவல் கூடம் திறப்பு



அமெரிக்கத் தகவல் கூடத்தை யாழ். நகரில் திறந்து வைத்த பின்னர் அதனைப் பார்வையிடுகின்றனர் அமெ. தூதர் மற்றும் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை.

யாழ்ப்பாணம், ஜன. 25

ஏ.டி.எஸ்.எல். இணைய வசதியுடன் கூடிய முதலாவது அமெரிக்க தகவல் கூடம் நேற்று யாழ். நகரில் நான்காம் குறுக்குத் தெருவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாலையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பற்றீசியா புட்டின்ஸ் கூடத்தை ஆரம்பித்து வைத்தார்.

இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, இந்திய துணைத் தூரகத்தின் முதல்நிலை அதிகாரி வி.மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரிக்கும் சிறுவர் துன்புறுத்தல்

கொழும்பு, ஜன.25

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக கடந்த ஆறு மாதங்களுக்குள் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுமாயின் 1929 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்கமுடியும் என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, 24 மணித்தியாலங்களும் (27 ஆம் பக்கம் பார்க்க)



3

விஷ்ணு ஆலய மிகப் பெரிய கோபுர கும்பாபிஷேகம்



14

ராகுலையும் ஏமாற்றுவார் மஹிந்த ராஜபக்ஷ



19

இருளின் கதவுகளைத் திறந்தவன்



25

இன்னிங்ஸால் வென்றது யாழ்.சென்றல்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியா மாவட்டத்தில் இடி மின்னல் காணப்படலாம். அனைத்து மாவட்டங் களில் மழைபெய்வதற்கான சாத்தியப்பாடு 20% உள்ளது

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை @ யாழ்ப்பாணம்
தை 24. 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7261.37↑
மிலங்கா(MPI) 7298.57↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4144.70Mn
பங்குகளின் அளவு(No.) 186.12Mn
வியாபாரம்(No.) 32491
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
திறி அக்றிறி 133.60
ஜப்ஜெ 65.50
தெஸ் அக்ரோ 3.40
முல்லர் 2.40
லங்கா அலுமினியம் 41.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
எம் ரி டி வோக்கர்ஸ் 68.70
சிலின்சிங் 802.00
சிலோன் கோல்ட் 610.30
ஜெ எல் மொறிசன் 1400.00
ரான்ஸ் ஏசியா 200.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# அமெ.- யாழ். தொடர்பு பாரம்பரியம் மிக்கது

யாழ்ப்பாணம், ஜன. 25

அமெரிக்கர்கள் யாழ்ப்பாணத்துடன் நீண்ட காலத் தொடர்புகளைக் கொண்டவர்கள் என்று நேற்று யாழ். நகரில் தெரிவித்தார் அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டின்ஸ்.

அமெரிக்கத் தகவல் கூடத்தை நகரில் திறந்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்க மிஷனரிகள் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே 1813ஆம் ஆண்டிலேயே இங்கு வந்திறங்கியவர்களாவர். இந்தத் தொடக்க கால அமெரிக்கர்கள் ஆங்கில மொழியைக் கற்பித்ததோடு தாமே தமிழ் மொழியைப் பயின்று முதலாவது அச்சியந்திரசாலையை இங்கே நிறுவினர். அத்துடன் முதல் தமிழ் செய்தித் தாளையும் ஆரம்பித்தனர். இலங்கையிலேயே முதன் முதலாக ஒரு மருத்துவக் கலாசாலையையும் நிறுவினர்.

அமெரிக்கர்கள் அநேகம் பேர் துயிலும் ஒரு கல்லறைத் தோட்டம் உடுவிலில் இருக்கின்றது. அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜோன் பொஸ்டர் டல்லஸின் பூட்டியாரான ஹரியட் வின்ஸ்லோவின் கல்லறையும் அவற்றில் ஒன்று. அவர்தான் உடுவில் மகளிர் கல்லூரியை நிறுவியவர். இதுவே ஆசியக் கண்டத்தில் சகல வசதிகளுடனும் நிறுவப்பட்ட முதல் வதிவிட வசதி கொண்ட பாடசாலையாகும்.

இன்று அமெரிக்கத் தகவல் கூடம் திறக்கப்படுவது நாம் யாழ். மக்களோடு கொண்டுள்ள தளராத உறவின் ஓர் அடையாளமாகும். இந்தத் தகவல் கூடம் வெறுமனே புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் அன்றாடச் செய்தித் தாள்களையும் விட மேலான ஒன்றாகும். இந்தக் கூடம் யாழ்ப்பாணத்தை இலங்கையின் இதர பிராந்தியங்களோடும் பரந்த உலகத்தோடும் இணைக்கும் ஒரு நிலையம்.

இனி காணொலி மூலமான கலந்துரையாடல்கள் (வீடியோ கொன்பரன்ஸிங்) மூலம் யாழ். மக்களும் இப்போது நியூயோர்க், லொஸ்ஏஞ்சல்ஸ், வோஷிங்டன் டி.சி. போன்ற நகரங்களில் உள்ள அமெரிக்கக் கல்விமான்களுடனும் வர்த்தகர்களுடனும் கலந்துரையாட முடியும். இலங்கை முழுவதும் உள்ள அமெரிக்கத் தகவல் கூடங்களுடனும்கூட இங்கிருந்து இணைந்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கத் தகவல் கூடமானது விரைவிலேயே உயிரூட்டமுள்ள சமூக நிலையமாக உருவாகி, இலங்கையரும் அமெரிக்கர்களும் உரையாடும் ஓர் இடத்தினைப் பெற்றுத் தரும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம். யாழ். நகரில் அமெரிக்க செயற்பாடுகளின் வலுவானதொரு பாரம்பரியத்தினைத் தொடர விழையும் அமெரிக்கத் தகவல் கூடத்தின் செயற்பாடுகளை வருங்காலத்தில் நான் தொடர்ந்தும் அவதானித்து வருவேன் - என்று தெரிவித்தார்.(சி)

**யாழ். நகரில் தூதுவர் உரை**



அமெரிக்க தகவல்கூடத்தை அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புட்டின், கல்வி கலாசார மற்றும் ஊடக விவகார இயக்குநர் ஜீவ் அன்டர்சன், சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றனர்.

## கிழக்கு மக்களுக்கு பொருள்கள் அனுப்பிவைப்பு

தென்மராட்சி,ஜன.25

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட பொருள்கள் நேற்று மாலை மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த உலருணவுப் பொருள்கள் இன்று காலை மட்டக்களப்பு அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் மூலம் அவை விநியோகிக்கபடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை அளவெட்டிப் பிரதேச செயலகத்தினால் இரண்டாம் கட்டமாகச் சேகரிக்கப்பட்ட உலருணவு அல்லாத பொருள்களும் மட்டக்களப்பு அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ-10-236)

## 'தேசத்துக்கு மகுடம்' ஆக்கங்களை ஒப்படைக்குக

யாழ்ப்பாணம்,ஜன.25

'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்காக வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களிடம் கோரப்பட்ட ஆக்கங்களை இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அதிபர் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டவாறு மாணவர்கள், ஆசிரியர்களினால் ஆக்கப்பட்ட புத்தாக்கங்கள், கண்டு பிடிப்புக் கருவிகள் என்பனவற்றையே ஒப்படைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.(ஒ-10)

# குடாநாட்டில் போட்டியிட 3 சுயேச்சைகள் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், ஜன.25

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு இதுவரை 3 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் கடந்த 20ஆம் திகதிமுதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை என தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வலி. கிழக்குப் பிரதேச சபையில் போட்டியிட ஒரு சுயேச்சைக் குழுவும் சாவகச்சேரிப் பிரதேச சபையில் போட்டியிட இரண்டு சுயேச்சைக் குழுக்களும் நேற்று மாலைவரை கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேவேளை-எந்தவொரு அரசியல் கட்சிகளும் இதுவரை வேட்பு மனுத்தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 16 பிரதேச சபைகளுக்கும் 3 நகர சபைகளுக்குமான உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## சங்காபிஷேகம்

கோப்பாய், ஜன.25

கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். மாலை 4.00 மணிக்கு பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம்வரும் நிகழ்வு இடம்பெறும். (ஒ-72)

***

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் உமாமகேஸ்வரர் சோமஸ்கந்தர் ஆலயத்தில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று காலை 8. மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஒ-72)

## மருதங்கேணி கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு சி.டி.எம்.ஏ.

யாழ்ப்பாணம், ஜன.25

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டத்துக்குட்பட்ட பத்துப் பாடசாலைகளுக்கு சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் செயலகத்தில் வைத்து தொலைபேசிகள் நேற்று அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதன் பிரகாரம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டத்துக் குட்பட்ட உடுத்துறை ம.வி, தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, அம்பன் அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலை, குடத்தனை அமெரிக்கன் மிசன் பாடசாலை, நாகர்கோயில் ம.வி., மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கே இத்தொலைபேசிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ரங்கன், வடமராட்சி கிழக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளர் சதீஸ், வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

**வல்வை வைத்தியசாலை வைர விழா**

# விருந்தினர்களும் சாதனையாளர்களும் வீதியில் கும்பங்கள் வைத்து வரவேற்பு

வடமராட்சி, ஜன.25

வல்வெட்டித்துறைப் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் வைர விழாவை முன்னிட்டு மாணவர்கள் கௌரவிப்பும் நிறுவுநர் சிலை திறப்பும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் இடம்பெற்றன.

மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரி கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தேசிய காச நோய் கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் சுனில் டி. அல்விஸ் கலந்து கொண்டு நிறுவுநரான அமரர் கு.அப்புக்குட்டியாப்பிள்ளையின் சிலையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் விருந்தினர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், பல்கலைக் கழகத்துக்கு தெரிவானவர்கள், மற்றும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் சாதனை படைத்த வீர, வீராங்கனைகள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட போது பொதுமக்கள் அவர்களை உற்சாகத்துடன் வரவேற்றனர். விருந்தினர்களையும், சாதனை படைத்தவர்களையும் வீதியின் இருமருங்கிலும் பூரண கும்பங்கள் வைத்துத் திலகமிட்டு, பன்னீர் தெளித்து, மலர்மாலை சூடி ஊர் மக்கள் வரவேற்றது சிறப்பாக அமைந்தது. வெற்றியாளர்களுக்கு வல்வெட்டித்துறை மக்களும் பரிசில்களை வழங்கினர்.

தொடர்ந்து வைர விழாவை முன்னிட்டு ஏற்கனவே நடத்தப்பட்ட இலவசக் கண் பரிசோதனையில் தகுதி பெற்ற 130 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் வாதியின் சகா படுகொலை

கொழும்பு, ஜன.25

கொழும்பு மாவட்டத்தின் பிரபல அரசியல் வாதியின் வலதுகரமாக செயற்பட்டு வந்த ரொஷான் பெரேரா அல்லது கட்டா ரொஷான் எனப்படும் நபர் மாலபே பிரதேசத்தில் வானில் வந்த இனந்தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அவரது சடலம் பன்னிப்பிட்டி, எரிச்சிவல மயானத்தில் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டதாக மகரகம பொலிஸார் தெரிவித்தனர்.

## 'ஏமாற்றுதலுக்கு முற்றுப்புள்ளி' ஜே.வி.பியின் தேர்தல் கோஷம்

கொழும்பு, ஜன. 25

'ஏமாற்றுதலுக்கு முற்றுப்புள்ளி' என்ற கருப்பொருளின் கீழ் ஜே.வி.பி. உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க உள்ளது. வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஜே.வி.பி. 25, 26, 27ஆம் திகதிகளில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும்.

- இவ்வாறு அதன் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. வேட்பு மனுப் பத்திரத்தில் ஊடகவியலாளர்களுக்கு முன்னால் வைத்து ரில்வின் சில்வா கைச்சாத்திட்டார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இத்தேர்தல், ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய அரசியல் பாதைக்கு வழி வகுக்குமென்று ஜே.வி.பி. நம்புகின்றது.

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகம் நடைபெறவில்லை. எமக்கு முல்லைத்தீவுக்குச் செல்லக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. வேட்புமனுக்கள் தாக்கல் செய்ததன் பின்னர் வடக்கு, கிழக்கு நிலைமைகள் குறித்து தேர்தல் ஆணையாளருடன் பேச்சு நடத்துவோம் - என்றார். (ஒ-சி)



## நீல் பூனே மாற்றலாகி செல்கிறார்

கொழும்பு, ஜன.25

இலங்கைக் கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே எதிர்வரும் பெப்ரவரி மத்தியில் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றலாகிச் செல்லவுள்ளார் என்று ஐ.நா. அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் நீல் பூனே பெலாரஸ், மலேஷியா, பாகிஸ்தான் போன்ற பல்வேறு நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதியாகக் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதி வதிவிடப் பிரதிநிதியாகவும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட வதிவிட இணைப்பாளராகவும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரதி வதிவிட இணைப்பாளராகவும் பல வருடங்கள் இவர் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## ஊஞ்சல் கயிறு கழுத்தை நெரித்ததில் சிறுவன் பலி

### மிருசுவிலில் பரிதாபச் சம்பவம்

தென்மராட்சி, ஜன.25

மீசாலையில் ஊஞ்சல் கயிறு கழுத்தை நெரித்து 11 வயது பாடசாலை மாணவன் பரிதாபமாக நேற்றுமுன்தினம் மரணமானார்.

அதேயிடத்தைச் சேர்ந்த மனோகரன் சிந்துஜன் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப சிறுவனை ஊஞ்சலில் வைத்து வேறு சில சிறுவர்கள் ஆட்டிய போது ஊஞ்சல் கயிறு முறுக்கேறி சிறுவனின் கழுத்தை நெரித்தது. இதனால் மூச்சுத் திணறி அந்தச் சிறுவன் மரணமானார்.

இச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அறிக்கையை ஆராய்ந்த சாவகச்சேரி நீதிவான் மா. கணேசராசா மேலதிக விசாரணை நடத்தி மேலதிக அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-ஜ-207)

## பெற்றோல் வரி குறைப்பு ஆனால் விலை குறையாது

கொழும்பு, ஜன.25

ஒரு லீற்றர் பெற்றோலுக்கான இறக்குமதி வரியை 15 ரூபாவிலிருந்து 5 ரூபாவாக அரசு குறைத்துள்ளது என பெற்றோலிய வளத்துறை அமைச்சு செயலாளர் டைடஸ் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் கடந்த 10ஆம் திகதி பெற்றோலின் விலை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் பெற்றோலின் விலை உயர்வடைந்துள்ளமையால் இலங்கையில் பெற்றோலின் விலையை அதிகரிக்குமாறு லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டும் இலங்கையில் சாதாரண பெற்றோல் விலை யையே விற்பனை விலையாகத் தொடரவும் முடிவுசெய்யப்பட்டு நிதி அமைச்சு மற்றும் பெற்றோலிய வளத்துறை அமைச்சு ஆகியன கலந்துரையாடிய பின்னரே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



சிலாபம் உடப்பு ஸ்ரீ திரௌபதிதேவி ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேகம் நேற்றுக் காலை பக்திப் பரவசத்துடன் இடம் பெற்றது. 108 அடி உயரம் கொண்ட இந்தக் கோபுரம் ரூ. 7 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டது. இலங்கையின் உயரமான வணக்க ஸ்தலங்களின் வரிசையில் இக் கோயில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. அதேவேளை, மிக உயரமான விஷ்ணு ஆலயம் இதுவாகும்.

## ஆவணங்கள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

பேருந்துக் குழுவினரால் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றை உரியவர்கள் இ.போ.ச. பருத்தித்துறை டிப்போ அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு முகாமையாளர் அறிவித்துள்ளார்.

கந்தையா அரியராணி (836024419V), மேரிமாக் கிறேற் சிலுவைதாஸ் (475482765V), அரியமணி நாகலட்சுமணன் (தற்காலிக அடையாள அட்டை) மற்றும் வைரமுத்து ஜெயச்சந்திரா (டி.எல். 009537952) சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ஒ-10)

## 23 உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக்காலம் நீடிக்கப்பட்டது

கொழும்பு, ஜன. 25

தேர்தல்கள் நடத்தப்படாத 23 உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, 16 மாநகர சபைகள், இரண்டு நகர சபைகள், ஐந்து பிரதேச சபைகள் ஆகியவற்றின் ஆட்சிக்காலம் வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி இந்த 23 உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சிக்காலம் முடிவடைய விருந்த நிலையில் மேலும் மூன்று மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் பணிப் பின் பேரில் குறித்த 23 உள்நாட்டு சபைகளின் ஆட்சிக்காலம் நீடிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டது. (ஒ-சி)

## நவாலி கதிர்காமம் ஆலயம் புனரமைப்பு

நவாலி கதிர்காம முருகன் ஆலயம் [illegible]ள்புனரமைப்பு செய்யப்படவுள்ளது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ [illegible].பத்மநாதன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

1995ஆம் ஆண்டில் இடம்பெற்ற வி[illegible]ானத்தாக்குதலில் இந்த ஆலயம் முற்றாக அழிவடைந்தது. பின்[illegible] மீள்புனரமைப்புப் பணி இடம்பெற்று ஆலயம் முழுமையாக செ[illegible]பட்டது. தற்போது ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டுள்ளது. (ஒ-302)

## அரசுடன் இணைந்த மலையகக் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டி



கொழும்பு, ஜன. 25

அரசுடன்இணைந்துகொண்ட மலையக தமிழ்க் கட்சிகள் சில எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து களமிறங்கத் தீர்மானித்துள்ளன.

மலையக மக்கள் முன்னணி நேற்றுமுன்தினம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததையடுத்து, தனது மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

சில மலையகக் கட்சிகளை இணைத்துக் கொண்டு போட்டியிடும் முயற்சியில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வி.எஸ்.இராதா கிருஷ்ணன் ஈடுபட்டுள்ளார். அவர் நேற்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் எஸ்.சதாசிவத்துடன் பேச்சு நடத்தினார்.

இதேவேளை [illegible] பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்று அரசுடன் இணைந்து கொண்ட பி.திகாம்பரம் எம்.பியின் தேசிய தொழிலாளர் முன்னணியும் தனது மயில் சின்னத்தில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.



கண்டி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தொழிலாளர் தேசிய முன்னணி தனது மயில் சின்னத் தில் தனித்துப் போட்டியிடுமென பி.திகாம்பரம் எம்.பி. நேற்றுத்தெரிவித்தார்.


இதேவேளை, பிரஜைகள் முன்னணி செயலாளர் ஜே.ஸ்ரீரங்கா எம்.பி., எம்.பிக்களான பி.திகாம்பரம், பிரபா கணேசன், வி.எஸ்.இராதா கிருஷ்ணன் ஆகியோரை இணைத்துக்கொண்டு ஒரே முன்னணியாகப் போட்டியிடவுள்ளார் என செய்தி வெளியாகி இருந்தது. இதில் உண்மை இல்லை என்றும் இது குறித்து ஸ்ரீரங்கா எம்.பி. தம்முடன் பேச்சு நடத்தவே இல்லை என்றும் இந்த எம்.பிக்கள் தெரிவிக்கின்றனர். (இ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25 ஜனவரி 2011 செய்வாய்க்கிழமை

# துர்க்கையம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்





வலி.வடக்கு, ஜன.25

வரலாற்றுப் புகழ் மிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று அதிகாலை 5 மணிக்கு யாக பூசையுடன் ஆரம்பமாகி இடம்பெற்றது.

ஆலயத்திற்கு அதிகாலையில் இருந்தே யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அடியவர்கள் வந்து சேர்ந்தனர்.

நூற்றுக்கு மேற்பட்ட அந்தணர்கள் திருமந்திரங்கள் ஓத முற்பகல் 10.30 மணிக்கு தூபிகளுக்கான கும்பாபிஷேகம் அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் இடம் பெற்றது.

திருமூர்த்திகளுக்கான கும்பாபிஷேகம், அந்தணப் பெருமக்களால் கும்பங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு திருமூர்த்திகளுக்கான மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட அடியவர்கள் கலந்துகொண்டனர். (ம-86)

## பாதுகாப்பு மண் அணை வலி.வடக்கில் அகற்றல்

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில், சேந்தான்குளம் முதல் அம்பனைச் சந்திவரை அமைக்கப்பட்டிருந்த சுமார் 5 கிலோமீற்றர் நீளமான பெரும் பாதுகாப்பு மண் அணை கனரக வாகனங்கள் மூலம் பாதுகாப்புப் படையினரால் அகற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் மக்கள் மீள குடியமர்வதற்குப் பாதுகாப்புப் படையினரால் இறுதியாக அனுமதிக்கப்பட்ட இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி சேந்தான்குளத்திலிருந்து அம்பனைச் சந்தி வரை இந்தப் பெரும் மண் அணை அமைக்கப்பட்டிருந்தது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்வதற்கும் போக்குவரத்து செய்வதற்கும் தடையாக இருந்த மண் அணையை பாதுகாப்புப் படையினர் கனரக வாகனங்கள் மூலம் அகற்றியுள்ளனர். (ம-115)

## சைவசமய அறிவுப் பரீட்சை

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலின் சைவ சமய அறிவுக்கழகம் நடாத்தும் 2011 ஆம் ஆண்டிற்கான சைவ சமய அறிவுப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

தரம் - 1 தொடக்கம் தரம் - 13 வரையிலான மாணவர்கள் மட்டத்திலும் கோலம் போடுதல், தோரணம் பின்னுதல், மாலை கட்டுதல் ஆகிய செயல் முறைப்போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலருக்கும் நடத்தப்படவுள்ளன.

அறிவுப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம்திகதியும் மார்ச் மாதம் 6 ஆம் திகதியும் செயல்முறைப் போட்டியும் எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதியும் இடம்பெறும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல. 82 நாவலர் வீதி வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் பெப்ரவரி 3ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை செயலாளர் சு.சிறீகாந்தன் கேட்டுக் கொள்கிறார். (ற)

## அஞ்சல் துறை பணிப் பகிஷ்கரிப்பு; 2ஆயிரம் அஞ்சல் பொதிகள் தேக்கம்

கொழும்பு,ஜன.25

அஞ்சல் துறை ஊழியர்கள் மேலதிக வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதையடுத்து சகல வேலைகளும் ஸ்தம்பித்துள்ளன.

அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் சுமார் 2 ஆயிரம் அஞ்சல் பொதிகள் பிரிக்கப்படாமல் குவிந்து கிடக்கின்றன என தொழிற்சங்கப் பேச்சாளர் சிந்தக பண்டா தெரிவித்தார்.

இதனால் 5லட்சம் சாதாரண கடிதங்களும், ஒரு லட்சம் வியாபாரக் கடிதங்களும்50 ஆயிரம் பதிவுக் கடிதங்களும் தேக்க நிலையில் உள்ளதாக அவர் கூறினார்.

ஏழு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நாடு முழுவதும் 15 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ரயில்கள் மூலம் நடத்தப்படும் நான்கு நடமாடும் சேவைகளும் நாடெங்குமுள்ள 600 பிரதான அஞ்சலகங்களிலும் மாவட்ட மட்டத்தில் தபால்களைப் பிரிக்கும் ஒன்பது நிலையங்களிலும் சேவை புறக்கணிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக மேலதிக வேலைக்காக 1200 பேர் சமுகமளிப்பதாகவும் போராட்டம் தொடங்கியபின் ஒருவரேனும் பணிக்கு வரவில்லையெனவும் சிந்தக பண்டார மேலும் தெரிவித்தார். (ம-5)

O/L தகமையுடன் மருத்துவத்துறையுள் புகும் வாய்ப்பு
"CERTIFIED MEDICAL ASSISTANT"(An US Curriculum)
சான்றழிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(Batch -#3)
CMA US Curriculum
மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு03)
Quality Assured
A pathway for Private Nursing
தனியார் வைத்தியசாலைகளில்,பல்தேசிய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் Nursing Staff,Admins, Medical Sales Rep,Marketing Rep போன்ற வெற்றிடங்களை உடன் நிரப்புவதற்கான 6 மாத கால கல்வி நெறி.

After O/L
6 Months Training
City Guilds Qualified
MBBS வைத்திய விரிவுரையாளர்களால் லாவா வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.
Lava Hospitals
பயிற்சியின் பின் வேலை உறுதிப்படுத்தப்பட்டது.
தகமைகள் : O/L 4 பாடங்கள் சித்தி,நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி. குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.
பதிவுக்கான இறுதித் திகதி 30.01.2011
Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
லவா வைத்தியசாலை மேல்மாடி

## விவசாயிகள் ஓய்வூதிய நிதிய நிதி நிலை ஆபத்தில்

கொழும்பு,ஜன.25

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவு ஆகியவை தற்சமயம் நடத்தப்படும் நிலையால் இவ்வருடம் ஜூன் மாதத்துக்குள் அந்த நிதியங்களின் நிதி நிலைமை முற்றாக வெறுமையாகிவிடுமென கணக்காய்வுத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தில் 2008 ஆம் ஆண்டு 140 கோடி ரூபா இருந்ததாகவும் அது 2009 ஆம் ஆண்டு 66கோடி ரூபா வரை குறைந்துள்ளதாகவும் கணக்காய்வாளர் திணைக்களம் வெளியிட்டுள்ள 2009ஆம் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு நிதியங்களும் விவசாய மற்றும் விவசாய காப்புறுதி திணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

2002ஆம் ஆண்டின் இவ்விரு நிதியங்களிலும் 21 கோடி ரூபா மேலதிக நிதி இருந்தது. எனினும் 2009 இல் அவற்றின் நிகர நட்டம் 74 கோடியாகியுள்ளது எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயிகள் ஓய்வூதியத்துக்கென சேகரிக்கப்பட்ட 21லட்சம் ரூபா இதுவரை திணைக்களத்துக்கு கொடுபடவில்லை.

திணைக்களம் சரியான கணக்கு வழக்குகளையும் நிர்வகிக்கவில்லை. அனுபவமற்ற, தகுதியற்ற நபர்கள் பணிக்குச் சேர்க்கப்பட்டுள்ளதாலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளதெனவும் அந்த அறிக்கை கூறுகின்றது. (ம-5)

பணிப்பெண் தேவை
வீட்டிலிருந்து பிள்ளையையும் தாயையும் பராமரிக்கக் கூடிய பணிப் பெண் உடனடியாகத் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0772987506

### நீங்காத நினைவில் வருடங்கள் ஏழு



அமரர் சின்னத்துரை நல்லையா (இராசு)

தோற்றம்: 03.03.1947
மறைவு: 12.02.2004
திதி: 25.01.2011

ஓடியனவே வருடங்கள் ஏழு
ஓயவில்லை உந்தன் நினைவுகள்
நாடியதுவோ உன் மனம்
நாதனடியே தஞ்சம்தான் என்று?
தேடியதுதான் எம்மனம் உம்மை
தாங்கவே முடியாது தவிக்கிறோம் இன்றும்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நெடுந்தனை,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

குடும்பத்தினர்.

(சி/575212)

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
வீரபுத்திரன் கபிலதாசன்
(கபிலன்)

மண்ணில் 27.02.1977
விண்ணில் 06.01.2010



வீட்டின் ஒளி விளக்காய் விளங்கிய செல்வமே
விண்ணகத்தே நீ சென்று ஆண்டொன்று ஆனதிங்கு
அணையாத தீபமாய் ஒளி தந்த சுடர் நீயே
அணைந்து போனது ஏன்? அலறவைத்தது ஏன்?
ஆண்டொன்று என்ன ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
அகலாது உன் நினைவு உன்னை மறவாது எம் நெஞ்சம்– உன்
ஆத்மசாந்திக்காய் ஆண்டவனைப் வேண்டுகின்றோம்.

"வளர்மதி"
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தந்தை,தாய், சகோதரர்கள்,

ஜனஜய லொத்தர்
உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 197
சீட்டிழுப்புத் திகதி 23.01.2011
வெற்றி இலக்கங்கள் 17 34 37 44
சப்பர் இலக்கம் 07
சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 12,970,160/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 104639 | ரூ. 20/= | ரூ. 2,092,780/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 9531 | ரூ. 40/= | ரூ. 381,240/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8150 | ரூ. 100/= | ரூ. 815,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 719 | ரூ. 200/= | ரூ. 143,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 190 | ரூ. 1,500/= | ரூ. 285,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 14 | ரூ. 3,000/= | ரூ. 42,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 12,970,160/= | |
| மொத்த எண்ணிக்கை | 123244 | | ரூ. 4,759,820/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13,288,100/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 338 545
Website: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஊனமுற்ற சமுதாயம் உய்வு பெறுவதற்கான வழி

வன்னி இறுதிப் போரின் போது வலது கையில் காயமுற்ற சிறுமி ஒருவர் இடது கையால் எழுதிப் பயிற்சி பெற்றுத் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதி 149 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார் என்ற செய்தி பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இந்த சின்ன வயதிலேயே அரும் பெரும் சாதனை புரிந்து சாதித்துள்ள சிறுமியும் அவரது பெற்றோரும் அண்மையில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கௌரவிக்கப்பட்டுள்ளனர். அக்கராயன் குளத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் தம்பதியினரின் புதல்வி டிலக்ஷனா என்ற சிறுமியே இவ்வாறு சாதனை புரிந்து கௌரவிக்கப்பட்டவராவார்.

அங்கவீனமுற்றவர்கள் இவ்வாறான சாதனை புரிவது என்பது புதிய விடயமல்ல. பிறவியிலேயே கண், கால், கைகளை இழந்தவர்களும்கூட அளப்பரிய சாதனைகளைப் புரிந்துள்ளார்கள் - புரிந்தும் வருகிறார்கள்.

வாழ்க்கையில் சாதனை புரிவதற்கு ஊனம் தடையல்ல என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அண்மையில் பத்திரிகைகளில் 9 வயதான அமெரிக்க சிறுவனைப் பற்றிய செய்தி வந்திருந்தது. கோடி மெக்ஸ்லேன்ட் என்ற அந்தப் பையன் இரண்டு கால்களும் இல்லாத நிலையில் இது வரை பல விளையாட்டுகளில் பங்குபற்றி பதக்கங்களை வென்றுள்ளான். சிறுவயதிலேயே சத்திர சிகிச்சை மூலம் கால்கள் அகற்றப்பட்டதால் சோர்வடையாமல் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு ஊனமுற்றவர்களுக்கான விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றிகளைக் குவித்துள்ளான் அவன். வெவ்வேறு விதமான விளையாட்டுகளில் பங்குபற்றுவதற்காக 20 செயற்கைக் கால்களை அவன் வைத்திருக்கிறான் என்று செய்திகள் கூறின. கோடியின் அடுத்த முயற்சி ஊனமுற்றவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றுப் பதக்கம் வெல்வதாம். இவற்றுக்கெல்லாம் அவனிடமுள்ள தன்னம்பிக்கை மட்டுமின்றி அவனது பெற்றோர் அவனுக்கு அளித்துவரும் ஊக்குவிப்பும் காரணம் என்று தெரியவந்துள்ளது.

சரிதான், இவ்வாறு உலகில் உடல் ஊனமுற்ற அனேகர் புரிந்துள்ள சாதனைகளுக்கும் டிலக்ஷனா புரிந்துள்ள சாதனைக்கும் ஒரு வித்தியாசம் இருப்பதையே இங்கும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இறுதிப் போரின்போது மட்டுமல்ல அதற்கு முன்னரும் கூட மோதல்களின்போது காயங்களுக்குள்ளாகி ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களிலும் பலர் தாம் ஊனமுற்ற நிலையில் மாற்று உறுப்புகளைப் பயன்படுத்தி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கக் கூடும்.

ஆனால் டிலக்ஷனாவைப் பொறுத்தவரை புலமைப் பரிசில் போட்டி பரீட்சையில் தோற்ற வேண்டும். அதில் திறமையாக எழுதி வெற்றி பெறவேண்டும் என்ற வேட்கை அவளுள் எழுந்துள்ளது. அதற்கு அவரின் பெற்றோர் ஊக்கமளித்திருக்கிறார்கள். ஒருகை - அதுவும் ஏற்கனவே பழக்கப்பட்டிருந்த கை ஊனமுற்ற நிலையில் மற்றைய கையைப் பயன்படுத்தி பயிற்சி செய்து போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கிறார்.

கொடிய போரின் போதும், குண்டுதாக்கிய போதும், தமது குடும்பம் மட்டுமின்றி சுற்றுவட்டத்தில் இருந்தவர்கள் எல்லாரும் அல்லோலகல்லோலமுற்றதைப் பார்த்து உளரீதியாகவும் பாரிய தாக்கத்துக்குள்ளாகியிருந்திருப்பார். இருந்தும் அதனால் தனக்குரிய கடமையில் தவறாமல் மன உளைச்சல்களை ஒரம்கட்டிவிட்டு பரீட்சைக்காகப் படித்திருக்கிறார். பரீட்சை எழுதியிருக்கிறார். அதன் மூலம் இந்த சின்னவயதிலும் தனது இலட்சியத்தை நிறைவேற்றியிருக்கிறார். இந்த உணர்வும் ஊக்கமும் ஊனமுற்று கிடக்கும் நம் சமூகத்துக்கு இன்று தேவையாகும்.

சாத்வீக பேராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டம் என்று 60 வருடங்களுக்குமேலாகப் போராடிய இந்தச் சமூகம் எல்லாவகையிலும் இன்று ஊனமுற்றுகிடக்கின்றது. போராடப் புறப்பட்டவர்களில் பெரும் பகுதியினர் போரில் மடிந்துவிட்டனர். பிடிபட்டவர்களும் சரணடைந்தவர்களும் விடுதலைக்காக ஏங்கித்தவிக்கின்றனர். காயமுற்றவர்களும் ஊனமுற்றவர்களும் எதிர்காலத்தில் என்ன செய்வதென்று அறியாமல் தயங்கிநிற்கின்றனர்.

இவற்றுக்கிடையில் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்கள் நாட்டில் இடம்பெறும் நடப்புகள் பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களில் ஒரு பகுதியினர் அங்கிருந்தே அரசியல் நடத்த முற்படுகின்றனர். இங்கு அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களோவெனில் பேச்சுவார்த்தையென்றும் இணக்கப்பாடு என்றும் வெவ்வேறு வழிகளைக் காட்டி நிற்கின்றனர். இவற்றுக்கிடையில் ஆட்சியாளர்களோ என்றால் பாம்புக்கு தலையும் மீனுக்குவாலும் காட்டுகின்ற விலாங்கைப் போன்று முக்கிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் இழுத்தடிக்கின்றனர். இந்த நிலையில்தான் திரிசங்கு சுவர்க்கத்தில் பொது மக்கள் நின்று தவிக்கிறார்கள். அதனால்தான் டிலக்ஷனாவின் முன் உதாரணம் நமக்கு வழிகாட்டுகின்றது என்கின்றோம்.

அரசாங்கமோ, அரசியல்வாதிகளோ, ஏனைய அமைப்புகளோ உதவுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பது இரண்டாம் பட்சம். அந்த உதவி வருகின்றதோ இல்லையோ நமக்கு முடிந்த அளவில் நம்மை நிலைப்படுத்திக் கொள்ள முயல்வது நல்லது. இருக்கும் வசதிகளையும் வளங்களையும் பயன்படுத்திக் கொண்டு முன்னேற முயலவேண்டும். அரசும் அரசு சார்ந்த அமைப்புகளும் உதவ வேண்டியது அவர்களின் கடமை. அவைகளை வற்புறுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக மக்கள் சோம்பேறிகளாகவும் செயலூக்கம் அற்றவர்களாகவும் இருந்துவிடலாகாது. நம்முன் இருக்கும் சவால்களை அவைகளுக்கு ஏற்ற முறையில் எதிர்கொள்வதே சரி. அதனையே டிலக்ஷனாவின் உதாரணம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஊனமுற்றுக்கிடக்கும் தமிழ் சமூகம் மீள் எழுச்சிபெறுவதற்கு இச்சிறுமிக்கிருக்கும் ஊக்கமும் தன்னம்பிக்கையும் அவசியம் தேவைப்படுகின்றது.

### மட்டு, அம்பாறை தவிர்ந்த தமிழ் மாவட்டங்களில்

# தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு வேட்பாளர்களை நிறுத்துவதற்கு முடிவு

கொழும்பு, ஜன.25

தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு மட்டக்களப்பு, அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் போட்டியிடவுள்ளது.

அந்தக் கூட்டமைப்பின் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாததால், நவசமசமாஜக் கட்சியின் மேசை சின்னத்தில் போட்டியிடும் என்றும் அவர் கூறினார்.

திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இன்றும் - வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நாளையும் - யாழ்.மாவட்டத்தில் 27 ஆம் திகதியும் - வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

(ஐ)

### புங்குடுதீவுக் கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட

# ஆசிரியையின் மரணத்தில் மர்மம் மேலதிக விசாரணைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.25

புங்குடுதீவு முனைப்புலம் என்னும் இடத்தில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட ஆசிரியையின் மரணத்தில் மர்மம் இருப்பதால் மேலதிக விசாரணை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகாதேவா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் காணாமற்போயிருந்த நல்லூர் ஆனந்தா வித்தியாசாலை ஆசிரியையான துரைராஜசிங்கம் உத்தமகுமாரி (வயது 40) என்பவரின் சடலம் கடந்த 18 ஆம் திகதி புங்குடுதீவில் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பிரசன்னமான இறந்தவரின் சகோதரிகள், அவரின் உடைகளை வைத்து சடலத்தை அடையாளம் காட்டினர்.

அவர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகாதேவா சடலத்தை புதைக்குமாறும் உத்தரவிட்டார்.

மரணத்தில் மர்மம் இருப்பதால் தொடர்ந்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ஐ)

# குறிகாட்டுவான் புதிய படகு வியாழன் வரும்

நெடுந்தீவு, ஜன.25

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பயணிகள் சேவையில் இணைந்து கொள்வதற்கென புதிதாகக் கட்டப்பட்ட மோட்டார் இயந்திரப் படகு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டுள்ளது.

இந்தப் படகு நாளை மறுதினம் ஊர்காவற்றுறைக்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தப் படகு நெடுந்தீவு மக்களிடம் கையளிக்கப்படும் என்று நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நெடுந்தீவு மக்களிடம் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

(த-111)

# புங்குடுதீவு விபத்து; சாரதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.25

புங்குடுதீவு மடத்து வெளியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பாக வாகனத்தின் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொருள்களுடன் சென்ற நிறுவனம் ஒன்றின் 'படி' வாகனம் அதிவேகமாகச் சென்றபோது எதிரே வந்த வாகனத்துடன் மோதியது என்றும் இச்சம்பவத்தில் நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தை சேர்ந்த பாலசிங்கம் விஜயதீபன் என்பவர் மரணமடைந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகாதேவா முன் இடம்பெற்றபோது சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டது.

(ஐ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அலுவலகம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.25

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் அலுவலகத்தின் திறப்பை முன்னாள் அதிபர் மலர் சின்னையா கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளையிடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

கடந்த பல மாதங்களாக அதிபர் அலுவலகத் திறப்பைக் கையளிப்பதில் இருந்துவந்த இழுபறி நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

கல்வி அதிகாரிகள் முன்னிலையில் நேற்றுத் திறப்பு கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கணக்காளர் எஸ்.கமலரூபன், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் அதிபர் அலுவலகத்தில் இருந்த பொருள்கள் கணக்கிடப்பட்டே திறப்பு கையளிக்கப்பட்டது.

கலாசாலை அதிபரிடம் அலுவலகத் திறப்பை கையளிக்கும்படி கல்வி அமைச்சினால் முன்னாள் அதிபர் மலர் சின்னையாவுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலக்கெடு முடிவடைந்த நிலையில் இரண்டு மாதங்களின் பின்னரே திறப்பு கையளிக்கப்பட்டுள்ளது.

(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் நிற்க இளைஞர் தயக்கம்

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்.குடாநாட்டில் நிலவும் அச்சசூழ்நிலை காரணமாக எதிர் வரும் உள்ளூராட்சித் தேர்த லில் போட்டியிடுவதற்கு இளை ஞர்கள் தயக்கம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசினால் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலை யில் யாழ்ப்பாணத்தில் வன் முறைச் சம்பவங்களும் அதி கரித்து வருகின்றன. கொலை, கடத்தல், மிரட்டல் சம்பவங் கள் அண்மைக்காலத்தில் அதி களவில் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்வங்களில் பெரும் பாலும் இளைஞர், யுவதிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள் ளனர்.

இந்த அச்ச சூழ்நிலை காரண மாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர்கள் பின்னடிப்பதாகக் கூறப்படுகின்றது.

தாம் தேர்தலில் போட்டியிடு வதற்குப் பின்னடிப்பதற்கு

**குடாநாட்டில் தற்போது நிலவும் அச்ச சூழ்நிலை, வன்முறைச் சம்பவம் ஆகியவையே இளைஞர்களின் பின்னடிப்புக்குக் காரணம்**

யாழ்ப்பாணத்தில் தற்போது நிகழும் வன்செயல்களே கார ணம் எனப் பல இளைஞர்கள் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறியுள்ளதாக அறிய வருகி றது.

இதேவேளை யாழ்.மாவட் டத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடத் தகுதியானவர் களைத் தெரிவு செய்வதில் இரு பிரதான கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஈழமக் கள் ஜனநாயகக் கட்சியும் ஈடு பட்டுள்ள அதேநேரம் தொகுதி அமைப்பாளர்கள், கட்சி ஆதர வாளர்களை நாடிப் பட்டியல் தயாரிப்பதில் ஈடுபட்டு வரு கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்சார்பில் மானிப்பாய்த் தொகு தியிலுள்ள வலி.தென்மேற்கு, வலிதெற்கு ஆகிய இரு பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட இருக்கும் வேட்பாளர்களின் பட்டியல்த் தொகுதி அமைப் பாளரினால் தயாரிக்கப்பட்டு யாழ்.மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை மைக் காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

மானிப்பாய்த் தொகுதி யிலுள்ள வலி.தென்மேற்கு, வலி.தெற்கு ஆகிய இரு பிர தேச சபைகளுக்கும் 16 உறுப் பினர்கள் வீதம் 32 உறுப் பினர்கள் நடைபெற இருக்கும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப் பட விருக்கிறார்கள்.

இரு சபைகளுக்குமான தேர் தலில் போட்டியிடத் தகுதியான வர்களைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டு வந்த மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளர் கே.சௌரி காந்தன் 57 கிராமங்களையும், பிரதிநிதிப்படுத்தக்கூடிய வகை யில் மீன்பிடி, விவசாயம் உட் பட சகல துறைசார்ந்த 42 உறுப் பினர்களின் பட்டியலைத் தயா ரித்துக் கட்சிக் காரியாலயத் தில் ஒப்படைத்துள்ளார்.

இதேபோன்று ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் நட வடிக்கையில் மும்முரமாக ஈடு பட்டுள்ளது. (த-115)

# அராலி முன்பள்ளி புனரமைப்பு

மானிப்பாய், ஜன.25
அராலி சரஸ்வதி முன்பள்ளி கட்டடம் 16 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கிராம அலுவலர் ந.விஜய வேல் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டுநாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பா, பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (த-302)

# வீதியில் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

வண்ணை, ஜன.25
யாழ். வேம்படி வீதியில் திருக்குடும்பக் கன்னியர் மடம் வித்தியாலய எதிரில் வீதி யோரங்களில் குப்பை கூளங் கள் குவிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதி வீடுகளில் வெட் டிக் கழித்த மரங்கள், தென்னை ஓலைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் என்பன வீதியோரத்தில் போடப்பட் டுள்ளதால் வித்தியாலய மாணவி கள் பெரும் சிரமத்துக்கு முகம் கொடுக்க நேர்வதாகத் தெரி விக்கப்படுகிறது.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகள் வீதிகளில் கட்டாக் காலிகளால் பரவப்படுவதால் போக்குவரத்து செய்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் விசனம் தெரி விக்கப்படுகிறது.

உரியவர்கள் இதற்கான நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்படுகின்றது. (ம-160)

செழிப்பு...



ஆபத்து: காரைநகர் பிரதேசத்தில் இம்முறை நெற்செய்கை நல்லவிளைச்சலைத் தந்தபோதிலும் கட்டாக்காலி கால்நடைகள் அவற்றினை வகைதொகை இன்றி அழித்து வருவதாகக் கூறப்படுகின்றது.
இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். (250)

# மீள்குடியேறிய மக்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன.25
வலி. வடக்கில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதி களில் உள்ள பற்றைகளைத் துப் புரவு செய்வதற்கு டனிஷ் அகதி கள் பேரவை 250 குடும்பங் களுக்கு உபகரணங்களை வழங்கியுள்ளது.

வலி. வடக்குப் பிரதேச செயல கத்தில் வைத்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் இந்த உபகர ணங்கள் கையளிக்கப்பட்டன.

இளவாலை வடக்கு இளவாலை வட மேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்த் தப்பட்ட குடும்பங்களுக்கே இந்த உபகரணங்கள் கையளிக் கப்பட்டுள்ளன. மண்வெட்டி, கத்தி, கோடரி, கடகம் போன்ற வையே வழங்கப்பட்டுள்ளன. (த-9)

## வட்டுக்கோட்டை கலட்டிக்கு

# குழாய் மூலம் குடிதண்ணீர் இன்று மதிப்பீட்டுப் பணி

வட்டுக்கோட்டை, ஜன.25
வட்டுக்கோட்டை கலட்டி பிரதேசத்துக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகிறது.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பொறுப் பதிகாரி எஸ்.ரவீந்திரா தலை மையில் இன்று மதிப்பீட்டுப் பணி இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை - பத்திர காளி அம்மன் ஆலயத்துக்கு முன்னால் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் நிலையத்திலிருந்து வட்டுக்கோட்டை கலட்டிப் பிரதேசத்துக்கும் வட்டு பொதுச் சந்தைப் பகுதிக்கும் முதற்கட்ட மாக குடிதண்ணீர் குழாய் மூலம் வழங்குவதற்கான அனுமதியை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பா.தவேந் திரகுமார் வழங்கியதை அடுத்தே மதிப்பீட்டுப் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதன் மூலம் நீண்டகாலத் துக்கு பின்னர் வட்டு. கலட்டி பகுதியைச் சேர்ந்த 500 குடும்பங் கள் நன்மை அடையவுள்ளன.

இதேவேளை கலட்டிப் பகு தியில் பொதுத் தண்ணீர்த் தாங்கி அமைப்பதற்காகத் தனது சொந்த நிலத்தை வழங்க வலி.மேற்கு அரச அலுவலர் ரி.எஸ். சிறிகாந் தன் முன் வந்துள்ளார். (த-302)

# நெற் பயிரை அழிக்கும் கட்டாக்காலிகள்

கொடிகாமம், ஜன.25
வரணிப் பிரதேசத்தில் இடைக்குறிச்சி மேற்கு, தம் பளை வயல் வெளியில் கட் டாக்காலி கால்நடைகள் நெற் பயிர்களை சேதம் விளைவித்து வருவதாக நெல்வயல் உரிமை யாளர்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

கட்டாக்காலிகள் தினமும் நெற்பயிர்களை மேய்ந்து சேதம் விளைவித்து வருகின் றன. இவை இரவு வேளை களில் நெல்வயல்களில் சேதம் விளைவிப்பதுடன் பகல் நேரங் களில் இடைக்குறிச்சி நியாப் மண்டப அயலில் கூட்டமாகப் படுத்து உறங்குவதாகவும் தெரி விக்கப்படுகிறது.

பயிர்ச் செய்கை சார்பான அமைப்புக்கள் இவற்றை கட் டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றார்.

பெரும் கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் விவ சாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இவ் வாறான நிலையால் பெரும் நஷ்டம் ஏற்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ம-122)

# வலி. மேற்கு பிரதேச சபைக்கு விரைவில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஜன.25
வலி.மேற்கு பிரதேச சபைக்கு பல நோக்குத் திட்டம் கொண்ட இரு மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி உட்கட்டு மான அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் 43 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடம் அமைப் பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் விரைவில் இடம் பெறும் எனப் பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (த-302)

# மேலும் 5 இடங்களில் சுங்க அலுவலகங்கள்

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்மாவட்டத்தில் மேலும் நான்கு இடங்களிலும் மன் னார் மாவட்டத்திலும் சுங்கத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் விரைவில் திறந்து வைக்கப்பட வுள்ளதாக சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளர் பி.யோகநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பருத் தித்துறை, ஊர்காவற்றுறை, காரைநகர், காங்கேசன்றுறை ஆகிய இடங்களிலும் மன்னாரி லும் இவற்றை விரைவில் திறந்துவைப்பதற்கான ஏற் பாடுகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக அவர் மேலும் கூறி னார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு -

கடல் வழியாகப் பொருள் கள் எடுத்து வருவது, தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்துவது போன்ற சட்ட விரோத செயற்பாடுகளைக் கவ னிப்பதற்கும், கடல்வழியாகக் கொண்டுவரப்படும் பொருள் களைச் சோதனைக்குட்படுத் துவதற்கும் இந்தச் சுங்க அலு வலகங் கள் அமைக்கப்படுகின் றன.

வடபகுதியில் சுங்கத் திணைக் களத்தின் செயற்பாடுகள் நீண்ட இடைவெளியின் பின்னர் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடுகள் படிப் படியாக மேலும் விஸ்தரிக்கப் படும். 1837 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட சுங்கத்திணைக் களத்தின் பணிகள் தற்போது நாடு முழுவதும் சிறப்பாக இடம்பெறுகின்றன - என்றார்.

இந்த ஐந்து அலுவலகங் களுக்கும் கட்டடங்களை அமைப் பதற்கான ஏற்பாடுகளை திணைக் களம் இப்போது மேற்கொண் டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாற்றுச் சின்னங்களை அரசு நிச்சயம் பேணிப் பாதுகாக்கும்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சின்னங்களை எதிர்காலச் சந்ததிக்காக அரசு பேணிப் பாதுகாக்கும். அதற்கான நடவடிக்கைகளைத் தொல்லியல் திணைக்களம் இப்போது மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜெகத் பாலசூரிய.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் யாழ். கிறீன்வுகிறாஸ் ஹோட்டலில், ''யாழ்ப்பாணத்தில் உள்ள மரபுரிமை மையங்களின் மீள் புனரமைப்பும் முகாமைத்துவமும்'' என்னும் பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள வடபிராந்தியக் கலாசாரமானது பெருமளவுக்கு தென்னிந்திய செல்வாக்குக்கு உட்பட்டதாகத் திகழ்கின்றது. யாழ்ப்பாணம் இடைக்கால வரலாற்றில் பிரதேச நிர்வாக மையமாக இருந்ததுடன் முத்து, மீன், யானை, துணிவகை போன்ற பொருள்களின் வர்த்தக மையமாகவும் திகழ்ந்தது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஊர்காவற்றுறைத் துறைமுகம் வர்த்தகச் செயற்பாடுகளின் மையநிலையமாக திகழ்ந்திருக்கலாம். இதற்கு நயினாதீவில் கண்டெடுக்கப்பட்ட 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகா பராக்கிரமபாகுவினுடைய தமிழ்க் கல்வெட்டில் சமகாலத்தில் அங்கு ஏற்படுத்தப்பட்ட துறைமுக வசதிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை சிறந்த சான்றாகும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலப் பகுதியில் வடக்கில் அவர்களின் வர்த்தகம், நிர்வாகம் மற்றும் சமயச் செயற்பாடுகளுக்கெல்லாம் யாழ்ப்பாணம் ஒரு மத்திய நிலையமாகவும் திகழ்ந்தது.

**இலங்கையில் நீண்ட வரலாற்றை கொண்டுள்ள வடபிராந்தியக் கலாசாரமானது பெருமளவுக்கு தென்னிந்திய செல்வாக்குக்கு உட்பட்டதாகத் திகழ்கின்றது.**

ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலத்துக்குரிய தொல்பொருள் சின்னங்கள் இக்காலத்தில் அழிக்கப்பட்டன.

இத்தகைய தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பது இலங்கை அரசின் கடமை. அவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பாதுகாப்பதற்கும், புனரமைப்பதற்கும் தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றமை பாராட்டப்படக்கூடியது. இவற்றைப் பாதுகாப்பதற்கும் வெளிக்கொணர்வதற்கும் இப்போது திட்டமிட்டுள்ளோம். தொல்லியல் திணைக்களத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், மாநகர சபை, நகரசபை, பாதுகாப்புப் படைகள் என்பன ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன - என்றார்.



இந்த நிகழ்வில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசநாயக்க, வடபிராந்திய தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் ஜெயந்த விஜயவர்த்தன, யாழ். நகரத் தளபதி கேணல் விஜய சுந்தர, யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறைப் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(த-7-319)

# முள்ளிவெளி மயானத்தை அபிவிருத்தி செய்க

கொடிகாமம், ஜன.25

வரணி வடக்கு, முள்ளிவெளிப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் பொதுமயானம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என கோரப்படுகின்றது.

இந்த மயானம் பற்றைகள் வளர்ந்த காடாக தற்சமயம் காட்சியளிப்பதனால் - சடலங்களைத் தகனம் செய்வதில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

வரணிப் பகுதியில் வடவரணி, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி போன்ற கிராமங்களில் உள்ளோர் சடலங்களை தகனம் செய்வதற்கு இந்த மயானம் ஒன்றே பயன்படுத்தப்படுகின்றது.

இம் மயானம் துப்பரவு செய்யப்பட்டு உரிய முறையில் மக்கள் பயன்படுத்த சாவகச்சேரிப் பிரதேச சபை அல்லது சாவகச்சேரி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டும் எனப்பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(ம-122)

# வீதி அபிவிருத்தித் திணைக்களம் நாவலர் வீதியில்

யாழ்ப்பாணம்,ஜன.25

திருகோணமலையில் இயங்கி வந்த வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் அலுவலகம் நேற்றுத் திங்கள்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

நாவலர் வீதி, இலக்கம் 153 என்ற முகவரியில் அந்த அலுவலகம் இயங்க ஆரம்பித்துள்ளது.

வைபவரீதியாகப் பால் காய்ச்சி அலுவலகப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த அலுவலகத்தில் துறை சார்ந்த மூன்று பொறியியலாளர்கள் உட்பட 30 பேர் பணியாற்றுகின்றனர்.



இந்த நிகழ்வின் போது வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம் தெரிவிக்கையில் -

வடமாகாணத்துக்கான எமது அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமையால் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை இலகுவாக முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.

மிக விரைவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்த வகையில் 2300 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் 100 கிலோமீற்றர் நீளமான மாகாண சபை வீதிகளும், 24000 மில்லியன் ரூபா நிதியில் யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டலில் வீதிஅபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன- என்றார்.

(த-14)

# ஆஸ்பத்திரிகளுக்கு காலாண்டுக்கான மருந்து வகைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கான முதலாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகளில் ஒரு தொகுதி யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து சுகாதார அமைச்சின் 4 லொறிகளில் இந்த மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் அவற்றை வைத்தியசாலைக்கு விநியோகிக்கும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த விநியோகப் பணிகள் 8 நாள்கள் நடைபெறும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(த-26)

# எழுதுமட்டுவாழில் மீள்குடியமர்வு

தென்மராட்சி,ஜன.25

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீளக்குடியேறுவதற்கு வளவுகள் துப்புரவு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்பகுதியில் வெடி பொருள்கள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாக வெடி பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்ட 'ஹலோரஸ்ற்' நிறுவனத்தினர் உரிய சான்றிதழ் வழங்கியதையடுத்து மக்கள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் காணிகளைத் துப்புரவு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பிரிவில் உள்ள 300 இற்கு மேற்பட்ட வீடுகள் இருந்ததாகவும் தற்போது ஒரு வீடு கூட இல்லையெனவும், சோலைகளாகக் காணப்பட்ட காணிகள் வெற்றுநிலமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் இருந்த 25 இற்கு மேற்பட்ட இந்து ஆலயங்களும் கூரைகள் அற்ற நிலையிலும், சேதமடைந்நிலையிலும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

துப்புரவாக்கப்படும் காணிகளில் கொட்டில்கள் அமைப்பதிலும் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்மராட்சி கிழக்கில் உள்ள எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், கெற்பேலிப் பிரிவின் ஒரு பகுதி ஆகியவற்றில் வெடி பொருள்கள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாகக் கடந்த வெள்ளிக்கிழமை "ஹலோரஸ்ட்" நிறுவனத்தினரால் சான்றிதழ் கடிதம் வழங்கப்பட்டுள்ளதை அறிந்த மக்கள் மறுநாள் காலையிலேயே தமது இருப்பிடங்களை துப்புரவு செய்வதற்கான ஆயத்தங்களுடன் சென்றதைக்காண முடிந்தது.

இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் 2000 ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி இடம் பெயர்ந்து பத்து வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-207)

# குடியமர்வதற்குத் தயாராகும் அரியாலை கிழக்கு மக்கள்

கொழும்புத்துறை,ஜன.25

அரியாலை கிழக்குப் பகுதியில் மக்கள் குடியேற படையினர் அனுமதித்ததைத் தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினர் பாவித்துவந்த ஒரு சில வீடுகளைத் தவிர ஏனைய வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் காணிகளின் எல்லைகளைக் கண்டு பிடிப்பது சிரமமாக உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தென்னை மரங்கள் நிறைந்து காணப்பட்ட இப்பகுதியில் அவற்றைக் காண்பது அரிதாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை

தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான உதவிகளை வழங்கும் பொருட்டு தொண்டு நிறுவனங்கள் பதிவுகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் 200 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25 ஜனவரி 2011 செவ்வாய்க்கிழமை

# மன்னாரில் கழுதைகளின் தொல்லையால் மக்கள் சிரமம்

மன்னார்,ஜன.25

மன்னார் நகரில் கட்டாக்காலி நாய் மற்றும் கழுதைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

அவற்றின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்காததன் காரணமாக விபத்துக்களும் நகர சீர்கேடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்களும், சமூக ஆர்வலர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகரில் கட்டாக்காலி நாய்களும், கழுதைகளும் பல்கிப்பெருகிய நிலையில் காணப்படுகின்றன.

தற்போது மன்னாரில் வீதி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கட்டாக்காலி கழுதைகள் வீதிகளில் கண்டபடி ஓடித்திரிகின்றன. இதனால் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதில் நெருக்கடி ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் பல வாகனங்களும் கழுதையின் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் அரச பஸ்தரிப்பிடத்தில் உள்ள பயணிகள் தங்குமிடத்தை கழுதையும், நாயும் நாசப்படுத்துகின்றன.

இதனால் பஸ்தரிப்பிடத்துக்கு வரும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் இந்தப் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களும் வாகன சாரதிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம)

**மீண்டும் ஓர் அவலம்...**



*மனம் வேகும் காட்சி: கிளிநொச்சி நெல் வயல்களிலுள்ள பயிர்கள் கதிர்கள் வெளிவந்த நிலையில் நோயினால் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.*

# சிறு வீதிகள் மோசமான நிலையில்

பூநகரி,ஜன.25

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி செல்வபுரம் கிராமத்திலுள்ள சிறுவீதிகள் மோசமான நிலையிலுள்ளதால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தச் சிறுவீதிகளில் சுமார் நான்கு கிலோ மீற்றர் நீளம் கொண்டவையே மிகவும் மோசமான நிலையில் குண்டும் குழியுமாகவும் சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றன.

அத்துடன் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக இந்த வீதிகள் வெள்ளநீர் சூழ்ந்தும் காணப்படுகின்றன.

இதன் காரணமாக இந்தக் கிராமத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காக பரந்தன் - பூநகரி வீதிக்கு வருபவர்களும், ஏனைய அயல் கிராமங்களுக்கு இந்த வீதியால் செல்பவர்களும், செல்லையாதீவு அ.த.க. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் மிகுந்த சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதைவிட இந்த வீதிகளைப் பயன்படுத்தும் முதியவர்கள், நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் அனுபவிக்கும் இடர்கள் சொல்லில் எழுத முடியாதவை. தினமும் ஒருவராவது இந்த வீதிகளின் மேடுபள்ளங்களில் வீழ்ந்து எழும்பிச் செல்வதை அவதானிக்கமுடிகின்றது.

ஏற்கனவே பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து மறுஜென்மம் பெற்று மீள்குடியமர்ந்த இந்த மக்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறு துன்பங்களை அனுபவித்து வருவதாக இப்பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

(406)

# சனசமூக நிலையம் அமைக்க வலைப்பாடு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, வலைப்பாடு கிராம மக்களுக்கென சனசமூக நிலையம் ஒன்றை அமைத்து வழங்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இக்கிராம மக்களின் பிரதான தொழில் மீன்பிடி. இக்கிராம மக்களுக்கெனச் சனசமூக நிலையம் இன்மையால் நாளாந்த உலக விடயங்களை அறியமுடியாத நிலையில் இவர்கள் காணப்படுகின்றனர். மற்றும் பொன்னான நேரங்களை வீணாக வீதிகளில் இக்கிராம மக்கள் கழிக்கின்ற நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு சமூகப்பிரச்சினைகளும் வீண்வம்புகளும் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இங்கு சனசமூக நிலையம் அமைந்தால் வலைப்பாடு அ.த.க.பாடசாலை மாணவர்களும், கிராம இளைஞர், யுவதிகளும் ஏனையோரும் பயன்பெற்று கிராமம் படித்தோர்கள் பலரை உருவாக்க உதவும்.

எனவே இங்கு சனசமூக நிலையம் ஒன்றை அமைத்து நாளாந்த, வாராந்த, மாதாந்த பத்திரிகைகளை வழங்கி கிராமம் வளர உதவுமாறு இக்கிராம மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

(க-406)

# ஆசிரியர்கள் காட்டும் அக்கறைக்கு கற்சிலைமடு பெற்றோர் பாராட்டு

முல்லைத்தீவு,ஜன.25

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையின் அதிபரும், ஆசிரியர்களும் பெற்றோர்களை அழைத்து அவர்களின் பிள்ளைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாகப் பிள்ளைகளின் கல்வி நிலை, அறிவாற்றல், கல்வியில் அக்கறை, இவர்களின் மனம் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. மேலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் குறைபாடுகளை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் தொடர்பாகவும், பாடசாலை வளர்ச்சிக்கு அவர்களின் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டன.

ஆசிரியர்களின் இச்செயற்பாடுகளைப் பெற்றோர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். அத்துடன் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதிவசதிகள் எதுவுமில்லாத நிலையில் வகுப்பறைகளிலும், விறாந்தைகளிலும் தங்கியுள்ளனர். இந்த அவல நிலையிலும் ஆசிரியர்கள் மிகவும் ஆர்வத்துடன் செயற்படுவது இக்கிராம மக்களால் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது.

(க-500)

# இடையில் இறக்கிச் செல்லும் பேருந்து

முல்லைத்தீவு,ஜன.25

முத்துஐயன்கட்டிலிருந்து வவுனியா செல்லும் தனியார் பேருந்துகள் திரும்பி வரும் போது முத்துஐயன்கட்டு செல்லாது கற்சிலைமடுச்சந்தியில் பயணிகளை இறக்கிவிட்டுச் செல்வதால் மக்களுக்குப் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக மக்கள் முறையிடுகின்றனர்.

முத்துஐயன்கட்டுக்கும் வவுனியாவுக்கும் இடையில் நடைபெறும் தனியார் பேருந்துகள் சிலவே இவ்வாறு மனிதாபிமான மில்லாது செயற்படுவதாகத் தெரிய வருகின்றது.

காலை வேளையில் முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு, பேராறு, கெருடமடுவரை சென்று பயணிகளை ஏற்றிக் கொண்டு வுவுனியா செல்லும் தனியார் பேருந்துகள் மாலையில் வவுனியாவிலிருந்து திரும்பி வரும்போது கற்சிலைமடுச் சந்தியில் இறக்கி விட்டுச் செல்கின்றன.

இதனால் காலையில் இந்தப் பேருந்துகளில் பயணம் செய்த மக்கள் மாலையில் ஆறு கிலோ மீற்றர் வரை நடந்தும் அதிக பணம் கொடுத்து வாடகை வாகனங்களில் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல வேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

குழந்தைகளுடனும் வவுனியாவில் கொள்வனவு செய்த பொருள்களுடனும் திரும்பி வருவோர் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் மாலை வேளைகளில் பேருந்துகள் சிலவேளை தாமதமாக வரும்போது இருட்டி விடுவதனால் பெரும் அலவங்களை இந்த மக்கள் எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாகப் பேருந்து நடத்துநருடனோ அல்லது ஓட்டுனருடனோ மக்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்த போதிலும் பயன் எதுவும் கிட்டவில்லை.

எனவே இந்த அப்பாவிக் கிராம மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு வவுனியாவிலிருந்து திரும்பி வரும் பேருந்துகளைக் கெருடமடுவரை தொடர்வதற்கு உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் அவசர வேண்டுகோள் விடுகின்றனர்.

(க-500)

# முல்லை மாவட்ட பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை

(நேற்றைய தொடர்ச்சி)

யுத்த சூழ்நிலை தோன்றியது முதல் மின்சாரம் இல்லாமையால் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை மெல்ல மெல்லச் செயலிழந்து வந்தது. அக்காலப் பகுதியில் எரிபொருள் அல்லது உபகரணங்களைத் தென்பகுதியில் இருந்து கொண்டு வருவதற்குக் கடுமையான தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் விறகு வெட்டுபவர் தயாரிப்புகளில் ஈடுபடுவோர், பணியாளர்கள் எனப்பல தரப்பட்டவர்களுக்கும் அவர்களுக்கான சம்பளத்தைக் கொடுக்க முடியாத நிலையில் இத்தொழிற்சாலை பின்னடைவைச் சந்தித்தது. மீண்டும் மீண்டும் யுத்தமேகம் சூழ்ந்ததால் அதில் பணியாற்றிய பணியாளர்கள் பலர் வேலை இல்லாததால் விலகத் தொடங்கினர். ஆனால் அக்காலப் பகுதியில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு அவர்களின் சம்பளம் இன்னும் வழங்கப்படாமலேயே உள்ளது. இத்தொழிற்சாலையை நம்பியிருந்த குடும்பங்கள் நிர்கதியாகின. அவர்களை வறுமை நிலை வாட்ட வேறு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். காலப் போக்கில் எல்லா வேலைத் திட்டகளும் கைவிடப்பட்டன. அதனை மீண்டும் இயக்குவதற்கு முயற்ச்சித்த போதும் அது கைகூடவில்லை. இ[illegible] மக்கள் மட்பாண்[illegible] பெறுவதற்கு மீண்டும் தென் பகுதியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது. யுத்தம் தீவிரமடைந்து இடப்பெயர்வு ஏற்பட்டதால் கட்டடங்கள் அங்குள்ள இயந்திரங்கள் தளபாடங்கள் எல்லாம் அழிவடைந்தன.

இன்றுகூட அதனை மீளவும் செற்படுத்தவும் கட்டடங்களை புனரமைக்கவும் முயற்சிக்காத நிலையே காணப்படுகின்றது. இத்தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைப்பதால் 1,000க்கும் மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்பினைப் பெறுவதோடு இம்மாவட்ட மக்களுக்கான ஓடு, செங்கற்கள் மற்றும் மட்பாண்டங்களை இலகுவாக [illegible] என்பதில் ஐயமில்லை.

மீண்டும் இத்தொழிற்சாலை இயங்கினால் முல்லை மாவட்டத்தில் படித்த இளைஞர், யுவதிகள் உட்பட அநேகமானவர்கள் இத்தொழிற்சாலை மூலம் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதுடன் அக்குடும்பங்களின் வறுமை நிலையும் இல்லாது மிகவும் சிறப்பாக வாழ வழி வகுக்கும் அத்துடன் அந்த இடத்தில் நடைபெற்று வந்த வர்த்தகர்கள், வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ளவும் சந்தை, சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற கிராம அமைப்புக்கள் மீண்டும் இயங்கி அவற்றின் செயற்பாடுகள் பெருமளவு மக்களைச் சென்றடையும் ஏது நிலை உருவாகும். இம்மாவட்டத்தில் ஓடு, செங்கற்கள் என்பனவற்றை மக்கள் இலகுவாகப் பெறுவதற்கும் ஏதுவாக அமைந்திருக்கும்.

இத்தொழிற்சாலை மீண்டும் நவீன வசதிகளுடன் இயங்குமா? இயங்க வைக்க முடியுமா? மக்கள் பயனடைவார்களா? அரசானது இத்தொழிற்சாலை மீண்டும் தமது வழமை நிலைக்கு திருப்பி மக்களுக்கு தேவையானவற்றை பெறுவதற்கு உதவிகள் வழங்குமா? என்பதனை பொறுந்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சிலையூர் தனம்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிகள் வளர்க்க உதவி

கிளிநொச்சி, ஜன.25

கிளிநொச்சி, கண்டாவளை, ஊரியான் ஆகிய பிரதேசங்களில் கோழி வளர்ப்பைத் தெரிவு செய்துள்ள பயனாளிகளுக்கு டென்மார்க் அகதிகள் பேரவையினால் (டி.ஆர்.சி) ஒரு தொகுதிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளைக் கிராமத்திலும் ஊரியான் கிராமத்திலும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் கோழி வளர்ப்பினை வாழ்வாதாரத் தொழிலாகத் தெரிவு செய்துள்ள பயனாளிகளுக்கே தலா மூன்று பைக்கற் சிமெந்து, கம்பிவலை என்பன முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டத்தில் டீ.ஆர்.சி. நிறுவனத்தினர் ஏனைய பொருள்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர். (க-6)

# கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர்களுக்குச் சைக்கிள்கள்

கிளிநொச்சி, ஜன. 25

பிரான்ஸ் வாழ் புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு 12 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளின் இணைப்பாளர்கள் 12 பேருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மாவை சேனாதிராசா உரையாற்றுகையில்:



முன்பள்ளி ஆசிரியர்களின் பணி மகத்தானது என்பதை நாம் அறிவோம். முழுமையான சம்பளமும் இல்லாத நிலையில் உங்களுடைய பணிகள் தொடர்ந்து கொண்டிருப்பதையும் நாம் அறிகின்றோம்.

எனவே, உங்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான உச்சக்கட்ட முயற்சிகளை நாம் மேற் கொண்டிருக்கின்றோம்.

அதேபோல் மாவட்ட முன்பள்ளிகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் நாம் உச்சக்கட்ட பங்களிப்பை வழங்குவோம்.- என்றார். (ம)

# தொழில் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.25

முல்லை. மாவட்டத்தில் உள்ள அழககச் சங்கத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் இளையகுட்டி செல்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் எமது தொழிலாளர்கள் அவர்களது உபகரணங்களை இழந்த நிலையில் தற்போது தமது தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய அதற்குரிய பணமின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளனர். அதிலும் குறிப்பாக ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் தொண்டு நிறுவனங்களினாலோ அல்லது அரசாங்கத்தினாலோ தமது தொழிலை ஆரம்பித்துக் கொள்ள உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை எனக் கூறிய அவர்கள் தமது தொழில் முயற்சிக்குத் தொண்டு நிறுவனங்கள் இயன்றவரை உதவமுன் வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## பிஞ்சுகளின் அணிவகுப்பு....



சிறப்பான ஆரம்பம்: கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவின்போது மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் ஆர்வத்துடன் விழாவில் கலந்துகொண்டுள்ளனர்.

# ஆசிரியர் வெற்றிடம்

முல்லைத்தீவு, ஜன.25

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து மாற்றலாகிச் சென்ற ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாகப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்தசூழ்நிலையால் முல்லை. மாவட்டத்தில் மாணவர்களின் கல்விநிலை மிகவும் பாதிப்புக்குள்ளாகியது. யுத்தத்திற்கு முன்பும் ஆசிரியர் பற்றாக்குறையினால் கல்விநிலை பாதிப்படைந்திருந்தது.

தற்போது மீள்குடியமர்ந்த மாணவர்களின் கல்வி நிலையில் முன்னேற்றம்காணும் நிலையில் கற்றலில் மிகவும் ஆர்வமுடைய ஆசிரியர்களை மாற்றியது மட்டுமல்லாது மாற்றலாகிச் சென்ற ஆசிரிய வெற்றிடங்களை இதுவரை நிரப்புவதற்குச் சம்பந்தப்பட்ட எவரும் முன்வராததால் மாணவர்களின் கல்விநிலை மிகவும் பாதிப்படைந்துள்ளது.

இந்தச் செயற்பாட்டினால் மாணவர்களின் மனங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஆர்வமில்லாத நிலையில் உள்ளனர்.

முன்னேறிவரும் இந்தப் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி உடனடியாக ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப ஆவண செய்ய வேண்டுமென பெற்றோர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(க-500)

# முதியோர் சங்கம்

வட்டக்கச்சி, ஜன.25

கல்மடு நகரில் முதியோர் சங்கம் ஒன்று அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி கல்மடு நகர் கிராம அலுவலர் தலைமையில் இந்த முதியோர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. இதில் தலைவராக வை. யோகரத்தினமும் செயலாளராக இ.தே.நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதியோர் சங்கத்தின் இந்த ஆரம்பக் கூட்டத்தில் சுமார் 116 முதியோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-450)

# பயிர் இழப்புக்கு நஷ்டஈடு

வட்டக்கச்சி, ஜன.25

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் நோய்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் விவசாயிகள் பெரும் துயரத்துடன் காணப்படுவதுடன் தமக்கு ஏற்படப்போகும் பயிர் இழப்புக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த யுத்தத்தின் போது சொத்துக்கள், உயிர்களை இழந்து பெரும் துயரத்துடன் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் சொந்த இடம் திரும்பிய மக்கள் விவசாய நடவடிக்கையில் மிகவும் சந்தோசத்துடன் ஈடுபட்டனர். இதன்மூலம் இழந்த சொத்துக்களைத் தேடவும், சேதமடைந்த வீடுகளைத் திருத்தவும் முடியுமென இவர்கள் நம்பினர்.


மேலும் உழவுக்கான பணம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் பலர் எஞ்சியிருந்த நகைகளை விற்றோ அல்லது அடகு வைத்தோ கூலிக்கு உழவு இயந்திரங்களைப் பிடித்து உழவு நடவடிக்கையினை மேற்கொண்டனர். ஆனால் இன்று வரை அந்தப்பணம் வழங்கப்படவில்லை.

இவை எல்லாவற்றையும் ஈடுசெய்வதற்கு விவசாயம் தமக்குக் கை கொடுக்கும் என நம்பி இருந்த இவர்களை விவசாயமும் கைவிட்ட நிலையில் விவசாயிகள் பலர் வேதனையுடன் காணப்படுகின்றனர்.

இந்த விவசாய நடவடிக்கைக்கென வங்கிகளில் கடன் எடுத்த விவசாயிகளும் உள்ளனர்.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் தமது நிலையை உணர்ந்து நட்டஈடு வழங்கவேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். (க-450)

# மன்னார் வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு



மன்னார், ஜன. 25

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்கொண்ட திடீர் பணிப் பகிஷ்கரிப்பானது மன்னார் பிரஜைகள் குழுவின் தலையீட்டையடுத்து நண்பகல் 12 மணியளவில் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது.

மன்னார் கச்சேரியில் கணக்காய்வாளராக கடமைபுரியும் அதிகாரி ஒருவர் தனக்கு பணிக்கப்பட்ட கடமையினை மீறி வைத்தியர்களின் வேலைத்திட்டத்தில் தலையிட்டு அநாகரிகமான முறையில் நடந்து கொண்டமையினைக் கண்டித்தே இப் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சிகிச்சைக்காக வந்த நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பாதிக்கப்பட்டதோடு நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தனர். இதே வேளை விசேட கிளினிக்கிற்கு வந்த மக்களும் பல்வேறும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

பின் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி பெனோ அலெக்சான்டர் சில்வா மற்றும் உறுப்பினர் களான அ.சகாயம், ஜனாப் யுனுஸ் ஆகியோர் மன்னார் பொது வைத் தியசாலைக்குச் சென்று வைத்தியர்களுடன் பேச்சுவார்த்தையினை மேற்கொண்டனர். இந்த நிலையில் பிரஜைகள் குழுவின் கோரிக்கைக்கு அமைவாக வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பினை கைவிட்டனர்.

# கால்நடை கொள்வனவு

முல்லைத்தீவு, ஜன.25

முல்லை மாவட்டத்திலிருந்து பிரயோசனமற்ற கால்நடைகளைக் கொள்வனவாளர்கள் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்பு முல்லை மாவட்டத்தில் இருந்து பிரயோசனப்படாத கால்நடைகளை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டதால் கால்நடையாளர்கள் அவற்றை விற்பனை செய்து கால்நடைகளைக் குறைக்கவும் பயிர்களின் அழிவினைத் தடுக்கவும் ஏதுவாக அமைந்தது.

தற்போது கால்நடைகளைக் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் கொள்வனவாளர்கள் கொள்வனவை நிறுத்தியுள்ள நிலையில் கால்நடையாளர்கள் பிரயோசன [illegible] கால்நடைகளை விற்க முடியாது கவலையடைந்துள்ளனர். (500)

# பொதுக்கூட்டம்

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம்திகதி வியாழக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்மடு நகரில் அமைந்துள்ள சுதாங்கனி முன்பள்ளி மண்டபத்தில் காலை 9 மணிக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இந்தக் கூட்டம் ஆரம்பமாகும். இந்தக் கூட்டத்தில் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25 ஜனவரி 2011 செவ்வாய்க்கிழமை



சம்மாந்துறைப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்த செங்கல் உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# செங்கலடி பிரதேசத்திலுள்ள மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை

மட்டக்களப்பு,ஜன.25

மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடி பிரதேசத்திலுள்ள குமாரவேலிக்கிராமம் சேனைக் குடியிருப்பு மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு ஆகிய கிராம மக்கள் தங்களுக்கு இதுவரை வெள்ள நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிரமுகர் பிரசன்னா இந்திரகுமார் சகிதம் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தன்னாமுனை, மைலாம்பாவெளி, ஆறுமுகத்தான்குடியிருப்பு, ஏறாவூர், குமாரவேலியார் கிராமம் உட்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குபயணம்மேற்கொண்ட வெள்ளப் பாதிப்புக்களை பார்வையிட்டதோடு வெள்ள நிவாரணங்கள் தொடர்பாக மக்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக ஆறுமுகத்தான் குடியிருப்பு, குமாரவேலியர் கிராமம், சேனைக்குடியிருப்பு ஆகிய கிராம மக்கள் வெள்ளம் வடிந்து தாம் வீடு திரும்பி ஒருவாரம் கடந்துவிட்ட போதிலும் இதுவரை பிரதேச செயலகம் ஊடாக அரச நிவாரண உதவிகளோ, அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவிகளோ தங்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர். உணவு நிவாரணம் மட்டுமல்ல கிணறுகளைச் சுத்தம் செய்ய குளோரின் பவுடர் கூட தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டி அரசாங்க அதிகாரிகள் மீது குற்றம் தெரிவித்ததையடுத்து அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்கமாறு கேட்டுக்கொண்டார்.

செங்கலடி பிரதேச செயலகத்துக்குச் சென்று பிரதேச செயலாளர் கே.சித்திரவேலை சந்தித்து இதுபற்றி கேட்டபோது, உலக தரிசனம் இயக்கம் (வேல்ட் விசன்) மூலம் ரூபா.2,500 பெறுமதியான நிவாரணப்பொருள்கள் ஆறுமுகத்தான் குடியிருப்ட மக்களுக்கும் சர்வோதயம் மூலம் குமாரவேலியார் மற்றும் சேனைக் குடியிருப்பு ஆகிய கிராம மக்களுக்கும் வழங்கப்படும் என்றும் பிரதேச செயலாளர் உறுதியளித்துள்ளார். (204)

# 4, 500 மில்லியன் ரூபா செலவில் வீதிகள் புனரமைப்பு

மட்டக்களப்பு,ஜன.25

கிழக்கு மாகாணத்தில் 4,500 மில்லியன் ரூபா செலவில் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக கிழக்கு மாகாண நெடுஞ்சாலைகள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

ஜெய்காவின் நிதி உதவியுடன் மூன்று வருடத்துக்குள் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திட்டத்தின் கீழ் வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவின் கீழ் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 3,500 மில்லியன் ரூபா செலவிலும் அம்பாறை மாவட்டத்தில் 2,000 மில்லியன் ரூபா செலவிலும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(204)

# கிழக்கு மாகாணத்திற்கு நோர்வே நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜன.25

கிழக்கு மாகாணத்தின் வெள்ளப்பாதிப்புக்களுக்கான நிவாரண நடவடிக்கைக்கு நோர்வே அரசாங்கம் 114 மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டம் கடந்தவாரம் பெய்த மழையினால் அதிகளவு பாதிக்கப்பட்டது. அத்துடன் மக்கள் உயிர் சேதங்கள்,உடைமைகள் என்பவற்றை இழந்துள்ளனர். அதிகளவு மக்கள் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்திருந்தனர்.

ஐ.நா விசேட பிரதிநிதி ஒருவரும் இந்த நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்துள்ளார். இந்த நிலையில் நோர்வே அரசாங்கம் 114மில்லியன் ரூபா நிதியினை பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கியிருக்கிறது. (204-15)

# ஆலயம் உடைக்கப்பட்டுத் திருட்டு

மட்டக்களப்பு,ஜன25

கிழக்கு மாகாணத்தில் வரலாற்று புகழ்மிக்க ஆலயங்களுள் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய கல்லாறு கலாட்சியம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்கள் ஆலயத்தை உடைத்து சிலைகளையும் சேதப்படுத்தியுள்ளனர் என்று ஆலயத் தலைவர் பேரின்பராசா தெரிவித்துள்ளார்.

ஆலயத்தின் பரிபாலன ஆலயமாகவுள்ள நாகதம்பிரான் மற்றும் வைரவர் ஆலயங்கள் உடைக்கப்பட்டு அதன் சிலைகளும் உடைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் உண்டியல் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பணம் உட்படப் பல பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருட்டுப்போன பொருள்களின் பெறுமதி தொடர்பில் இதுவரை தெரியவில்லையென தெரிவித்த அவர் இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நூற்றாண்டுகள் தாண்டிய பழமை வாய்ந்த இந்த ஆலயம் உடைக்கப்பட்டது இந்தப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ளி )

## நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் அனைவரும் வீடுகளுக்கு திரும்பிவிட்டதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்ட அனைத்து நலன்புரி நிலையங்களும் மூடப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,849 குடும்பங்களைச் சேர்ந்த 16, 418 பேர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்பதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (204)

# வெள்ளத்தின் பின் அம்பாறையில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரிப்பு

வெள்ள அனர்த்தத்தின் பின்னர் கல்முனை, சாய்ந் தமருது, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களிலுள்ள குடியிருப்புக்களில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரதேசத்திலுள்ள வீடுகள், வீட்டுச் சுற்றுப்புறங்களிலும் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். வெள்ளத்தினால் பாம்புகள் குடியிருந்த புற்றுகள் அழிந்துள்ளதானாலேயே இவ்வாறாக வளமைக்கு மாறான முறையில் வீடுகளுக்குள்ளும் வாகனங்களின் இடுக்குகளுக்குள்ளும் பாம்புகள் நடமாடுகின்றன. கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவ ருக்கு தனது இல்லத்தில் வைத்து பாம்பு தீண்டியதனால் ஆபத்தான நிலை மையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை தீவிரசிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (204)

## டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

மட்டக்களப்பு, ஜன.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினை அடுத்து சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கு அமைய பிரதேச செயலகம்தோறும்டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச சபையும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அலுவலகமும் இணைந்து போஜிங் புகை விசிறும்திட்டத்தை ஆரம்பித்துள்ளன. இதன் முதற்கட்டமாக மீறாவோடை, மாஞ்சோலை, பதுரியா நகர், ஓட்டமாவடி, காவத்தமுனை போன்ற பிரதேசங்களுக்கு இப்புகை விசிறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (204


## கிளி/ பளை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

கிளி/ பளை மத்திய கல்லூரியின் அதிபர் தலைமையில் எதிர்வரும் 29.01.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்திற்கு அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அதிபர்,
கிளி/பளை மத்திய கல்லூரி -பளை.

(சி/575210)

சீட்டிழுப்பு இல. 2348
திகதி 23.01.2011

மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்
M 7 5 1 7 1 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M | 7 | 5 | 1 | 7 | 1 | 6 | ரூபா. 15,212,628/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 7 | 5 | 1 | 7 | 1 | 6 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 5 | 1 | 7 | 1 | 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 08 |
| 3ம் பரிசுகள் | | | | 1 | 7 | 1 | 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 74 |
| 4ம் பரிசுகள் | | | | | 7 | 1 | 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 795 |
| 5ம் பரிசுகள் | | | | | | 1 | 6 | ரூபா. 100/= | பரிசுகள் 7978 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 79230 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 7 | 5 | 1 | 7 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 08 |
| 8ம் பரிசுகள் | | 7 | 5 | 1 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 84 |
| 9ம் பரிசுகள் | | 7 | 5 | 1 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 801 |
| 10ம் பரிசுகள் | | 7 | 5 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 7950 |
| 11ம் பரிசுகள் | M | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 31735 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 15,571,780.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,993,700.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631
www.nlb.lk

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
1948.09.27





ஆண்டவன் அடியில்
2010.02.04

அமரர் வேலுப்பிள்ளை தருமராஜசிங்கம்

ஆண்டொன்றானாலும் அழியாது- எம்
ஆள் மனதில் வாழ்பவரே- உம்
நினைவுடன் நினது பாதையில் நிற்கின்றோம் நித்தமும்
உமது பாதங்களுக்கு மலர்களை காணிக்கையாக்கி
வானத்து விடிவெள்ளியில் தினமும் உனை காண்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் திருமணத்துக்காக பாடசாலைக்கு அன்றைய நாளில் லீவு

கண்டி, ஜன.25

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட கினிகத்தேனை சிங்கள மகா வித்தியாலயத்தில் கடமைபுரியும் ஆசிரியர் ஒருவரின் திருமணத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டமை தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள பெற்றோர், இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசிரியரின் திருமணத்தையொட்டி பாடசாலையை மூடுவதற்கு ஹற்றன் கல்வி வலயத்தின் மேலதிக கல்விப்பணிப்பாளர் ஒருவர் அனுமதி வழங்கியிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த ஆசிரியரின் திருமணத்துக்காக ஆசிரியர்கள் அனைவரும் மாத்தளைக்குச் செல்லவேண்டி இருந்தது. இதனால் மேலதிக வலயக்கல்விப் பணிப்பாளரின் அனும தியைப் பெற்றே பாடசாலையை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் பெற்றோருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது - என பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஹற்றன் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரெங்கராஜியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஆசிரியர் ஒருவரின் திருமணத்துக்காக பாடசாலைக்கு விடுமுறை வழங்கமுடியாது. வலயக்கல்விப் பணிப்பாளர் தனது அறியாமை காரணமாக விடுமுறை அனுமதியை வழங்கியுள்ளார். எனவே, குறிப்பிட்ட பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்ட நாளுக்குப் பதிலாக பிறிதொரு நாளில் பாடசாலையை நடத்துமாறு பாடசாலை அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அரச பாடசாலை ஒன்றை மூடுவதற்கு அனுமதிவழங்க வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுமதி இல்லை என்றும், சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படும் என்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

(எ)

# கண்டியில் ஏற்பட்ட பூமியதிர்வால் சித்திலெப்பை ம.வி. மூடப்பட்டது

கண்டி, ஜன.25

கண்டி நகருக்கு அண்டிய பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பூமியதிர்வினால் பொதுமக்கள் பதற்றமடைந்தனர். இந்தப் பூமியதிர்வு சுமார் 10 நிமிடங்களுக்கு நீடித்ததாகவும், இடைக்கிடை பூமி அதிர்வு உணரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி சித்திலெப்பை மகா வித்தியாலயத்தில் இந்த அதிர்வு கூடுதலாக உணரப்பட்டதையடுத்து உடனடியாக அந்தப் பாடசாலை மூடப்பட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் வெளியேற்றப்பட்டனர்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் தமீன் தெரிவித்தவை வருமாறு:

கடந்த வெள்ளிக்கிழமை வழக்கம்போல் பாடசாலை நடந்து கொண்டிருந்தது. காலை பத்து மணியளவில் கட்டடக் கூரையில் ஹெலிக்கொப்டர் ஒன்று இறங்குவதைப் போலப் பேரிரைச்சல்கேட்டது. அதனைத் தொடர்ந்து கட்டடம் ஆடத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் நின்ற அதிர்வு மீண்டும் ஆரம்பமானது. அனர்த்தம் ஏற்படலாம் என்ற பீதியில் நானும் சக ஆசிரியர்களும் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களை வெளியேற்றினோம். அனர்த்தம் குறித்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அறிவித்தோம்.

அவரது அனுமதியுடன் அன்றையதினம் பாடசாலை நேரத்தோடு மூடப்பட்டது. அதன் பின் கல்விப்பணிப்பாளர் வந்து பாடசாலையைப் பார்வையிட்டார். இதன்போது தெய்வாதீனமாக எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. கட்டடங்களுக்கும் சேதம் ஏற்படவில்லை. இந்தப் பூமியதிர்வு குறித்து பேராதனை புவியியல் பீடத்துக்கு அறிவித்துள்ளோம் - இவ்வாறு அதிபர் தெரிவித்துள்ளார்.

# ஆற்றுக்குள் பாய்ந்த ஜோடி

காதலி மகாவலி கங்கையில் பாய்ந்ததையடுத்து அவரது காதலனும் அதே ஆற்றில் குதித்த சம்பவமொன்று கடந்த புதன்கிழமை கண்டி தென்னே கும்புர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

காதலி கையடக்கத் தொலைபேசி மூலம் மேற்கொள்ளும் அழைப்புகளுக்கு காதலன் பதிலளிக்கவில்லை என்ற காரணத்தை முன்னிட்டு இருவரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து காதலி தென்னேக்கும்புர பாலத்திலிருந்து மகாவலி கங்கையில் குதித்துள்ளார். அதனைத் தொடர்ந்து கலவரமடைந்த காதலனும் குதித்துள்ளார்.

இதனைக் கண்ணுற்ற ஓட்டோச் சாரதியொருவரும், இராணுவச் சிப்பாயொருவரும் ஆற்றில் பாய்ந்து இருவரையும் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.

பலகொல்ல பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட இருவரும் கடுமையான எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

(எ)

### போக்குவரத்தை ஆரம்பிக்க...



துப்புரவு: பல வருடங்களாக மூடப்பட்டிருந்த கண்டி - யாழ் வீதியைத் திறக்கும் பொருட்டு அந்தவீதி துப்புரவு செய்யப்படுவதை போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹண திஸாநாயக்க பார்வையிடுகின்றார்.

# உள்ளூராட்சிச் சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்

கண்டி, ஜன.25

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் பெருந்தோட்டத்துறை சமூக மாமன்றத்துடன் இணைந்து 'உள்ளூராட்சி மன்றங்களும் மலையகப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ மும்' என்ற தொனிப்பொரு ளில் ஹற் றன் 'டைன் என் ரெஸ்ட்' கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை விழிப்புணர்வு செயலமர்வொன்றை நடத்தியுள்ளது.

இந்தச் செயலமர்வின்போது, எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தல்களுக்கான முனைப்புகள் தற்போது மலையகத்திலும் சூடுபிடித்துள்ள இந்த வேளையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர் பட்டியல்களில் பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மலையக தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# கண்டி மண்சரிவில் உயிரிழந்த ஏழுபேரின் குடும்பங்கள் தொடர்ந்தும் சனசமூக நிலையத்தில்

கண்டி, ஜன.25

அண்மையில் கண்டியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்த ஏழுபேரின் உறவினர்கள் தொடர்ந்தும் கெட்டம்பேசன சமூக நிலையத்தின் ஒரு சிறிய அறையில் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தங்களது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க எந்த ஒரு அமைப்போ அல்லது அரசோ இதுவரை முன்வரவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு ஒரு வீட்டுத் தொகுதியை அல்லது இருப்பிடத்தை அமைத்துக்கொள்வதற்கான காணித்துண்டைப் பெற்றுத் தருவதற்கு எவரும் முன்வரவில்லை என்றும் அவர்கள் கவலைத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வாழ்ந்த ஐந்து வீடுகளும் மண்சரிவில் சிக்கி முற்றாக அழிவடைந்துள்ளன. அத்துடன் இதில் சிக்குண்டவர்களில் நான்கு பேர் வைத்தியசாலையில் தொடர்ந் தும் சிகிச்சை பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# வெட்டிக்கொல்லப்பட்ட நிலையில் ஆங்கில ஆசிரியர் சடலமாக மீட்பு

### பெல்மதுளையில் சம்பவம்

இரத்தினபுரி, ஜன.25

இரத்தினபுரி, பெல்மதுளை பிரதான வீதி, உடகந்த என்னும் இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஆணொருவரின் சடலத்தை இரத்தினபுரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி வந்த சன்னஸ்கமவைச் சேர்ந்த ஏ.பி.பி. பிட்ட கொடை (வயது 47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாதிகள் வழங்கிய தகவலொன்றின்படி மீட்கப்பட்ட இச்சடலத்தில் பல்வேறு வெட்டுக்காயங்கள் காணப்பட்டுள்ளன.

சடலம் தலை, கைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இக்கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இரத்தினபுரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு புதிய கூட்டணி

நுவரெலியா,ஜன.25

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மலையகத்தில் புதிய அரசியல் கூட்டணி ஒன்று உருவாகியுள்ளது. மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, விக்கிரமபாகு கருணாரட்ணவின் புதிய இடதுசாரி முன்னணி, சதாசிவம் தலைமையிலான ஐக்கிய தொழிலாளர் முன்ன்ணி மற்றும் சாந்தினி சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றணைந்து இந்தப் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளன.

இந்தக் கூட்டணி பதுளை, நுவரெலியா, கண்டி மாவட்டங்களிலுள்ள பல உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. மீன் சின்னத்தில் இந்தக் கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார். அதேவேளை ஏனைய மாவட்டங்களில் ஜனநாயக மக்கள் முன்னணி தனது சொந்தச் சின்னத்தில் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வடக்கில் தமது கட்சி சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்புடன் வேறொரு கூட்டணியை உருவாகியுள்ளதாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் புதிய இடதுசாரி முன்னணி சுயேச்சைக் குழுவாக போட்டியிடுவது குறித்தும் ஆலோசித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# கடைகளை உடைத்து பணம் திருட்டு

நுவரெலியா, ஜன25

மஸ்கெலியா நகரில் உள்ள நான்கு வர்த்தக நிலையங்களை உடைத்து உட்புகுந்தவர்களால் அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தினை திருடியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடைகளில் திருடிய நபர்கள் கதவுகளுக்குப் பூட்டியிருந்த பூட்டுகளையும் கொண்டு சென்றுள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சி இன்று முதல் வேட்பு மனுத் தாக்கல்



கொழும்பு, ஜன. 25

ஐக்கிய தேசியக் கட்சி, இன்று முதல் 27ஆம் திகதி வரை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளது என்று அக்கட்சி நேற்றுக் கூறியது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும், எம்.பியுமான கயந்த கருணாதிலக கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைப் பூர்த்திசெய்யும் நடவடிக்கை தொடர்கின்றது. ஐ.தே.கவில் போட்டியிட அதிக எண்ணிக்கையானோர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் தகுதியானவர்களும், மக்கள் செல்வாக்குள்ளவர் களும் தெரிவுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தேர்தல் வேட்பாளர்கள் பட்டியல் பூர்த்தியாகிக்கொண்டிருக்கின்றது. 25,26 மற்றும் 27ஆம் திகதிகளில் நாம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வோம்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர படையினர் செய்த தியாகம்போல் இந்நாட்டு மக்களும் தியாகம் செய்தனர். அந்த மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு யுத்தம் முடிந்ததும் மறந்துவிட்டது.

ஆனால், அமைச்சர்களுக்கான சிறப்புரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அமைச்சர்களின் சம்பளம் குறைக்கப்படவில்லை.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் பயங்கரவாத முத்திரை குத்தி அந்தப் பிரச்சினைகளை அரசு அப்படியே மூடி மறைக்கின்றது. பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகாண அரசு முயற்சி செய் வதில்லை.

முட்டை விலை அதிக ரித்தால் அது பயங்கரவாதம் என்றும், தேங் காயின் விலை அதிகரித்தால் அது பயங்கரவாதம் என்றும் அரசு கூறுகின்றது. ஆனால், இவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பதில்லை.

இப்படியானதொரு நிலையில் மக்கள் இத்தேர்த லில் அரசுக்கு வாக்களிக்கமாட்டார்கள். எம்மையே ஆதரிப்பர். அர சின் மோசடியான நிர்வாகத்துக் குள் சிக்கிச் சீரழியும் மக்கள் இத் தேர்தலின் ஊடாக அதிலிருந்து வெளியேற விரும்புகின்றனர்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## கல்விக்கான தேடல்...



ஆர்வம்: அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கல்முனை பிரதேசத்தில் வீடுகளுக்குள் புகுந்த நீர் பாடசாலை மாணவர்களின் புத்தகப்பையைக் கூட விட்டு வைக்கவில்லை.
இந்தநிலையில், நனைந்த தமது புத்தகங்களை மாணவர்கள் உலர வைப்பதில் ஈடுபடுகின்றனர். (204)

# பிக்குகளை வேட்பாளராக்க அமைச்சர் தினேஷ் எதிர்ப்பு

கொழும்பு, ஜன.25

பௌத்த பிக்குகளை உள்ளூ ராட்சித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்துவதற்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எதிர்ப் புத் தெரிவித்துள்ளார். இதனால் ஆளும்கட்சிக்குள் பலத்த முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள லங்கா சமசமாஜக் கட்சி உள் ளூராட்சித் தேர்தலில் பௌத்த பிக்கு ஒருவரை வேட்பாளராக நிறுத்த முடிவு செய்துள்ளது.

அலரி மாளிகையில் நடை பெற்ற வேட்பாளர் தெரிவுக்குழு வின் கூட்டத்தில் லங்கா சம சமாஜக்கட்சியின் இந்த முடிவுக்கு எதிராக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பௌத்த பிக்குகளை வேட்பாளர்களாக நிறுத்தி மகா சங்கத்துக்குள் பிளவுகளை ஏற்படுத் தக்கூடாது என்று அவர் தெரிவித்துளார். எனினும் இந்தப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு எட்டப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் பௌத்த பிக்குகளின் ஆதிக்கம் நிறைந்த ஜாதிக ஹெல உறுமயவும் உள்ளூராட்சித் தேர்தலில் தனியாகப் போட்டியிடவுள்ளது குறிப்பிடத்தக்கது. (204)

# கைதிகளுக்கான உணவுப் பொதியில் ஹெரோயின்; இரு பெண்கள் கைது

கொழும்பு, ஜன. 25

கொழும்பு, மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கைதிகளுக்கு பெண்கள் இருவர் கொண்டு வந்த உணவுப் பொதியில் இருந்த கிழங்கிற்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வனாத்தமுல்ல சீவலி ஒழுங்கையைச் சேர்ந்த இந்த இரு பெண்களும் கைதிகளுக்கு உணவுப் பொதிகளில் வைத்து நீண்டகாலமாக ஹெரோயினை விற்று வந்துள்ளார்கள் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என சிறைச்சாலை பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை சிறைச்சாலைக்கு உணவுப் பொதிகளுடன் வந்த இப் பெண்கள் இருவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். இவர்கள் இருவரும், பார்க்க வந்த இரு கைதிகள் போதைப்பொருள் விவகாரத் தில் தண்டனை அனுபவித்து வருபவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

அதேசமயம், கடந்த வியாழக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் கொண்டுவரப்பட்ட ரெனிஸ் பந்தொன்றுக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது. போதைப் பொருள் வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் கணவனுக்கு அவரது மனைவி கொண்டு வந்த ரென்னிஸ் பந்துக்குள்ளே ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இத்தகைய பந்துகள் மூலம் சிறைக்கைதிகளுக்கு நீண்டகாலமாக ஹெரோயின் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும் விசாரணைகளின் போது புலனாகியுள்ளது. (சி)

# தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத்தமிழர் ஆஸ்திரேலியாவில் உண்ணாவிரதப் போராட்டம்

ஆஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் உள்ள வில்லாவுட் தடுப்பு முகாமில், கதிர் என்ற புனைப்பெயரை கொண்ட தமிழர் கடந்த ஏழு நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தனது அகதி அந்தஸ்து கோரிக்கைக்கு விதிக்கப்பட்டுள்ள அசாதாரண நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த இலங்கை தமிழர் போராட்டத்தை நடத்தி வருகிறார்.

இவர் 2009 ஆம் ஆண்டு 1993 அகதிகளுடன் ஆஸ்திரேலியா சென்ற அகதிகள் படகின் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

இவருடன் படகில் சென்ற 193 பேரில் 188 பேருக்கு ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் சமூகத்துடன் இணைவதற்கு அந்த நாட்டின் புலனாய்வுத்துறை விடுகை அனுமதியை அகதி ஒருவர் பெற வேண்டும். எனினும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கதிர் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இன்னமும் அந்த அங்கீகாரத்தைப் பெறவில்லை.

2009 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் குடிவரவு திணைக்களம் கதிரை உண்மையான அகதியாக ஏற்றுக்கொண்டது. எனினும் புலனாய்வுப்பிரிவு அவருக்கு விடுகை அனுமதியை வழங்கவில்லை. இருப்பினும் அவரை நாடுகடத்த முடியாது என்பதே கதிர் தரப்பு மனித உரிமை அமைப்புக்களின்நிலைப்பாடாக உள்ளது.

இந்தநிலையில் தொடர்ந்து 7 ஆவது நாளாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வரும் கதிர் இதுவரை 20 கிலோ வரை நிறை குறைந்துள்ளார்.

தமக்கு எதிரான வழக்கை மீண்டும் தொடர்வதில்லை என ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் உறுதியளிக்கும் வரை தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என கதிர் குறிப்பிட்டுள்ளார். (204)

# அநுராதபுரம் நீதிமன்றில் தீ விபத்து

அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தினுள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் நீதிமன்றத்தின் பல ஆவணப் பதிவேடுகள் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தீப்பற்றலுக்கான காரணம் இதுவரை தெரியாத நிலையில் நீதிமன்றத்தின் 75 சதவீதமான ஆவணப் பதிவேடுகள் தீயினால் அழிவடைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. (204)

# பன்றிக் காய்ச்சல் தடுப்பூசி சந்தேகம் தேவையில்லை

பன்றிக்காய்ச்சல் என்பது இறைச்சி வகைகளால் பரவுவதில்லை. காற்றால் பரவும் ஓர் தொற்றுநோய் என்பதால் இதற்கான தடுப்பூசிகளை விரும்பியவர்கள் ஏற்றிக்கொள்ள வேண்டும். இம்மருந்தை ஏற்றுவதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை - என வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் பன்றிக்காய்ச்சல் தடுப்பு மருந்தான 'எச்1 என்1' தடுப்பூசி தொடர்பாக பொதுமக்களிடம் காணப்பட்ட பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கும் பொருட்டே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியாவில் நால்வர் பன்றிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்களின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. இருவருக்கு நோய் இருப்பதாக அடையாளம் காணப்பட்டது.இதன்காரணமாக சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட மருந்துகளை பொதுமக்களுக்கு ஏற்றியிருந்தோம். ஆனால் சிலர் கூறுவதைப் போன்று வவுனியா மாவட்டத்தில் மட்டும் இம்மருந்து ஏற்றப்படவில்லை. வட மாகாணத்தில் அனைத்து பிரதேசங்களிலும் கண்டி, தம்புள்ள போன்ற நாட்டின் பல இடங்களிலும் மக்களுக்கு ஏற்றப்பட்டது.

வவுனியாவில் மக்களுக்கு நோய் ஏற்படக்கூடாது என்பதில் கூடிய கவனமெடுத்து வரும் முன் காப்போம் என்பதற்கிணங்க பெருமளவு மக்களுக்கு தடுப்பு மருந்துகளை வழங்கியிருந்தோம் - இவ்வாறு டாக்டர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். (சி)

# பௌத்த ஜெயந்தி நிகழ்வுக்காக ஐ.நாவில் விசேட அமர்வுகள்

கொழும்பு,ஜன.25

பௌத்த ஜயந்தி நிகழ்வுகளுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு விசேட அமர்வுகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. 2600 ஆவது பௌத்த ஜயந்தி நிகழ்வுகளை நடாத்துவதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைத் திட்டத்துக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மே மாதம் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையில் ஐக்கிய நாடுகளின் அமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. பௌத்த ஜயந்தி நிகழ்வுகளுக்கு ஆசிய நாடுகள் பூரண ஆதரவளித்துள்ளன. வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான ஓர் பௌத்த ஜயந்தி விழா நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவன மாணவர்கள் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருதொகுதி உணவுப் பொருள்களைச் சேகரித்து வழங்கினர். (72)

# கல்வி விருத்திக்குப் பங்களிப்புத் தேவை

போரின் தாக்கத்தினால் பின் தங்கிவிட்ட நாம் எமது எதிர்காலச் சந்ததிக்கு வளமான எதிர்கால நம்பிக்கையை வழங்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு எழுத்தாளர் நிலக்கிளி பாலமனோகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த பொங்கல் தினத்தன்று முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடந்த மாணவர் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியானந்தாக் கல்லூரியின் அதிபர் க.சிவலிங்கம் தலைமையில் வித்தியாலய பிரார்த்தனைக் கூட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஸ்தாபகர், இந்த நிதியத்தின் உறுப்பினர் சாந்தலிங்கம் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் போரினால் தாய், தந்தையரை இழந்த இருபதுக்கும் மேற்பட்ட, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:-

இந்த நாட்டில் நீடித்த போர் குறிப்பாக வன்னி மக்களை பெரிதும் பாதித்து வரலாறாக்கியுள்ளது. இந்த வரலாற்றில் பதியப்பெற்ற வீழ்ந்து கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ச்சி கல்வியில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது.

இந்தக் கல்விச் செல்வத்தை இங்கு பாதிப்புக்குள்ளான எமது குழந்தைகள் உரிய முறையில் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக கடந்த 23 வருடகாலமாக அவுஸ்திரேலியாவில் இருந்து மனிதாபிமான அடிப்படையில் உதவும் நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் பிரதிநிதிகள் இந்த வன்னி மண்ணுக்கு நேரடியாக வந்துள்ளனர்.

எழுத்தாளனின் பணி - மக்களின் துயரங்களையும் அல்லல்களையும், கண்ணீரையும் இலக்கியமாக்குவதுடன் மட்டும் ஓய்ந்துவிடக்கூடாது என்பதற்கு இன்றைய நிகழ்வு சிறந்த உதாரணமாகத் தென்படுகிறது.

வன்னியில் முல்லை மண்ணைப் போர் காவுகொண்டது வரலாறு, போரின் தாக்கத்தால் உருக்குலைந்துபோன எமது மக்களின் வாழ்வு சீரமைக்கப்படல் வேண்டும். அதற்கு முதற்கட்டமாக - பெற்றோர்களை இழந்து பரிதவிக்கும் எமது மாணவச் செல்வங்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றும் வகையில் அவர்களின் அடிப்படைத் தேவையான கல்விக்கு ஏதேனும் வழிகளில் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்கள் உதவ முன்வர வேண்டும்.- என்றார். (ம)

# புதிய வடிவமைப்பில் உள்ளூர் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஜன.25

நவீன காலங்களுக்கேற்ப புதிய வடிவமைப்புக்களையும் படைப்புக்களையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்ட உள்ளூர் கைவினை உற்பத்திப் பொருள்கள் நவீன உலகிற்கு சந்தைப்படுத்துவதற்கும் ஏதுவாகக் காணப்படுகிறது.

மொறட்டுவ தேசிய நிலைய வடிவமைப்புப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.டி.பி.விஜயக்கோன் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற 'காலத்திற்கேற்ப உற்பத்திகள்' கண்காட்சியில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கையில் தற்போது 2 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கைத்தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் 40இற்கும் மேற்பட்ட மூலப்பொருள்கள் தாராளமாகக் காணப்படுகின்றன. தொழில்நுட்ப அறிவின்மையால் மூலப்பொருள்கள் பொருத்தமாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

தற்போது கைத்தொழிலாளர்கள் தங்களது பொருள்களை சந்தைப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறார்கள். அதன் நிமித்தம் நவீன முறைக்கேற்ப உற்பத்தியின் மூலப் பொருள்களைத் தரமான புதிய வடிவமைப்பிலும், நவீன தொழில் நுட்பங்களையும் மேற்கொண்டு சந்தை வாய்ப்பை மேம்படுத்தலையே நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

யாழ்.மாவட்டத்திற்கு 30 வருடங்களின் பின் எங்கள் தேசிய நிலைய வடிவமைப்பு வருகை தந்து 32 கிராமங்களை உள்ளடக்கிய குழுக்களைக் கொண்டு அங்கு 32 நிலையங்கள் மூலமாகக் கைத்தொழில் பயிற்சியினை வழங்கியுள்ளது. அதன் மூலம் உருவாக்கிய கைவினைப் பொருள்களே இங்கு கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடத்திலும் கைத்தொழில் பயிற்சியினை வழங்குவதற்கு முன்வந்துள்ளோம்.

2010 ஆம் ஆண்டு தோல் உற்பத்திப்பொருள்கள், மரத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், பித்தளை உலோகத்தினால் வடிவமைக்கப்படும் பொருள்கள் என ஒவ்வொரு வருடமும் தொழில் தொகுதிகளில் 75 புதுவடிவமைப்புக்களை அறிமுகம் செய்துள்ளோம்.

அத்துடன் இளைஞர்களுக்கான புதிய வடிவமைப்புத் தொழில்நுட்பம் 2 வருட டிப்ளோமா பயிற்சி நெறிகளாக வும் வழங்கப்படுகிறது. இங்கு கண்காட்சியில் 1000 இற்கு மேற்பட்ட புதியவடிவமைப்புகள் தொழில்நுட்பத்தை உள்ளடக்கி (காலத்திற்கேற்ப வடிவமைப்பு) சந்தை வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படவுள்ளது. அத்துடன் ஒவ்வொரு பொருள்களும் ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கக் கூடியாதாக உள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் இங்குள்ள இளைஞர்களுக்கு உயர் தொழில்நுட்பமும் வடிவமைப்பும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறியினைத் தொடங்க உள்ளோம்.- என்றார் (ம-311)

# நலிவுற்ற மக்களுக்கான சேவைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

நலிவுற்ற மக்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான சேவையினை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆற்றிவருகின்றது என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் கிராமங்கள் தோறும் வழங்கப்பட்டு வருகின்றன. பொருளாதாரம், கல்வி, ஆரோக்கியம், மருத்துவம் போன்றவற்றால் பின்தங்கியுள்ள கிராமங்களை இனங்கண்டு அவர்களது வாழ்வாதரத்தை உயர்த்தப் பல செயற்றிட்டங்களை வழங்குகின்றது.

மாதகல் பிரதேசத்தில் கல்வியில் பிந்தங்கிய மாணவர்களை இனங்கண்டு மாலை நேர பகுப்புகள் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறே நோயால் தாக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற முடியாமல் அல்லலுற்ற போது அவர்களுக்குத் தேவையான சிகிச்சை முறைகளை வழங்க உதவி செய்து வருகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்தவர்களுக்காக நிவாரண உதவிகள் கிட்டத்தட்ட 398 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் வழங்கினார்கள்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகுப்பறைகள் இல்லாமல் இருந்த போது சகல வசதிகளுடன் வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்தார்கள். அனர்த்தங்கள் ஏற்பட்டபோதும் பல்வேறு உதவித்திட்டங்களை மேற்கொண்டார்கள்.

டெங்கு நோய்த் தாக்கத்தால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டார்கள். அதன்போது புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நோய்த்தாக்கத்தை இல்லாது ஒழிப்பதற்கும் மூலகாரணமாக இருந்தார்கள்.

இவ்வாறு பல்வேறு செயற்றிட்டங்களை நலிவுற்ற மக்களின் வாழ்வாதரத்தை உயர்த்தும் பணியினை மேற்கொள்ளுகின்றது அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.- என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 42 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-313)

## சுகாதார உத்தியோகத்தர் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.25

மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் தாய்,சேய் நல சேவைகளை வழங்கும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மத்தியில் சிறந்தவர்களைத் தேர்வு செய்யும் போட்டி தேசிய மட்டத்தில் கடந்த வருடம் நடத்தப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தேசிய மட்டத்தில் விசேட நிபுணர் குழுவினால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

இப்போட்டி தாய், சேய் நல சேவைகளை வழங்கும் ஒவ்வொரு உத்தியோகத்தர்கள் பிரிவுக்கும் தனித்தனியாக நடத்தப்பட்டது.

இப்போட்டியில் மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவில் கரவெட்டி சுகாதார வைத்தியர் பிரிவைச் சேர்ந்த குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி. புஸ்பராணி வெற்றிவேல் தேசிய மட்டத்தில் 3ஆவது இடத்தையும் குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியர் பணிமனையைச் சேர்ந்த செல்வி பத்மினி அம்பலவாணர் தேசிய மட்டத்தில் 3ஆவது இடத்தையும் வென்றுள்ளனர்.

மேற்படி இரு சுகாதார வைத்தியப் பணிமனைகளுக்கும் நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரிகள் இல்லாத நிலையில் இவர்கள் தமது சிறந்த சேவையின் மூலம் இப்போட்டி யில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஓய்வூதியத் திட்டத்தில் முதலிடம்

நாவற்குழி, ஜன.25

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு அதிகமானோரை யாழ். மாவட்டத்தில் இணைத்து கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை நல்லூர், மூன்றாம் இடத்தை பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுகள் பெற்றுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வளலாய், பத்தமேனி பிரிவுகளில் முன்னர் கிராம அலுவலராகக் கடமையாற்றிய கோ.கதிரைமலைநாதன் 216 பேரைச் சேர்த்து சாதனை படைத்துள்ளார். இவர் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவு அதிக பயனாளிகளை இணைத்த வகையில் 2006 ஆம் ஆண்டில் 2 ஆம் இடத்தையும், 2007 ஆம் ஆண்டில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. 2008, 2009 ஆம் ஆண்டுகளில் ஆயிரம் பேருக்குமேல் இணைத்துச் சிறப்புப் பரிசில்களையும் பெற்றுள்ளன. (ம-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
கனிவாகப் பேசி காரியங்கள் சாதிக்க வேண்டிய நாள். உறவினர்கள், நண்பர்களின் குடும்ப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உங்களின் திறமையை அயலார் பாராட்டுவர். ஆபத்து காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு இன்று பதில் உதவி செய்வீர்கள். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் பயப்படுவீர்கள்.

**ரிஷபம்:**
உடல் நலமில்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். நண்பர்களின் பொறாமைகளுக்கு ஆள்படலாம். பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு மனவருத்தம் அடைவீர்கள். சில விடயங்களில் ஆணவத்துடன் நடந்து கொள்வீர்கள். கோபம் உண்டாகும்.

**மிதுனம்:**
எதிர்பார்த்த நல்ல செய்திகள் தொலைபேசி மூலம் வரலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். காலையில் செய்ய முடியாமல் போன வேலை ஒன்று மாலையில் செய்து முடிக்கலாம். பண விடயங்களில் நினைத்தது நடக்க வாய்ப்பு உண்டு. வழக்கமான வேலைகளை தங்கு தடையின்றி செய்வீர்கள்.

**கடகம்:**
உறவினர்கள் வருகையால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கலாம். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். உடல் ரீதியாக சிறு பிரச்சினைகளைச் சந்திக்கலாம். கனவுகளால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கலாம். பெண்களுக்கு கணவரிடம் கேட்ட பொருள்கள் கிடைக்கும். திட்டமிட்ட பயணங்கள் செல்லலாம்.

**சிங்கம்:**
தடுமாற்றம் இல்லாமல் எந்தக் காரியத்தையும் சிறப்பாகச் செய்வீர்கள். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அயலவரை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் சூழ்நிலை உருவாகலாம். தற்பெருமை கொள்வீர்கள்.

**கன்னி:**
தேக ஆரோக்கியக் குறைவுகளைச் சந்திக்கலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். முக்கிய செய்திகளைக் கேட்கலாம். பழைய பொருள் ஒன்றை மாற்றி புதிய பொருள் வாங்கலாம். சில வேலைகளில் தடை ஏற்படலாம். சில காரியங்களை தவறாகச் செய்து விட்டு, ஒன்றுக்கு இரு முறை செய்ய நேரிடலாம். செலவு கூடும்.

**துலாம்:**
நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டத்தில் முன்னேற்றம் உண்டு. உங்களுக்கு வேண்டியதை வாங்குவதற்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். உறவினர்கள் தொடர்பான வேலைகளில் ஈடுபடலாம். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறு வீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்:**
பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். மாமன், மைத்துனர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சில விடயங்களில் அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டு பின்னர் மனவருத்தம் அடைவீர்கள். சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். நல்ல செய்தி கேட்கலாம்.

**தனுசு:**
எந்த வேலையையும் தடையின்றி சுறுசுறுப்பாகச் செய்வீர்கள். சுபகாரிய முயற்சிகளில் நினைத்தது நடப்பது தள்ளிப்போகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. புதியவர்கள் சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாம்.

**மகரம்:**
ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க பேச்சில் கவனம் அவசியம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உங்களை உதாசீனம் செய்யலாம். கிடைக்கும் நேரத்தை வீண் பேச்சு பேசி வீணடித்து விட்டு பின்னர் அவசரமாக செயற்படுவீர்கள்.

**கும்பம்:**
வாங்கிய கடன் மிகுதி ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். வாகனங்களால் தொல்லைகளைச் சந்திக்கலாம். முக்கிய காரியம் ஒன்றுக்காக அவசரமாக வெளியூர் பயணம் செல்லலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பெண்கள் பிளறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். ஆறுதலானநாள்.

**மீனம்:**
மன நிம்மதி பெறுவீர்கள். சில விடயங்களை மற்றவர்களிடம் சொல்லாமல் உங்களுக்குள்ளேயே வைத்திருக்க முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக நிறுத்தி வைத்த சில வேலைகளை இன்று செய்யலாம். சில வேலைகளை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். அனுகூலமான நாள்.

# ராகுலையும் ஏமாற்றுவார் மஹிந்த

கொழும்பில் இருந்து வெளியாகும் 'டெய்லிமிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் அதன் பத்தி எழுத்தாளர் உப்புல் யோசப் பெர்னாண்டோ எழுதிய கட்டுரையின் மொழியாக்கம் இது.

தமிழர்களின் விடயம் தொடர்பாக இலங்கை அரசு போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என ராகுல்காந்தி அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அவரது கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பினர். ''கருத்துக்களைக் கூறுவது அவரது சுதந்திரம்'' என மஹிந்தர் அவதானத்துடன் பதிலளித்திருந்தார்.

இது நடந்து முடிந்த பின்னர் அனைத்துலக ஊடகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் பேசிய ஜனாதிபதி 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினை அடியொற்றியே தீர்வு முன்வைக்கப்படும் என்றிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து 13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் பிளஸ் தொடர்பாக மஹிந்தர் பேசியிருப்பது இதுதான் முதல்முறை. போர் முடிவுக்கு வந்த கையோடு 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் ராம் ஜனாதிபதியைப் பேட்டி கண்டிருந்தார்.

அதில், 13ஆவது அரசமைப்புச் சீர்த்திருத்தம் தொடர்பாக மஹிந்த பேசியிருந்தாலும் தீர்வுக்கான அடிப்படையாகத் தான் அதனைத் பயன்படுத்த இருக்கிறார் என்று நேரடியாக அவர் கூறவில்லை. நவம்பர் 2010 அந்தப் பேட்டி வெளிவந்திருந்தது. அதில், 13ஆவது திருத்தம் பற்றி எதனையும் குறிப்பிடாத மஹிந்த, அதிகாரப் பகிர்வைவிட அபிவிருத்தி முயற்சிகளுக்கே உடனடி முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அதற்கெல்லாம் முன்னர், இந்த நாட்டில் போர் நடைபெற்று வந்தபோது 13ஆவது அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாகவே மஹிந்த வழமையாகப் பேசுவார். ஆனால் போர் முடிவுற்ற பின்னர், அவர் வழங்கிய பேட்டிகளில் 13ஆவது திருத்தம் பற்றிக் குறிப்பிட்டபோதும், ''நான் அதனை நிறைவேற்றுவேன்'' என ராஜபக்ஷ ஒருபோதும் கூறவில்லை.

ராகுல் காந்தியின் கருத்துக்குப் பின்னரே, அதாவது போர் முடிவுக்கு வந்த பின்னரே மஹிந்த ராஜபக்ஷவுக்கு 13ஆவது திருத்தம் தொடர்பில் நினைவுக்கு வந்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை.


13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை ஆரம்பித்து விட்டதாக மஹிந்த கூறினார். முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துமாறு இந்தியா பல தடவை ஆலோசனை கூறியபோதும், அந்தத் திசையில் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்காது காலத்தை இழுத்தடித்து வந்தார் அவர்.

திடீரென, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு நியமித்தார். முதலாவது சுற்றுப் பேச்சு முடிவுற்ற பின்னர், இரண்டாவது சுற்றுப் பேச்சு நடந்துகொண்டிருப்பது புதிய முன்னேற்றமாகும்.

இந்தப் புதிய முன்னேற்றம் ராகுல் காந்தியின் அறிவிப்பினாலேயே சாத்தியமானது. ராகுல் காந்தி இந்த அறிவிப்பை மேற்கொண்டதுடன் மட்டும் நின்றுவிடவில்லை என்பதுதான் மிக முக்கியமானது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ராகுல் காந்தியினதும் காந்தி குடும்பத்தினதும் அக்கறை அதிகரித்துள்ளதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காந்தி குடும்பம் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகக் காட்டும் ஆர்வத்தினை நன்கு உணர்ந்து கொண்டதால் மஹிந்தவும் தற்போது ஆர்வமிகுதியாக அதுபற்றிக் கதைக்கத் தொடங்கியிருக்கலாம். 13ஆவது திருத்தம் தொடர்பான காந்தி குடும்பத்தின் ஆர்வம் அதிகரித்திருப்பதற்குத் தமிழ்நாடு தேர்தல் நெருங்கி வருவதும் காரணம் என்பதை மஹிந்த நன்கு அறிவார். போரிலும் தேர்தலிலும் மஹிந்த அரசு வெற்றி பெறுவதற்கு



ராகுல் காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டில்லியில் சோனியா காந்தியை மஹிந்த ராஜபக்ஷ சந்தித்த போது அவரை அழைத்துச் செல்கிறார்... தனது வாரிசாக நாமலை அறிவித்த போது... *(உள்படம்)*

இந்திய அரசே உதவியது என்பதையும் நினைவிற் கொள்வது நல்லது.

போர் நடைபெற்ற காலப் பகுதியில், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் அழுத்தம் கொடுத்ததைப்போல இந்திய அரசும் மஹிந்த அரசை போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு அழுத்தம் கொடுத்திருந்தால், மஹிந்தவினால் எந்தவொரு தேர்தலிலும் வெற்றி பெற்றிருக்க முடியாது.

மறுபுறத்தில் காங்கிரஸ் அரசு இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இவ்வாறு செய்தமையினால் தமிழ்நாட்டில் தனது செல்வாக்கை இழந்தது. தமிழ்நாடு தேர்தல் நெருங்கிவிட்டது. காங்கிரஸ் கூட்டணிக் கட்சி வெற்றி பெறவேண்டுமாயின், அதற்கு மஹிந்தவின் உதவியும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

இலங்கைப் போரில் மஹிந்தவை வெற்றிபெறச் செய்ததன்மூலம் காந்தி குடும்பத்தின் காங்கிரஸ் அரசும் இலங்கையின் மாவீரர்களாக மஹிந்த குடும்பத்தினர் மாறுவதற்கு வழிசமைத்திருக்கிறார்கள். தனது நன்றியைக் காட்டும் விதத்தில், தற்போது காந்தி குடும்பத்தை, குறிப்பாக ராகுல் காந்தியை தமிழ் நாட்டில் வீரனாகக் காட்டுவதற்காக ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டும்.

தான் போரில் பெற்ற வெற்றியின் நற்பெயரைப் பயன்படுத்தி ராஜபக்ஷ தனது மகன் நாமல் ராஜபக்ஷவை தனது ஆட்சியின் அடுத்த வாரிசாக வரித்துக்கொள்ள முடிந்தது.

அவர் போரில் வெற்றி பெறுவதை இந்தியா தடுத்திருந்தால், இந்த நேரம் ராஜபக்ஷவின் குடும்பம் இல்லாமல் போயிருக்கும். எனவே, காந்தி குடும்பத்தின் இளவரசனான ராகுல் காந்தி, தமிழ் மக்கள் மத்தியில் தன்னை வீரனாக நிலைநிறுத்திக் கொள்வதற்கு மஹிந்த உதவ வேண்டும் என்பதே இப்போதுள்ள நியதி.

இந்த நியதியின் அடிப்படையிலேயே மஹிந்த இப்போது 13ஆவது திருத்தம் குறித்துப் பேசுகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார். ஆனால், 13ஆவது திருத்தம் தொடர்பாக மஹிந்த மேற்கொண்ட அறிவிப்புக்கள் சிக்கலானவையாக உள்ளன.

தான் 13ஆவது திருத்தத்தை வழங்க இருக்கிறார் என்று மஹிந்த கூறுகின்றபோதும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதை அவர் எதிர்க்கிறார்.

13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசலாம் என்பதே மஹிந்தவின் நிலைப்பாடு. ஆனால் அதில் அவர் எவ்வளவு தூரம் இதயசுத்தியுடன் செயற்படுகிறார் என்பது கேள்விக்குரியதே. அதனால்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தானே பேச்சு நடத்துவதற்குப் பதிலாக, பொறுப்பை, ஓய்வூதியம் பெறும் நிலையிலிருக்கும் மூத்த அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் ஒப்படைத்துள்ளார். ஆனால் இந்த விடயத்தில் விக்கிரமநாயக்கவின் நேர்மை சந்தேகத்திற்குரியதே.

போர் முடிவடையும்வரை, இந்தியாவை நடுவு நிலைமையில் வைத்திருக்க விரும்பிய மஹிந்த, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் கலந்துரையாடல்களைக் காட்டி ஏமாற்றி வந்தார்.

அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவினர் ஆலோசனை வரைபைத் தயாரிப்பதற்குப் பல ஆண்டுகள் எடுத்தபோதும் அவை தற்போது மூலையில் கிடந்து தூசி பிடிக்கின்றன. போர் முடிவடையும்வரை அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் வரைபைக் காட்டி மன்மோகன் சிங்கை ஏமாற்றிய மஹிந்த, அவ்வாறே 13ஆவது திருத்த அம்சங்களைக் காட்டி ராகுல் காந்தியையும் ஏமாற்றினாலும் ஆ[illegible]க்கூடியதல்ல. (நன்றி புதினப் பலகை)

# உத்தமர் குணம்



முன்னொரு காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று... வேடன் ஒருவன் காட்டுக்கு வேட்டையாடுவதற்குப் போனான். இவன்தானே மிருகங்களைத் துரத்திக் கொண்டு போக வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக ஒரு புலி இவனைத் துரத்த ஆரம்பித்தது!

வேட்டையாடின வரைக்கும் போதும்! இனிமேல் ஆள் உயிர் பிழைத்தால் போதும் என்று சிட்டாகப் பறந்து வந்தான்.

புலியும் விடாமல் ''எப்படியும் இன்று இவனை ஒரு வழி செய்திட வேண்டும்'' என்ற நோக்கத்தில் துரத்திக் கொண்டே வந்தது.

இவன் சுற்றும் முற்றும் பார்த்தான்....

பக்கத்தில் ஒரு மரம் மிக உயரமாக வளர்ந்திருந்தது. உடனே அதில் ஏறி உயரமாகப் போய் ஒரு மரக்கிளையில் உட்கார்ந்தான்.

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே அண்ணாந்து பார்த்தான் அவன். தனக்கு மேலே இன்னொரு கிளையில் கரடிக்குட்டி உட்கார்ந்திருந்தது.

துரத்திக் கொண்டே வந்த புலி இந்த மரத்துக்கு அடியில் சுற்றிச் சுற்றி வந்தது... மரத்தில் அதனால் ஏற முடியவில்லை.

யோசித்தது!

''அந்த வேடனை வேட்டையாடுவதற்கு என்ன வழி? கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டும் '' என்று முடிவு செய்தது!

உச்சிக்கிளையில் அமர்ந்திருக்கும் கரடியைப் பார்த்து ''கரடியாரே! உனக்குக் கீழே ஒரு கிளையில் இருக்கும் அந்த வேடன் மிருகங்களை வேட்டையாடுபவன். அதனால் அவன் இரண்டு பேருக்கும் விரோதி! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்?'' என்றது.

'' என்ன செய்ய வேண்டும்?'' என்று கரடி கேட்டது.

''வேறு ஒன்றுமில்லை! மேலே இருக்கும் அந்த ஆளைப் பிடித்துக் கீழே தள்ளிவிடு! நான் பிடித்துக் கொண்டு போகிறேன்'' என்றது.

கரடி அதற்குச் சம்மதிக்கவில்லை. அது என்ன கூறியது தெரியுமா? ''எப்பொழுது இந்த வேடன் நான் இருக்கும் இடத்தில் ஏறிவிட்டானோ! அப்பொழுதே அவன் எனக்கு அடைக்கலம் ஆகிவிட்டான் என்று அர்த்தம். அடைக்கலமாக வந்த ஒருவனை எப்படி கீழே தள்ளி விடுவது. அது சரியானதல்ல. நான் கீழே தள்ளமாட்டேன்'' என்று கூறிவிட்டு கரடி தூங்கப் போய் விட்டது.

சிறிது நேரம் ஆகியது. இப்பொழுது கரடி நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தது. வேடன் மட்டும் விழித்துக் கொண்டு இருந்தான்.

அவனுக்கு எப்படித் தூக்கம் வரும்? புலி மரத்தடியிலேயே நின்று கொண்டிருந்தது. இப்பொழுது புலி வேடனைப் பார்த்துக் கூறியது.

''இதோபார் வேடனே! நீ இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கும் கரடியை கீழே தள்ளு! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்'' என்றது.

அந்த வேடன் யோசித்துப் பார்த்தான். எப்படியோ நான் பிழைத்தால் போதும் என்னும் மனிதகுணம் அவனுக்கும் வந்துவிட்டது! அதனால் நன்றியில்லாத ஒரு காரியத்தைச் செய்யப்போனான். அந்தக் கரடியை கீழே தள்ளி விடுவது தான் அந்தக் காரியம்.

தூங்கிக் கொண்டிருந்த கரடி அந்த சமயம் பார்த்து திடீரென விழித்துக் கொண்டு அடுத்த கிளைக்குத் தாவியது.

இப்பொழுது புலி மறுபடியும் பேச ஆரம்பித்தது.

''இதோபார் கரடியாரே! இந்த வேடன்தான் கொஞ்சம் கூட நன்றி இல்லாமல் உன்னைத் தள்ளி விடப் பார்த்தான். அப்படிப்பட்ட ஒருவனை நீ கீழே தள்ளிவிட்டால் என்ன? அவனுக்காக ஏன் வீணாக இரக்கம் காட்டுகிறாய்'' என்றது.

இப்பொழுதும் கரடி தனது கொள்கையை மாற்றுவதாக இல்லை. என்ன கூறியது தெரியுமா?


''இதோபார் புலியே இப்பொழுதும் நான் அந்த வேடனை கீழே தள்ளிவிடமாட்டேன்! ஏனென்றால் உத்தமர்கள் மற்றவர்கள் இழைக்கும் தீமைகளைப் பொருட்படுத்தமாட்டார்கள். அவர்கள் கெடுதல் செய்கிறார்கள் என்பதற்காக இவர்கள் திருப்பி அவர்களுக்குக் கெடுதல் செய்யமாட்டார்கள்! அதனாலே நான் அந்த வேடனைக் கீழே தள்ள மாட்டேன்!'' என்று உறுதியாகக் கூறியது அந்தக் கரடி.

சீதையை துன்புறுத்திய அரக்கிகளைக் கொல்வதற்கு அனுமன் அனுமதி கேட்ட போது சீதை அனுமனுக்கு கூறிய கதை இது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்....அடைக்கலம் என்று ஒருவர் வந்து விட்டால் அவர்களை எந்த வகையிலும் காட்டிக் கொடுப்பது நியாயமில்லை என்பதாகும்.

**கோ.சுவாமிநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 உலகையே உலுக்க வரும் மிகப் பெரிய சூரியச் சூறாவளி




100மில்லியன் ஹைட்ரஜன் குண்டுகளின் சக்தி கொண்ட மிகப்பெரிய சூரியப்புயல் 2012ஆம் ஆண்டு ஏற்படும் என்றும் இதனால் பூமியில் பலத்த சேதங்கள் ஏற்படும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நாடுகளின் மின்சார விநியோக அமைப்புகளும் தகவல் தொடர்பு அமைப்புகளும் பலத்த சேதமடையும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

விமானப் போக்குவரத்து, மின்னணுச் சாதன அமைப்புகள், கப்பல் போக்குவரத்திற்கு உதவும் உபகரணங்கள் முக்கியமாக செயற்கைக் கோள்கள் வேலை செய்யாது.

நாசாவின் சூரியப்பௌதீகப் பிரிவு விஞ்ஞானி டாக்டர் ''ஃபஷர்'' இது பற்றிக் கூறுகையில்:

100 ஆண்டுகளில் அசாதாரண சக்தி கொண்ட இந்த சூரியப்புயல் முதன்முதலாகத் தாக்கவுள்ளது. இதனால் பெரிய அளவுக்கு மின்விநியோகத்தடைகளும், தகவல்தொடர்பு சிக்னல்களும் இழக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

சூரியப்புயல் தாக்குகையில் சூரியனின் வெப்ப அளவு 10,000 டிகிரி பரனைட்டைக் கடந்து விடும்.

இந்த சூப்பர் சூரிய சூறாவளி இடி இடிப்பது போன்று நிகழும். பூமியின் காந்தப்புலங்களை நம்பி இயங்கும் நமது தகவல்தொழில் நுட்ப உலகம் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இந்த வகை அதிசக்தி சூரியப்புயல் 2012 ஆம் ஆண்டிலோ அல்லது நிச்சயமாக 2013ஆம் ஆண்டிலோ ஏற்படும் என்பது உறுதி. ஆனால் விளைவுகள் பற்றி இன்னமும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சூரியப்புயலால் ஏற்படும் சூரிய எரிதழல்கள் பூமியின் காந்தப் புலத்தை பாதிக்கும். ஆனால் இது மிகமிகவேகமாக நடக்கும், இடி இடிப்பது போன்ற நேரத்தில் அனைத்தும் நடந்து முடிந்து விடும் என்கிறார் நாசா விஞ்ஞானி ஃபஷர்.

இதனால் ஏற்படும் மின்விநியோக அமைப்புகள் சேத உள்ளிட்ட பிற சேதங்களைச் சீர் செய்ய மிகப்பெரிய அளவில் பணம் செலவழியும் என்பதோடு நீண்ட காலம் பிடிக்கும் என்பதும் உண்மை.

சூரியசுழற்சியில் 24ஆம் கட்டத்தை எட்டுவதால் இந்த நிகழ்வு தவிர்க்க முடியாதது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

# சுருங்கும் பூமி

சூரியனிலிருந்து கசியும் புற ஊதாக் கதிர்களின் வீச்சு குறைந்து போயுள்ளதால் பூமியின் மேற்புற வளிமண்டலம் எதிர் பாராவிதமாக சுருங்கியுள்ளதாகவும், குளிர டைந்துள்ளதாகவும் அமெரிக்க விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சூரியனின் ஆற்றல் வெளிப்பாடு வழக்கத் துக்கு மாறான அளவில் குறைந்துள்ளதாக இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு ஆண்டு கால கட்டத் தில் 90 முதல் 500 கி.மீ வரை உயரமாக பரவியிருக்கும் வான் வெளி வெப்பப்பரப்பு புற ஊதாக் கதிர்வீச்சு குறைவு காரணமாக குளிர்ச்சி அடைந்துள்ளது அல்லது சுருங்கி யுள்ளது என்று கொலராடோவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

1996ஆம் ஆண்டை ஒப்பு நோக்குகை யில் 2008அம் ஆண்டு இந்த வான்வெளி வெப்பப் பரப்பு 74 டிகிரி பரனைட் அல்லது 41 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பம் குறைந்து குளிர்ச்சியடைந்துள்ளது என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆனால் பூமியில் இதனால் என்ன மாற்றங்கள் அல்லது நிகழ்வுகள் ஏற்படும் என்பது பற்றி இந்த விஞ்ஞானிகள் எதுவும் தெரிவிக்கவில்லை

# தன் கையே தனக்குதவி



இரத்தம் தேவைப்படுவோர் தமக்குத் தாமே இரத்ததானம் செய்து கொள்ள வழி கண்டுபிடித்துப் புதிய புரட்சி படைத்திருக்கிறார்கள் கனடா நாட்டு ஆய்வாளர்கள். மனிதத் தோல் செல்களை இரத்த செல்களாக மாற்றுவதற்கான இந்த முயற்சியில் அந்நாட்டின் மெக்மாஸ்டர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஆரம்பகட்ட வெற்றியைப் பெற்றிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பல்கலைக்கழகத்தின் ஸ்டெம்செல் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி அமைப்பின் அறிவியல் இயக்குநர் மிக் பாட்டியா வும் அவரது குழுவினரும் இந்த மாற்றம் நேரடியானது என்று காட்டியுள்ளனர். அதாவது தோலில் இருந்து இரத்தத்தை உருவாக்குவதற்கு தோல் ஸ்டெம் செல்லைப் பல்வேறு வகையான மனிதச் செல்களை உருவாக்கக்கூடிய ''புளூரி பொட்டென்ட் ஸ்டெம்'' செல்லாக மாற்றிப் பின்னர் இரத்த ஸ்டெம் செல்லாக மாற்றத் தேவையில்லை.

மனிதத் தோலைப் பயன்படுத்தி இதைச் செய்ய முடியும் என்று நாங்கள் காட்டியிருக்கிறோம். இது எப்படிச் செயல்படு கிறது என்று எங்களுக்குத் தெரியும். இதை மேலும் மேம்படுத்த முடியும் என்று நம்புகிறோம் என்கிறார் பாட்டியா.

இந்தப் புதிய கண்டுபிடிப்பானது எதிர்காலத்தில் அறுவைச் சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை போன்ற இரத்தம் தேவைப் படும் சிகிச்சை களுக்கு அவரவர் தங்கள் உடல் தோலின் ஒரு பகுதியில் இருந்தே இரத்தத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக் கையை ஏற்படுத்தியி ருக்கிறது. இதுதொடர்பான மருத்துவமனை சார்ந்த சோதனை முயற்சிகள் 2012ஆம் ஆண்டிலேயே தொடங்கவிருக்கின்றன.

# 'பேஸ்புக்' விவரங்களை தரவிறக்கம் செய்யலாம்

நண்பர்கள், உறவினர்கள் இடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்ள இன்று பேஸ்புக் சமூகத்தளம் ஒரு இணைப்புப் பாலமாக இயங்கி வருகிறது. பலர் தங்களுடைய படங்களை அடுத்து கலந்து கொள்ளப்போகும் நிகழ்வுகள், குடும்பத்தில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள், அனுபவங்கள், அன்றாட எண்ணங்கள் ஆகியவற்றை இதில் பதிந்து வைக்கின்றனர். இவற்றை நண்பர்களும், உறவினர்களும் பார்த்து அறிந்து கொள்ள அனுமதியும் அளிக்கின்றனர்.




இந்த தகவல்களை எப்படித் தரவிறக் கம் செய்வது என்று இங்கு பார்க்கலாம். முதலில் பேஸ்புக் தளத்தில் உங்கள் கணக்கில் உள்நுழைந்து கொள்ளுங்கள். உள்ளே நுழைந்த பின்னர் Account என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். பின்னர் Account Settings என்பதில் கிளிக் செய்தி டவும். அடுத்து Learn More என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு கிடைப்பதில் கீழிருந்து இரண்டாவதாக உள்ள Downlo ad Your Information என்பதில் கிளிக் செய்திடவும். நீங்கள் எது குறித்து கிளிக் செய்கிறீர் கள் என்பது குறித்து சிறிய விளக்கம் ஒன்று தரப்படும். இங்கு Download என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.

இப்போது உங்களைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் திரட்டப்பட சிறிது நேரம் எடுத்துக் கொள்ளப்படும். பின்னர் நீங்கள் தந்துள்ள இமெயில் முகவரிக்கு நீங்கள் விரும்பிய தகவல்கள் அடங்கிய சுருக்கப்பட்ட ஸிப் பைல், டவுண்லோட் செய்திடத் தயாராய் இருப்ப தாக செய்தி கிடைக்கும். இங்கு கிளிக் செய்து உங்கள் இரகசியக் குறியீட்டை அடையாளம் உறுதிப்படுத்த பெறப்பட்ட பின் ஸிப் பைல் உங்கள் கணினிக்கு டவுண்லோட் ஆகும். படங் கள், பைல்கள் என அனைத்தும் சுருக்கப்பட்ட பைல் உங்கள் கணினியை வந்தடையும்.

# ஏலியன்களும் பூமிக்கு வரப்போகிறார்களா?

வேற்றுக் கிரகவாசிகள் அதாவது ''ஏலியன்கள்'' பூமிக்கு வந்து மனிதர்களுடன் சண்டையிடுவது போல் நாம் ஹொலிவுட் திரைப்படங்களில் பார்த்துள்ளோம். அது விரைவில் நிஜமாக வாய்ப்பு உண்டு என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்த கருத்துப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி அமைதி நடவடிக்கைகள் குழு சார்பில் ''ஏலியன்கள் பூமியை தாக்கினால் என்ன செய்வது'' என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்படி பூமிக்கு வருபவர்கள் வன் முறை வெறி யர்களாக இருப்பர் எனவும் இங்குள்ள இயற்கை வளங்களைச் சுயநலம் காரணமாகச் சுரண்டுவர் எனவும் அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



பூமியைத் தாண்டியுள்ள கிரகங்களில் ''ஏலியன்'' போன்ற உயிரினங்கள் ஏதேனும் இருக்கிறதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்படி ''ஏலியன்'' அல்லது பிற உயிரினங்கள் இருந்தால் அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான சாத்தியக் கூறுகளையும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

அவ்வாறு ''ஏலியன்கள்'' பூமிக்கு வரும்போது நாம் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். பூமிக்கு வரும் ''ஏலியன்கள்'' வன்முறையில் ஈடுபட்டால் அவர்களை விண்வெளி அமைதி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக அமெரிக்கா சார்பில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள பிரிவினர் சமாளிப்பர் எனவும் தெரிவித்தனர்.

இதற்காக உலக நாடுகள் அனைத்தும் இந்த விடயத்தில் அரசியல் மற்றும் சாதி மதபேதம் ஏதும் இல்லாமல் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு இதற்காக சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும் எனவும் விஞ்ஞானிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் அமெரிக்க விஞ்ஞானிகளின் இந்த கருத்துக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ் ஞானிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பரிணாமவியல் பேராசிரியர் 'சைமன் கான்வே மோரிஸ்' கூறும்போது ''பூமியைத் தாண்டியுள்ள இந்தப் பிரபஞ்சத்தில் ஏலியன் என குறிப்பிடப் பட்ட யாரும் இருக்க வாய்ப்பில்லை. அப்படி மற்ற கிரகங்களில் உயிரினங்கள் இருந்தால் அது டார்வின் கொள்கை அடிப்படையில் தான் தோன்றி வளர்ச்சி பெற்றிருக்க முடியும்.

ஹொலிவுட் படங்களில் வருவது போல் விகாரமான தோற்றங்களில் இருக்க வாய்ப்பில்லை. மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டு பூமியில் உள்ள வளங்களை ஒருபோதும் சுரண்டவும் வாய்ப்பில்லை. ஏலியன் குறித்த அச்சம் தேவையற்றது''- என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரணவாய், மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

வடமராட்சியின் கல்விச் செயற்பாடுகளில் வடமராட்சி ஆரம்பப் பாடசாலைகளுக்குக் காலத்தால் அழியாத புகழ் உண்டு. அந்தவகையில் பிள்ளை நேயப் பாடசாலையாக இயற்கை வளம் கொழிக்கும் கரணவாய் பகுதியில் அமைந்திருந்து தனது ஆரம்பக்கல்வி மூலம் நல்ல எதிர்காலச் சந்ததியை எமது மண்ணுக்குத் தந்து கல்விப்பணியாற்றி வருகின்றது கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. இந்தப்பாடசாலை வடமராட்சிப் பிரதேசத்தில் கரவெட்டிக் கோட்டத்தில் சாதனை மட்டும் உயர்வான பிள்ளை நேயப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இப் பாடசாலை ஆரம்பகால வரலாறு தொன்மையானது. நூற்றாண்டு கடந்த சிறப்பு வாய்ந்தது. அந்தவகையில்1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய காலத்தில் போதிய வசதிவாய்ப்புக்களின்றி இந்தப் பாடசாலை இயங்கிவந்தது. ஆனால் இன்று கட்டடவசதிகள்,தளபாடவசதிகள்,நீர்வசதி ,மலசலகூடவசதிகள், நூலக வசதி,சமையலறை வசதிகள், விளையாட்டுமுற்ற வசதி, கணினி ஆய்வுகூட அறை, சிறுவர் பூங்கா என்பன போன்ற பல்வேறு வளங்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்தப் பாடசாலையில் 197 மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதுடன் 10 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

இவர்களின் அயராத அர்ப்பணிப்பு மிக்கசேவையின் பிரதிபலனாகப் பாடவிதான, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் பாராட்டப்படக் கூடிய அடைவுகளைப் பெற்றுவருகின்றனர். 2009 ஆம் ஆண்டு தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 28பேர் தோற்றி 13 மாணவர்கள் 100புள்ளிகளுக்கு மேல் பெற்றதுடன் ஒரு மாணவன் சித்தியடைந்தும் இருந்தான். 2010 ஆம் ஆண்டு இடம் பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 38 பேர் தோற்றி 27பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றதோடு 5 மாணவர்கள் சித்தியடைந்தமை கல்வி வளச்சியைக் காட்டுவதாக உள்ளது. இது பாராட்டப் படக்கூடிய சாதனை அடைவாகும். மற்றும் இந்தப் பாடசாலையில் குருளைச் சாரணர் இயக்கம் சிறப்பாக இயங்கி வருகின்றது. ஒரே தடவையில் குருளைச் சாரணர் சின்னம்சூட்டும் வைபவம் முதன்முதலாக இந்தப்பாடசாலையிலேயே இடம்பெற்றது.

இந்தப் பாடசாலையின் தற்போதைய அதிபராக கிருஸ்ணாகரன் கடமையாற்றி வருகின்றார். இவரின் நிர்வாகத்திறன் பாடசாலைக்கு மேலும் பல அபிவிருத்திகளையும் வெற்றிகளையும் பெற்றுத் தந்த வண்ணம் உள்ளன.

அந்தவகையில் 2008 ஆம் ஆண்டு வடமராட்சியின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக இந்தப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டு அன்றைய யாழ். அரச அதிபராக இருந்த கே.கணேஷ் அவர்களால் பாடசாலை அதிபர் கிருஸ்ணாகரனுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. இதே வேளை இந்தவளர்ச்சிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப்பணிப்பாளர், பெற்றோர்,நலன் விரும்பிகள் ஆகியோர் பெரும் பங்காற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தப்பாடசாலை மேலும் அபிவிருத்தி அடைந்து தனது கல்விப்பணியைத் தொடர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு. ✱

தொகுப்பு:ஹரிஸ்
வடமராட்சி வார வலம்

# பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்



யாழ்.மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசம் உதைபந்தாட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் பிரதேசமாக விளங்கிவருகின்றது. அந்தவகையில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் வரலாறு முக்கியத்துவம் பெற்றது. அண்மையில் தேசியப் போட்டியொன்றில் வெற்றிபெற்றுச் சாதனை படைத்து வடமராட்சிப் பிரதேசத்திற்குத் தேசிய ரீதியில் பெரும் புகழ் ஈட்டித் தந்துள் ளது பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக். இந்த லீக் பற்றிய ஒரு வரலாற்று நோக்கினை ஆராயுமிடத்து அந்த நோக்கில் வடமராட்சியின் உதைபந்தாட்ட வரலாறு முக்கியத்துவம் பெறுகின்றது.

வடமராட்சியில் உதைபந்தாட்டம் ஆரம்பிப்பதற்கு வதிரி மக்கள் காரணமாக இருந்தார்கள். வதிரி மக்களின் பாதணித் தொழில் இலங்கை பூராகவும் பிரபல்யம் பெற்ற காலத்தில் இரத்தினபுரி, பதுளை, கண்டி போன்ற இடங்களில் தொழிலை மேற்கொண்டனர். இக்காலத்திலிருந்த பிரித்தானிய பாதுகாப்பு படையினர் உதைபந்தாட்டத்தை காலி, மாத்தறை போன்ற கரையோரப் பிரதேசங்களில் விளையாடும்போது இந்த மக்கள் அவர்களுடன் சேர்ந்து உதைபந்தாட்டத்தைக் கற்று வடமராட்சியிலும் இந்த விளையாட்டு அறிமுகம் செய்தனர். இந்தக் காலத்தில் இந்தப்பிரதேச மக்கள் பலாலியில் தரித்து நின்ற றோயல் விமானப்படை வீரர்களுடன் விளையாடினர்.

இருப்பினும் 1972 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வடமராட்சியில் உதைபந்தாட்டம் முக்கியத்துவம் பெற்றது. இந்த ஆண்டில் உதைபந்தாட்டத்திற்காகப் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் எனும் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளராக இருந்த அமரர் வி.கே. ஆறுமுகம் என்பவர் இக்கட்டமைப்பை ஸ்தாபித்தார். இதனால் வடமராட்சியில் சிதறிக்கிடந்த உதைபந்தாட்டம் ஒரே குடையின் கீழ் ஒருங்கமைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் ஏழு கழகங்கள் மாத்திரமே லீக்கில் இணைந்து உதைபந்தாட்டத்தை முன்னெடுத்தன. இந்தியாவில் விளையாட்டுத்துறைசார் பயிற்சி பெற்ற த.ரட்ணசிங்கம், சி.ஜோதிரவி ஆகியோர் பயிற்றப்பட்ட பயிற்சியாளர்களாக இருந்து கழகங்களைப் பயிற்றுவித்தனர். இதன் பயனாகப் புதிய கழகங்கள் லீக்கில் இணைப்பு பெற்றன. 1979 ஆம் ஆண்டில் தேசிய பயிற்றுநரின் பயிற்சிக்காக தி.வரதராஜன் , பொ.பொன்ராஜன் ஆகியோர் அனுப்பப்பட்டனர். பின் மேற்கூறிய இருவரும் ஜேர்மன் நாட்டின் தேசிய பயிற்சிக்கு அனுப்பப்பட்டு இவர்கள் மூலம் வடமராட்சிப் பிரதேச கழகங்கள் பயிற்சியைப் பெற்றன. இதன் மூலம் ஆர்வம் கொண்ட புதிய கழகங்கள் லீக்கில் இணைந்தன. 16 கழகங்களுடன் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் புதிய உத்வேகத்துடன் லீக் மறுசீரமைக்கப்பட்டு நவீன தொழில்நுட்பம் கொண்ட ஒலிம்பிக் சொலிடரிக்டி பயிற்சி நெறிக்காக தி.வரதராஜனும் தேசிய பயிற்சி நெறிக்காக சிவதயாபரனும் அனுப்பப்பட்டதன் பயனாக லீக்கின் முன்னேற்றம் வலுப்பெற்றது. இந்தக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பயிற்சி முகாம்களும் மத்தியஸ்தருக்கான பயிற்சியும் பெரும் பலனைத் தந்தது. இந்தக் காலத்தில் கல்வித் திணைக்களத்தினூடாக இணைப்பை லீக் பெற்றது. இதனால் பாடசாலையில் இருந்து வெளியேறிய மாணவர்கள் உடனுக்குடன் லீக்கில் இணைந்து நுட்பமான பயிற்சிகளை அறிந்ததன் பிரதிபலனாக வடமராட்சியில் உதைபந்தாட்ட வீரர்கள் புதிது புதிதாக உருவாகக் காலாகியது.

பிற்காலத்தில் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் இந்த லீக் அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டுப் பாடசாலை மாணவர்கள் புதிய உதைபந்தாட்ட நுட்பங்களை அறியத் தூண்டுகோலாக இருந்தது. இதனால் வடமராட்சிப் பாடசாலைகள் உதைபந்தாட்டத்தில் மாவட்ட, மாகாண, தேசிய நிலையில் வெற்றி பெறும் சூழலும் உருவானது. பின்னர் நாட்டின் யுத்த சூழ்நிலை வடமராட்சியின் உதைபந்தாட்டத்தை ஆட்டங்காண வைத்தது. ஆனபோதும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது உதைபந்தாட்டத்தை வடமராட்சியில் முன்னெடுத்தது.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட மத்தியஸ்தருக்கான பரீட்சைகள் நடத்தப்பட்டுப் பல புதிய மத்தியஸ்தர்கள் உருவாக்கப்பட்டனர்.

இந்த லீக் அங்கத்தவர்கள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட நிர்வாகமும் முகாமைத்துவமும் என்ற கருத்தரங்கில் கலந்துகொள்ளும்ண்

வாய்ப்புக்கிடைத்தது. இதனால் கழகங்களும் உதைபந்தாட்டம் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றது.

இதன் பிரதிபலனாக இந்த லீக்கில் அங்கத்துவம் பெற்ற டயமன்ஸ் கழகம், பிரேமியன் லீக் சுற்றுப்போட்டியில் கொழும்பு வரை சென்று விளையாடியது. இதே வேளை இக்கழகத்தைச் சேர்ந்த ம.பிறேம்குமார் தேசிய உதைபந்தாட்டப் பயிற்சிக்காக உள்வாங்கப்பட்டார். இதன்பின் இந்த லீக்கின் தலைவராகப் பதவி யேற்ற டி.எம்.வேதாபரணம் சான்றிதழ் பெறாத பயிற்றுநராகப் பல கழகங்களுக்கு நேரடியாகச் சென்று பயிற்சிகளை வழங்கினார்.

இவர் சான்றிதழ் பெறாதபோதும் மாவட்ட அணியிலும் தேசிய அணியிலும் விளையாடிய அனுபவத்தைக் கொண்டு சிறப்பாகப் பயிற்சி வழங்கினார். இந்த வெற்றிகளின் பிரதிபலனாக 16 கழகங்கள் அங்கத்தவர்களாக இருந்த பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், 36 கழகங்களாக மாற்றம் கண்டது. 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இதன் செயலாளராக வரதராஜன் இருந்து வருகின்றார். மேலும் பல வெற்றிகளையும் பெற்று வரும் இக்கழகம் வெற்றிகளுக்கெல்லாம் மகுடம் வைத்ததைப்போல அண்மையில் தேசிய மட்டத்தில் பல தேசிய அணிகளோடு மோதி வடமராட்சியின் உதைபந்தாட்டத் திறனை தேசிய ரீதியாக அம்பலப்படுத்தியது.

அண்மையில் இடம்பெற்ற போட்டியில் கொழும்புவரை சென்று 43 அணிகளுடன் போராடி மகத்தான சாதனையை நிலை நிறுத்தியது. இப்போட்டியில் முதல் சுற்று விலகல் முறையிலும் அடுத்த சுற்று லீக் முறையிலும் நடத்தப்பட்டது. கடந்த வருடங்களில் சம்பியன் விருதை பெற்றுக் கொண்ட பல அணிகள் இச்சுற்றில் கலந்து கொண்டன. அந்தவகையில் யாழ். உதைப் பந்தாட்ட லீக், இலங்கை விமானப்படை லீக், மட்டக்களப்பு லீக், அநுராதபுரம் லீக், ஹற்றன் லீக், நீர் கொழும்பு லீக், சிவில் பாதுகாப்புப் படை லீக் போன்ற பல உதைப் பந்தாட்ட லீக்குகளுடன் நேரடியாகக் களம் இறங்கி மோதி வெற்றிபெற்றது.

அந்தவகையில் இலங்கை உதைப் பந்தாட்டச் சம்மேளத்தினால் சிரேஷ்ட உதைப்பந்தாட்ட லீக்குகளுக்கு இடையிலான இந்த போட்டியின் இறுதிச்சுற்று கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் சிவில் பாதுகாப்புப்படை உதைப்பந்தாட்ட லீக்குடன் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் இந்த லீக் வெற்றிவாகை சூடியது. இந்தப் போட்டி இடம்பெறுவதற்கு முதல் நாள் இந்த லீக் அணி வீரர்களை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, பாரம்பாரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரின் இல்லத்தில் வைத்து சந்தித்து வீரர்களை ஊக்குவிக்கும்முகமாக அமைச்சரின் நிதியில் இருந்து அன்பளிப்பாக 136,000 ரூபா காசோலையை வழங்கினார். இதன் மூலம் ஜனாதிபதி உதைப்பந்தாட்டத் துறைமீது கொண்ட பற்றுதல் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை முதல்நாள் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ.சந்திரசிறி அவர்களை லீக் வீரர்கள் கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். அவர் ஒவ்வொரு வீரர்களுக்கும் 8000 ரூபா பெறுமதியான உதைப்பந்தாட்டத் தொகுதியை ஆளுநர் நிதியில் இருந்து வழங்கினார். இதேவேளை ஜனாதிபதி அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட நிதி, வீரர்களின் போக்குவரத்துச் செலவு உட்பட ஏனைய செலவுகளுக்குப் பேருதவியாக அமைந்தது.இதேவேளை இந்த வீரர்களை கௌரவிக்கும்முகமாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவின்போது இவர்கள் ஜனாதிபதியால் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்த லீக் தொடர்ந்து தனது சாதனைப் பயணத்தை புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்க வேண்டும், வடமராட்சியின் உதைபந்தாட்டம் மேலும் மேலும் மெருகூட்டப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் கீல்ஸ் முதலாவது இடத்தில்



ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க Top 20 விருது வழங்கும் வைபவத்தில் உரை நிகழ்த்துகிறார்.

இம்முறை Business Today Top 20 தெரிவில் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் முதலாவது இடத்தை அடைந்து விருது பெற்றது.

2009 - 2010 நிதியாண்டுக்கான இலங்கையின் மிகச் சிறந்த கம்பனிகளை Business Today Top TWENTY அடையாளம் கண்டு விருது வழங்கும் வைபவம் கடந்த 13ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. கடந்த வருடத்தில் ஏனையவர்களையும் விட சிறப்பாகச் செயற்பட்டு வெற்றிகளைக் குவித்த முதல் 20 கம்பனிகள் இவ் விருது வழங்கும் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டன.

இந்த வருடம் தனது அங்கீகாரத்தை வழங்குவதற்காக 10 மேலதிக கம்பனிகளை Business Today Top தெரிவு செய்துள்ளது.

கடந்த பன்னிரண்டு வருடங்களாக Business Today Top 20 விருது பெற்ற கம்பனிகள் பெரும்பாலும் தொடர்ந்தும் தமது அதே நிலையைத் தக்க வைத்துக் கொண்டதுடன், புதிதாக வளர்ந்து வரும் கம்பனிகளில் ஒருசிலவே இம்முறை விருதைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தது.

விருது வழங்கும் நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜாபக்ஷவும் திருமதி. புஷ்பா ராஜபக்ஷவும் கலந்துகொண்டனர். பிரதம பேச்சாளராக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரத்துங்க கலந்துகொண்டார்.

விருது வழங்கலில் கடந்த வருடத்தில் மூன்றாவது இடத்தை வகித்த ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் இம்முறை முதலாவது இடத்தைத் தட்டிக் கொண்டுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் புகிட்டரா போன்ற நிறுவனங்கள் முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளன.

இலங்கைப் புகையிலைக் கம்பனி நான்காவது இடத்தையும், இலங்கை வர்த்தக வங்கி ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளன. இவற்றுடன், கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் ஆறாவது இடத்திலும், ஸ்ரீலங்கா ரெலிகொம் ஏழாவது இடத்திலும் உள்ள அதேவேளை DFCC வங்கி எட்டாவது இடத்தை எட்டியுள்ளது. அடுத்த ஒன்பதாவது மற்றும் பத்தாவது இடங்களை முறையே ஹேலீஸ் நிறுவனமும் இலங்கை டிஸ்டிலரீஸ் கம்பனியும் உறுதிசெய்துள்ளன.

(த)

# வெஸ்ரேன் யூனியன் நடத்திய சீட்டிழுப்பு

WESTERN UNION
MONEY TRANSFER

கடந்த மூன்று மாதங்களாக MMBL மணிமாஸ்டர் முகவர் ஊடாக, வெஸ்ரேன் யூனியன் மூலம் பணம் பெற்றுக்கொண்ட எமது வாடிக்கையாளர்களுக்கான மூன்று தடவைகள் இழுக்கப்பட்ட சீட்டிழுப்பின் பிரகாரம் 13 பேருக்கு ஒரு பவுண் எடையுடைய தங்கப் பதக்கங்களும் ஒருவருக்கு ஐரேப்பா பயணத்துக்கான பயணச் சீட்டும் கிடைக்கப்பெற்றது. கிட்டத்தட்ட 8 இலட்சம் பெறுமதியான பரிசில்கள் கிடைக்கப் பெற்றன.

அவர்களின் விவரம் வருமாறு: பொன்னம்பலம் தம்பையா (கரந்தன்வீதி, நீர்வேலி), கருணாந்தராஜா பிறேமகலா (பிரம்பன்குளம் வீதி, யாழ்ப்பாணம்), அமல உட்பகநாயகி பாக்கியநாதன் (போயிட்டி இளவாலை), உருத்திரநாயகி நடராஜா (அராலி மேற்கு, வட்டுக்கோட்டை), ரகுநாதன் சபாபதி (தனங்கிளப்பு, சாவகச்சேரி), சண்முகலிங்கம் ராணி (கம்பர்மலை, வல்வெட்டித்துறை), தர்சினி நந்தீஸ்வரன் (நெடும்புலம் சுன்னாகம்), இந்திராதேவி கஜேந்திரராசா (நீரியகுளம் வீதி, நெலுக்குளம், வவுனியா), சுரேந்திரநாத் கிருஷ்ணபிள்ளை (அன்னை வேளாங்கன்னி, சமயபுரம் வவுனியா), லீலாதேவி ஆறுமுகம் (பன்னாலை தெல்லிப்பழை), ஸ்ரீபவாநாதன் சிவஞானம் (4ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை), சுபாஷினி மகேஸ்வரன் (பிள்ளையார் கோயில் வீதி, சாவகச்சேரி), தவநிதி தனபாலசிங்கம் (சாவகச்சேரி யாழ்ப்பாணம்),

எஸ். அன்னலட்சுமி (சலம்பைக்குளம், வவுனியா) ஐரோப்பாவுக்கான பயணச் சீட்டு.

(த)

# அடுத்த தலைமுறை ஜி.பி.எஸ்.சாதனங்கள்

ஜி.பி.எஸ். (Global Positioning System) என்றழைக்கப்படும் சாதனங்கள், சற்றலைட்டின் உதவியுடன் நம்மை வழி நடத்தும் சாதனங்களாக அறிமுகப்படுத்தப்பட்டன.

அப்போது அவை தொழில் நுட்பத்தில் புதியதொரு புரட்சியையும், சாதனையையும் ஏற்படுத்தின என அறியப்பட்டது. அதன் பின்னர், பெரிய பளிச் என்ற திரைகளுடன், ஸ்மார்ட் போன்கள் வந்தன. ஜி.பி.எஸ். சாதன வசதிகளைக் குறைந்த விலையில் தரும் சாதனங்களாக இவை அமைந்தன. இவை இயக்குவதற்கு எளிதானவையாகவும், ஜி.பி.எஸ். சாதனங்களைக் காட்டிலும் விலை குறைந்தவையாகவும் இருந்தன. அதனால் மக்கள் ஜி.பி. எஸ். வசதி கொண்ட ஸ்மார்ட் போன்களையே அதிகம் நாடினார்கள்.

இதனாலேயே, ஜி.பி. எஸ். சாதனங்களை வடிவமைத்த நிறுவனங்கள், நவீன தொழில் நுட்ப அடிப்படையில் கூடுதல் வசதிகளுடன் புதிய சாதனங்களைத் தரத் தொடங்கி உள்ளன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

**இணைப்பின்றி கூகுள் மேப்ஸ்:** ஸ்மார்ட் போனில் ஜி.பி.எஸ். வசதிகளைப் பெற மொபைல் இணைப்புப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அண்மையில் கூகுள் அறிவித்தபடி, கூகுள் மேப்ஸ் டேட்டா வினை ஸ்டோர் செய்து வைத்துப் பயன்படுத்தும். இதனால் எந்த இடத்திலும் இணைப்பு எதுவு மின்றி நாம் ஜி. பி.எஸ். வசதிகளைப் பெறலாம்.

**ஜி.பி.எஸ். வசதியுடன் கேம்கார்டர்:** ஜி.பி.எஸ். மூலம் ஜியோடேக்கிங் வசதி, அதாவது எந்த இடத்தில் நீங்கள் படம் எடுக்றீர்கள் என்ற தகவலைப் பதியும் வசதி கிடைக்கிறது.

**காருக்கான பிளாக் பாக்ஸ்:** தனியாகச் செயற்படும் ஜி.பி. எஸ். சாதனங்கள், இனி அது இணைக்கப்பட்டுள்ள வாகனம், எங் கெல்லாம் செல் கிறது என்பதைப் பதிவு செய்து வைத்திடும். இதன் மூலம் ஒரு வாகனம் தற்போது எங்கிருக்கிறது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

**ஜி.பி.எஸ். ஜாம்மர்:** உங்களுடைய வாகனம் ஒரு ஜி.பி. எஸ். சாதனத்தால் அறியப்படுவதனைத் தடுக்கும் ஜி.பி.எஸ். ஜாம்மர்கள் சந்தைக்கு வர இருக்கின்றன. இவற்றை உங்கள் கார்களில் இணைத்து விட்டால், எந்த சற்றலைட்டும் உங்கள் கார் நடமாட்டத்தினைக் கண்டறிய முடியாது.

# கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஹேலீஸ் ஊக்கம்

ஹேலீஸின் உப நிறுவனமான ஹேலீஸ் கொன்சியூமர், இந்த நாட்டிலுள்ள இளம் கிரிக் கெட் வீரர்களின் வளர்ச்சிக்கு ஊக்க மளித்து அவர்களைத் தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்ல உள்ளது. அதற்காக கழக மட்டத்திலான கிரிக்கெட்டிற்கு அனுசரணை வழங்கும் பொருட்டு ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்புடனும் கொழும்பு கோல்ட்ஸ் கழகத்துடனும் (colts) ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

The World Of
Hayleys
Since 1878

தேசிய கிரிக்கெட் அணிக்குத் தேவைப்படும் இளம் வீரர்களை இனங்கண்டு வாய்ப்பளிப்பதில் கழக கிரிக்கெட் இப்பொழுது முக்கிய இடத்தை வகிக்கிறது. டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு இத்தகைய ஓர் அமைப்புமுறை அவசியமானதாகும்.

இலங்கையிலுள்ள பல்வேறு தரப்பு மக்களினதும் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு ஹேலீஸ் நிறுவனம் எப்போதுமே உதவி வழங்கி வந்துள்ளது. இந்த நற்பணிகளின் பயனாகவே இலங்கை வர்த்தகச் சம்மேளனம் 2010ஆம் ஆண்டின் 'மிகச் சிறந்த நிறுவனப் பிரஜை' என்ற விருதுக்கு ஹேலீஸ் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தது. ஹேலீஸ் இந்த விருதினைப் பெற்ற நான்காவது தடவை இதுவாகும்.

விளையாட்டுத் துறைக்கான அனுசரணையில் முதன் முறையாகப் பிரவேசித்துள்ள ஹேலீஸ், இலங்கையிலுள்ள பிரதான கிரிக்கெட் கழகங்களில் ஒன்றான கொழும்பு கோல்ட்ஸ் கழகத்துடன் பங்காளித்துவ உறவை ஏற்படுத்துவது குறித்துப் பெருமையடைகிறது. திறமையுள்ள இளம் கிரிக்கெட் வீரர்களின் வளர்ச்சியில் தனித்தனியாகவும் தேசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் அபிவிருத்தியில் ஒட்டுமொத்தமாகவும் ஹேலீஸ் கவனம் செலுத்தவிருக்கிறது.

கோல்ட்ஸ் கழகம் 30ஆண்டுகளுக்கு மேலாக கிரிக்கெட் விளையாட்டுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது. பிரபல ஆரம்பப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ், தற்போதைய தேசிய அணியிலுள்ள திறமைமிக்க இளம் வீரரான அஞ்ஜலோ மத்தியூஸ் போன்ற பல கிரிக்கெட் வீரர்களை இக்கழகம் உருவாக்கியுள்ளது. நுவன்குலசேகர, ஜீவந்த குலதுங்க, திஸ்ஸர பெரேரா, மலிந்த வர்ணபுர போன்ற வீரர்களும் இக்கழகத்தின் ஊடாகவே தேசிய மட்டத்திற்கு உயர்ந்தனர்.

# விபத்துக்களைக் குறைக்க 3ஜி கருவி இந்திய மாணவனின் புதிய கண்டுபிடிப்பு

வாகனங்களால் ஏற்படும் வீதி விபத்துக்களை 80 சதவீதம் குறைக்கக் கூடிய 3ஜி கருவியை இந்திய மாணவன் மணிகண்டன் கண்டுபிடித்துள்ளார்.

விருதுநகரில் நடந்த 37 ஆவது மாநில அளவிலான ஜவகர்லால் நேரு அறிவியல் கண்காட்சியில் மானாமதுரை மாணவன் மணிகண்டனின் புதிய கண்டுபிடிப்பான '3ஜி' வாகன கட்டுப்பாட்டு கருவி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

உலகில் ஆண்டு ஒன்றில் சுமார் 12 லட்சம் பேர் வீதி விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். டூவீலரான மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் 75 சதவீதம் அதிகரித்துள்ளன. இதைக் கட்டுப்ப



டுத்தும் விதமாக சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒ.வி.சி., மெட்சிப் பாடசாலை மாணவன் வி.ஆர்.மணிகண்டன், ஜி.எஸ். எம். தொழில்நுட்பத்தினாலான கருவி மூலம் '3ஜி' வாகனக் கட்டுப்பாட்டுக் கருவியைக் கண்டுபிடித்துள்ளார்.

உரிய அலுவலகத்தில் மோட்டார் சைக்கிளைப் பதிவு செய்யும் போது அதில் இந்தச் சாதனத்தைப் பொருத்தலாம்.

இதன் விலை இந்திய நாணயப்படி 2,200 ரூபா.

இதைப் பொருத்திய பின் இதற்காகத் தனி எண் தரப்படும். வாகனம் திருட்டுப்போனால் அதற்குரிய எண்ணை மொபைல் போன் மூலம் அழைத்தால் வாகனம் நின்று விடும். அதிலிருந்து எச்சரிக்கை ஒலி எழும்பும். வாகனம் இருக்கும் இடத்தை எஸ்.எம்.எஸ் மூலம் தெரிவிக்கும்.

மேலும் 'ஹெல்மெட்' அணிந்த பின்பே வாகனத்தை இயக்க முடியும். வாகனம் விபத்துக்குள்ளாகும்போது சம்பந்தப்பட்ட மொபைல் எண்ணிற்கு இந்த இடத்தில் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது என எஸ். எம். எஸ். தரும்.

ஸ்டாண்ட் போட்டிருக்கும் போது மோட்டார் சைக்கிளை இயக்க முடியாது குறிப்பிட்ட இடங்களில் எத்தனை கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்கும். 'பிரேக் ஷூ' தேய்ந்து விட்டால் வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கை செய்யும்.

இரவு நேரங்களில் மட்டுமே முகப்பு விளக்குகள் எரியும். பகலில் 'ஒன்' பண்ணினாலும் எரியமாட்டா.


'எப்சி' எடுக்க வேண்டிய திகதியை அறிவுறுத்தும் திருட்டு வாகனங்களோ வீதிகளில் தவறு செய்யும் வாகனங்களோ 200 மீற்றரில் வரும்போதே நெடுஞ்சாலை கண்காணிப்புப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கும்.

வாகன 'பயோடேட்டா' வழங்கும் விதமாக '3ஜி' கட்டுப்பாட்டுக் கருவையைக் கண்டுபிடித்துள்ள மணிகண்டனுக்கு விருதுநகரில் நடந்த மாநில அறிவியல் கண்காட்சியில் முதல் பரிசு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

11



யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்

விக்கிலீக்ஸின் அடுத்த பாய்ச்சல் சோமாலிய விலிருந்து கென்யாவுக்குத் தாவியது. இதற்கு யூலி யனின் கைக்கொண்ட ஸ்டைலே தனி.

சிங்கத்தின் குகைக்குள்ளேயே புகுந்து, அதன் வாலைப்பிடித்து இழுத்துவிட்டு, அங்கேயே சாவ காச மாக காலை நீட்டி உறங்கும் தைரியம் யாருக்கு வரும்? ஆனால் கென்யாவில் யூலியன் செய்த காரியம் இப்படிப்பட்டதாகவே இருந்தது.

ஊழலில் உலகிலேயே கொடிகட்டிப் பறந்த - பறக் கின்ற - நாடு கென்யா. எங்கும் ஊழலின் தாண்டவம் நிகழ்ந்ததால் அப்பாவி மக்கள் தொடர்ந்தும் பட்டினி யால் வாடுகின்ற சூழலே நிலவியது ஒவ்வொரு முறை யும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களும் அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களின் ஊழல்களை வெளிப் படுத்தி, நாம் அதனை ஒழித்து மக்களுக்கு புதிய வாழ் வினைப் பெற்றுத்தருவோம் என்ற வாக்குறுதிகளை வழங்கிவிட்டே அரியணையில் ஏறுவது வழக்கம். ஆனால் அந்த அரியணையின் ஏறியவுடனேயே ஆட்சி யாளர்களை ஊழல் பேய் - அவர்களை அறியாமலே - தொற்றிக் கொண்டு விடுகின்றது. அதனால் ஆட்சியாளர்கள் சுகபோகத்தில் திளைக்க, மக்கள் பட் டினி வாழ்வுக்குள்ளேயே தமது ஆயு ளைத் தொலைத்துவிடுவது கென்யா வில் வாடிக்கையாகிப்போன விடயம்.

இதில் இன்னொரு விடயமும் இருக் கிறது. எல்லா அரசுகளும் ஊழலையே தமது பிரதான தொழிலாகக் கொண்ட மையால், தமக்கு முன்பருந்த ஆட்சியா ளர்களின் ஊழல்விடயங்களை வெளிக் கொண்டு வரா மல் அமுக்கிவிடுகின்றன. ஏனெனில் அவ்வாறு வெளிப்படுத்தினால் தம்மையும் அடுத்து வரும் ஆட்சி யாளர்கள் அம்பலப்படுத்தி அதில் குளிர் காய்ந்து விடுவார்கள் என்ற பயம்தான். இதனால் இயன்றவரைக்கும் தமது தில்லாலங்கடி வேலைகளை ஆதாரமின்றியே செய்துமுடித்தனர்.ஊழல் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டபோதும் தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் எல்லோருமே சுதந்திரமாக உலாவமுடிந்ததுடன், மோசடி செய்த சொத்துக்களை வைத்துக் கொண்டு தொடர்ந்தும் அவர்கள் ராஜபோக வாழ்க்கையை அனுபவிக்க முடிந்தது. ஆனாலும் பாவத் தின் சம்பளம்பல நாள் கழிந்தாலும் கட்டாயம் கிடைக் கத்தானே வேண்டும். கென்ய அரசியல்வாதிகளும், அவர்களின் வால்களும் செய்த பழம் இருக்கத் தோல் விழுங்குகின்ற அத்தனை வேலைகளுக்கும் வட்டி யோடு சம்பளம் கொடுப்பதற்காக கென்யாவுக்கு வந்து சேர்ந்தான் யூலியன் அசாஞ்சே.

கென்யாவில் ஒருநொடியைக் கூட வீணாக்க யூலி யன் விரும்பவில்லை. ஒரு தடவை முடிவெடுத்து விட் டால் அதற்குப் பிறகு காரியம் முடிந்தபிறகுதான் உட் காருவது அவனது வழக்கம். கென்யாவில் அதுவரை ஆட்சியில் இருந்த அமைச்சர்கள், ஜனாதிபதிகள், நிர் வாக அதிகாரிகள், இராணுவத்தளபதிகள் எல்லோரின தும் விவரங்களை மூன்றே நாளில் திரட்டினார். குற்றம் செய்தவர்கள் எல்லோருமே தம்மையுமறியாமல் ஏதாவது ஒரு தடயத்தை விட்டுவிட்டே செல்வார்கள் என்பது யூலியனின் அசைக்கமுடியாத எடுகோள்.

அதனடிப்படையிலேயே அவனது தேடுதல்கள் அமைந்திருந்தன. முள்ளை முள்ளால் எடுப்பது போல, லஞ்சப்பேர்வழிகள் பற்றிய தகவல்களை லஞ்சம் கொடுத்தே பெறவேண்டியிருந்தது. எப்படி யாவது ஊழல்பேர்வழிகள் உரிய ஆதாரங் களோடு கூண்டில் ஏற்றப்படவேண்டும் என்ற எண் ணம் கொண்டவர்கள் கொடுத்த நிதிப்பலத் தில் அரச ஆவணத்துறையைச் சேர்ந்த அதி காரிகள், ஊழியர்கள் விலைக்கு வாங்கப்பட்ட னர். ஏற்கனவே லஞ்சம் வாங் கியே பழக் கப்பட்டுப் போனவர்களைப் பணத்தாசை காட்டி தன்வலையில் விழ வைப்பதில் யூலியன் வெற்றிகண்டான். அதற்குப் பிறகு காரியங்கள் மளமளவென்று நடந்தேறின. விக்கிலீக்ஸில் - ஒரு சுபயோகத் தினத்தில் - கென்ய ஊழல்பேர்வழிகள் முழு ஆதாரங் களோடும் அம்மணமாக்கப்பட்டனர். ஆதா ரங்கள் எல்லாமே அசைக்கமுடியாதவையாக இருந்த தால் அவர்கள் அனைவருமே ஒரு சிலவாரங்களுக்குள் பாவத்தின் பலனை சிறைகளில் அனுபவிக்க வேண்டி இருந்தது.

இத்தனை நாளும் சொகுசு தாம் அனுபவித்த சொகுசு வாழ்க்கைக்கு முடிவுகட்டிய யூலியன்னைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் விக்கிலீக்ஸின் புண்ணியத் தால் சிறைவாசம் கிடைக்கப்பெற்ற பெரிய புள்ளிகளி டம் மேலோங்கியது. கண்கள் சிவப்பாக, ரத்தம் சூடேற, குறுகிய சிறைக்கூடத்தில் அங்குமிங்கும் அலைந்த படி, இரவு பகலாக நித்திரையின்றி யூலியனைப் பழி வாங்கும் திட்டத்தை அவர்கள் தீட்டினார்கள். அவர் களின் திட்டத்துக்கு அப்போது ஆட்சியில் இருந்த அமைச் சர்கள் சிலரும் ஒத்தாசை செய்ய முன்வந்தார்கள்.

அவர்களின் ஊழல்பட்டியலையே யூலியன் அடுத்த தாக வெளியிடப்போவதாகத் தகவல்கள் வெளிவந்தி ருந்தன. அப்படித்தங்களின் வண்டவாளம் வெளிவரு முன்னரே, யூலியனின் கதையை முடித்துவிடவேண்டு மென்பதில் அவர்களும் அதீத அக்கறையோடு செயற்பட் டனர். தமது விசுவாசத்துக் குரிய - சொன்னதைக் கன கச்சிதமாக செய்துமுடிக்கக்கூடிய - படைவீரர்கள் இக் காரியத்தில் ஈடுபடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

யூலியன் சாகவேண்டும். ஆனால் அது யாருக்குமே

ஒளண்யன்

தெரியக் கூடாது. யூலியன் கொல்லப்பட்டது வெளியே தெரியவந்தால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். யூலியன் இறந்த செய்தி பலநாள்களுக்குப் பின்னரே உலகுக்குத் தெரியவரவேண்டும். அத்தோடு யூலிய னின் சடலம் எந்தவிதத்தடயமும் இன்றி அழிக்கப்பட வும் வேண்டும்.அப்போதுதான் எங்கள் மீது எவருக்கும் சந்தேகம் வராது. இவ்வாறு கொலையாளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. தமக்குரிய உத்தரவும் பணமும் கிடைத்த மறுநொடியே யூலியனின் ஆயு ளைக் கொலையாளிகள் எண்ணத் தொடங்கிவிட் டார்கள். யூலியனின் இருப்பிடம், நடமாட்டம்என்பன அவதானிக்கப்பட்டு தாக்குதலுக்குரிய இடம்,நேரம் தீர்மானிக்கப்பட்டது. சடலத்தை அழிக்கும் உத்தி, மௌனமாக உயிர் குடிக்கும் ஆயுதங்கள் என எல்லாமே தயார். இதோ! யூலியனின் மூச்சுக்கு ஆப்பு வைக்க கொலையாளிகள் புறப்பட்டும் விட்டார்கள். இனி என்ன நடந்தது?....

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 27.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

★கட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
(109460) தொ.பே. 021 222 6944

## தையல் பயிற்சி நெறி

காரைநகர் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் தையல் பயிற்சி நெறிக்கு பயிலுனர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனைகளில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவோர் பிறப்புச் சான்றிதழ், தே.அ. அட்டை, குடும்ப அட்டை, கல்விச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த தையல் பயிற்சி நெறி கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊடாக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தவுள்ளது.

(ற-250)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. த. இராதா கிருஸ்ணமூர்த்தி

எமது பாடசாலை விஞ்ஞான ஆசிரியர் திரு. த.இராதா கிருஸ்ணமூர்த்தி அவர்கள் யா/ நவக்கிரி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*ஆசிரியர் கழகம், யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.*

## ஆனதப்பா ஆண்டு ஐந்து

அத்தாயின் மலராய் 18 ★ 09 ★ 1953



ஆண்டவனின் மலராய் 20 ★ 01 ★ 2006

### அமரர் தாமோதரம்பிள்ளை சுந்தரலிங்கம் (ராசண்ணா)

*திதி: தை அமரபக்க் ஷஷ்டி*
*(25.01.2011)*

அன்பிழந்து நாங்கள் ஆனதப்பா ஆண்டைந்து
அரைவயதில் நீ செல்ல போனதப்பா எங்கள் புன்னகையும்
கவலைகள் நிரம்பியிங்கு கனக்குதப்பா இதயமது
அன்பாலே அரண் செய்து ஆட்சிசெய்த உன்குடும்பம்
ஆளநீயின்றி வேரறுந்து நிற்குதப்பா
என்ன கஷ்டம் வந்திடினும்
எட்டி உந்தன் படமருகில் வந்து நின்று கண் நனைந்தால்
தட்டிக் கொடுத்து தலைகோதி மடிசாய்க்கும் உணர்வோடு
உன் ஆத்மா எம்மருகில் இருப்பதை நாம் உணர்கின்றோம்
அந்த ஓர் ஆறுதல் போதுமப்பா
உன்வழியில் நாம் சென்று உயர்ந்திடுவோம் என்ற
உரமான உணர்வோடு உயிர்மூச்சாய் நீயிருக்க
நகர்த்துகின்றோம் நாளதனை அடைக சாந்தி

*மதனகிரி, அத்தாய்.*

என்றும் உன் நினைவில்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-பளை
### வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2011

07.01.2011 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2011 விளம்பரத்துக்கான கால எல்லை 31.01.2011ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருவதுடன் இதுவரை பதிவு செய்யாத வழங்குநர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பச்சிலைப்பள்ளி
பிரதேச சபை,
பளை.

(சி/575204)

*சி.சிவப்பிரகாசம்*
*செயலாளர்,*
*பச்சிலைப்பள்ளி, பளை.*

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய
**BAHIRAHA No-1**
புறொயிலர் குஞ்சுகள்
26.01.2011 ஆம் திகதி
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே
மேற்கொள்ளவும்.

**T.P No:**
021 222 2867, 0776090926

## அலுவலக உதவியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் தேவை. விருப்பமுள்ளவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**ASIAN COMPUTER EDUCATION**
Tel No : 0212270267

## வேலையாள் தேவை

வீட்டுவேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை.
தொடர்பு கொள்க
**0773086894**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில், பிரதமர் விளாடிமிர் புடினை (வலது), ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் சந்தித்துப் பேசுகிறார்.

# முன்னாள் மாவோ தீவிரவாதிகள் மறுவாழ்வு நேபாளப் பிரதமரிடம் பொறுப்பு ஒப்படைப்பு

காத்மாண்டு,ஜன.25

நேபாளத்தில் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட, முன்னாள் மாவோயிஸ்ட்களின் மறுவாழ்வு விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பை, பிரதமர் மாதீவ் குமார் நேபாளிடம் மாவோயிஸ்ட் கட்சித் தலைவரும், நேபாள முன்னாள் பிரதமருமான பிரசண்டா ஒப்படைத்தார்.

நேபாளத்தில் 2006இல் மாவோயிஸ்ட்களின் புரட்சி முடிவுக்கு வந்தது. இதையடுத்து, 19 ஆயிரம் மாவோயிஸ்ட்கள் தங்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டனர். அவர்களின் மறுவாழ்வு, ஆயுத ஒப்படைப்பு, சமூகத்தோடு கலந்து வாழ்தல் ஆகியவை குறித்துப் பிரச்சினை எழுந்தது.

மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டா, தற்காலிகமாக அவர்களின் முகாம்களைக் கவனித்து வந்தார். இதன் பின் ஐ.நா. அமைதிக்குழு தீந்துப் பொறுப்பை ஏற்றது. கடந்த 15ஆம் திகதியுடன் அமைதிக்குழு தன் பணியை முடித்துக்கொண்டது.

இதற்கிடையில், முன்னாள் மாவோயிஸ்ட்களை கவனிக்க பிரதமர் மாதவ் குமார் நேபாள் தலைமையில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் தலைவர் பிரதமர் மாதவ்குமார் நேபாளிடம் வெள்ளிக்கிழமைமுறைப்படி பொறுப்பை பிரசண்டா ஒப்படைத்தார்.

சித்வான் என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரசண்டா, ''இன்றிலிருந்து மாவோயிஸ்ட் புரட்சி வீரர்கள் அனைவரும் சிறப்புக் குழுவின் கண்காணிப்பின் கீழ் வருவர்'' என்றார்.

பிரதமர் மாதவ் குமார் நேபாள் பேசுகையில், ''முன்னாள் மாவோயிஸ்ட்கள் மீதான கண்காணிப்பு, மறுவாழ்வு உள்ளிட்ட அனைத்தையும் அரசு கவனித்துக் கொள்ளும்'' என்றார்.

## கடலில் மூழ்கும் துபாய் தீவுகள்

லண்டன், ஜன. 25

துபாயிலுள்ள அழகிய தீவுகள் கடலில் மூழ்கி வருகின்றன. எண்ணெய் வளம்மிக்க துபாய் பல அழகிய தீவுகளால் ஆனது. இந்தத் தீவுகளில்தான் பிரமாண்டமான நட்சத்திர ஹோட்டல்கள், விடுதிகள், விண்ணை முட்டும் கட்டடங்கள் ஆகியன உள்ளன.

உலக வெப்பமயமாதல் காரணமாக இங்குள்ள கடலின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. எனவே இங்குள்ள பல அழ்கிய தீவுகள் படிப்படியாக மூழ்கி அழிந்து வருகின்றன.

தீவுகளிலுள்ள மணல் அதாவது நிலப்பகுதிகளை கொஞ்சம் கொஞ்சமாகக் கடல் தன்வசம் உள்ளிழுத்து வருகிறது. (சி)

# ஐவரிகோஸ்ட் அரசியல் நெருக்கடி ஆபிரிக்க ஒன்றிய பேச்சு நீடிப்பு

அபிட்ஜான்,ஜன.25

ஐவரிகோஸ்ட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்காக, ஜனாதிபதி லோத்ரன் பேக்போவுடன் ஆபிரிக்க ஒன்றிய பிரதிநிதி ரைலா ஒடிங்கா பேச்சு நடத்தி வருகிறார்.

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டில் கடந்தாண்டு நவம்பர் மாதம் நடந்துமுடிந்த தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் அலசான் வட்டாரா வெற்றி பெற்றார். ஆனால், ஜனாதிபதி பேக்போ பதவி விலக மறுத்துவிட்டார்.

கடந்த மூன்று மாதங்களாக சர்வதேச நாடுகள் நெருக்கடி கொடுத்தும் அவர் அசையவில்லை. இந்நிலையில் ஆபிரிக்க ஒன்றிய பிரதிநிதியும், கென்ய பிரதமருமான ரைலா ஒடிங்கா, பேக்போவுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

தொடர்ந்து அவர் வட்டாரா வுடனும் பேச்சு நடத்த திட்டமிட்டிருக்கிறார்.

இதுகுறித்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவர், ''பேச்சுகளில் ஏற்கனவே அவருடன் விவாதித்த விடயங்களை தான் விவாதித்தேன்.

எனினும் இம்முறை பேச்சுகளில் முன் னேற்றம் ஏற்பட்டுள்ளது'' என்றார்.

இதற்கிடையில், வட்டாரா ஆதரவாளர்கள் நாடு தழுவிய முழு அடைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பேக்போ அரசு மீது சர்வதேச நாடுகள் விதித் துள்ள பொருளாதார தடையால், அவரது நிர்வாகம் கடும் பொரு ளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது.

இதனால், இனக் கலவரம் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தால் நாட்டின் மேற்குப் பகுதியிலிருந்து 13 ஆயிரம் பேர் வெளியேறி, டியூக்கோ நகரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர். (த)

## 'வீக்கிலீக்ஸ்' பற்றிய படம் ஹொலிவூட்டில் தயாராகுகிறது

லொஸ் ஏஞ்செல்ஸ், ஜன. 25

இணையதள உலகில் பரபரப்பை ஏற்படுத்திவரும் 'விக்கிலீக்ஸ்' பற்றிய திரைப்படம் ஹொலிவுட்டில் தயாராகிறது.

'விக்கிலீக்ஸ்' இணையதளத்தின் உரிமையாளரான அசேஞ்சின் வாழ்க்கை வரலாறு குறித்த புத்தகத்தை ஆஸ்திரேலியாவின் பத்திரிகையாளர் ஆண்ட்ரியூ பவுலர் என்பவர் 'தி மோஸ்ட் டேஞ்சரஸ் மேன் இன் த வேர்ல்ட்' என்ற பெயரில் எழுதி வருகிறார்.

அசேஞ்சின் குழந்தைப் பருவம் முதல் தற்போதைய கால கட்டம்வரையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர்
பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன்
அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி மகேஸ்வரி சிதம்பரநடராஜா**

அவர்கள் 21.01.2011 அன்று காலமானார்.
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

புவியியற்றுறைச் சமூகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(103733)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 15.08.1932

மறைவு 14.01.2001



**ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

அன்பான எங்கள் அப்பாவே
ஆண்டெத்தனை ஆனாலும் எம்மனதை
விட்டகலாது தங்கள் திருமுகம்
ஆறாது எம் சோகம்.

09/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (109719) குடும்பத்தினர்.

# தேர்தலுக்குப் பின்னர் அரசியலை விட்டு விலகுவேன்; டுனிஷியப் பிரதமர் உறுதி

டுனிஷ், ஜன. 25

தேர்தலுக்குப் பின்னர் அரசியல் வாழ்க்கையில் இருந்தே விடுபடுவேன் என்று டுனிஷியப் பிரதமர் முகம்மது கானோச்சி உறுதியளித்தார். அந்தநாட்டு மக்களுக்கு வெள்ளிக்கிழமை தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் அவர் இந்த உறுதியை அளித்தார்.

டுனிஷியாவில் 23 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த அபிடைன் பென் அலிக்கு எதிராகக் கிளர்ச்சி வெடித்ததால் கடந்த வெள்ளிக்கிழமை அவர் சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்தார்.

அதன் பின்னரும், ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு ஆபிரிக்க நாடான டுனிஷியாவில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அடங்கிய புதிய கூட்டணி அரசை பிரதமர் முகம்மது கானோச்சி திங்கட்கிழமை அறிவித்தார்.

ஆனால், ஜனாதிபதி அபிடைன் பென் ஆட்சிக்கால்த்தில் முக்கிய பதவிகளில் அமர்ந்தவர்கள் அனைவரும் பதவியை விட்டு விலகவேண்டும் என்று மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்,

அந்தவகையில் அபிடைன் பென் ஆட்சியின்போது பிரதமராக இருந்த கானோச்சியை பதவி விலகுமாறு மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதற்குப் பதிலளித்துள்ள கானோச்சி, தேர்தல் முடிந்ததும் தாம் அரசியல் வாழ்க்கையைவிட்டே ஓய்வுபெற்றுவிடுவார் என உறுதியளித்துள்ளார்.

அபிடைன் பென் ஆட்சியின் கீழ் நாட்டு மக்கள் எப்படி பயந்து பயந்து வாழ்க்கை நடத்தினார்களோ அப்படித்தான் தானும் வாழ்க்கை நடத்தினார் என கானோச்சி கூறியுள்ளார்.

## தேவை

எமது அச்சகத்துக்கு பின்வரும் வேலை ஆள்கள் தேவை
★ கணினி பக்கவடிவமைப்பாளர்
★ புத்தகம் கட்டுதல், வெட்டுதல்
சம்பளம் ரூபா 10,000 இற்கும் மேல் வழங்கப்படும்.
(அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் [illegible])
[illegible] அச்சகம், நல்லூர்.

## மரண அறிவித்தல்



*திருமதி ஞானபதி பரமேஸ்வரன்*
(இளைப்பாறிய பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை)

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானபதி பரமேஸ்வரன் 22.01.2011 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரவாகு மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் சீனியர் வீரவாகு பரமேஸ்வரனின் (இளைப்பாறிய கல்வித் திணைக்கள கணக்குப் பதிவு உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் London ஐச் சேர்ந்தவர்களான ஞானகௌரி, சுமங்கலி, பரணிதரன் மற்றும் நிஜாந்தினி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயும் London ஐச் சேர்ந்தவர்களான ஜீவராஜன், தேவபாலன், காயத்திரி மற்றும் துஸ்யந்தன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்திமலர், துரைசிங்கம், பூபாலசிங்கம், சிலோசனாவதி, அற்புதவதி, சந்திராவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் London ஐச் சேர்ந்தவர்களான விதுஷன், அபிஷா, ஆரணி, அபிந்தா, விஸ்ணு, மற்றும் பிரவினி (Colombo) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் செல்வமலர், லிங்கமலர், தியாகலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் சிறிய தாயும் பிரலாத் (தீசன்-London), சசிலா, வனஜா, அனுஷா, அஜந்தா, எழிலரசி, தர்சன், நிஷாத் ஆகியோரின் அன்புப் பெரியதாயும் விமல்ராஜ், ரவிராஜ், பத்மராஜ், சுமதி, அகிலன், சுதா, திருமதி சங்கரி பிரலாத் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
தொ.பே. 0777563031.

தகவல்:
வீரவாகு பரமேஸ்வரன் (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேஸிலில் வெள்ளம்; 800 பேர் பலி!

பிரேஸில் வெள்ளப் பெருக்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 800 ஆக உயர்வடைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. பிரேஸிலின் தென் கிழக்குப் பகுதியில் இந்த மாதம் கடுமையான மழை வெள்ளம் நிலவி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 800 எனவும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 400 எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. மழை வெள்ளம் காரணமாக குறித்த பிரதேசத்தில் கடுமையான மண் சரிவு நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆபத்து நிலைமைகள் குறித்து எச்சரிக்கை விடுக்கும் புதிய முறைமையொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேஸிலில் இடம்பெற்ற மிகவும் மோசமான இயற்கை அனர்த்தமாக அண்மைய மழை வெள்ளம் கருதப்படுகின்றது.

உயிரிழந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர் சிறுமியர் என்பது குறிப்பிடத்தக்கது. மண்ணில் புதையுண்டு இருப்பவர்களின் எண்ணிக்கை பற்றிய சரியான புள்ளி விவரங்களை தற்போதைக்கு அறிவிக்க முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக அரசாங்கம் 240 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளது.(த)

# ஆஸ்திரிய வங்கி ஒன்றில் கொள்ளையடித்த ‘ஒபாமா’

ஹேரண்டன்பர்க்,ஜன் 25

ஆஸ்திரிய நாட்டின் ஹேரண்டன்பர்க் நகரில் அமைந்துள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கொள்ளையடித்த ஒபாமா அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் இதுகுறித்து தெரிவித்ததாவது,

கைது செய்யப்பட்ட மர்ம மனிதன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் முகமூடியை அணிந்திருந்தான். அவனது உருவம் கண்டு முதலில் நாங்கள் அதிர்ந்து விட்டோம். பின் அவன் உள்ளூர் மொழியில் பேசியதை அடுத்து, அவனை விசாரிக்க வேண்டிய வகையில் விசாரித்ததில் உண்மையை ஒப்புக் கொண்டான். அவனிடமிருந்து 10 ஆயிரம் யூரோக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# திருமண வாழ்க்கையில் பிளவு ஏற்படக் காரணம் ‘பேஸ்புக்’

நியூயோர்க்,ஜன.25

பலருடைய திருமண வாழ்வில் பிளவு ஏற்பட ‘பேஸ்புக்’ காரணமாக இருந்துள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாத காலத்தில் தான் கையாண்ட விவாகரத்து வழக்குகளில் கிட்டத்தட்ட எல்லாவற்றுக்குமே ‘பேஸ்புக்’ காரணமாக அமைந்துள்ளது என்று சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் வைத்திருக்கும் உறவு ‘பேஸ்புக்’ மூலம் தெரியவருவதால், அது விவாகரத்தில் முடிவடைகின்றது.

குறைந்த பட்சம் இவ்வாறான வழக்குகள் முடிவடைகின்ற வரைக்குமாவது பேஸ்புக்கைப் பாவிக்க வேண்டாம் என வழக்கறிஞர்கள் இப்போது தமது கட்சிக்காரர்களுக்கு ஆலோசனை வழங்கிவருகின்றனர்.

ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொண்ட தம்பதியினர் கூட ஒருவர் மற்றவரை வேவு பார்க்க பேஸ்புக்கைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(த)

# கண்ணிவெடிகளை அகற்றும் எலிகள்



மகூட்டோ, ஜன.25

எலிகள் நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் செயல்பாட்டுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்கிற தகவல் உங்களுக்குத் தெரியுமா?

மனிதர்கள், நாய்கள் ஆகியவற்றைக் காட்டிலும் வேகமாகவும், விவேகமாகவும் நிலக் கண்ணி வெடிகளை அகற்றக் கூடியன எலிகள்.

நிலக் கண்ணி வெடிகளில் இருந்து எழுகின்ற மணத்தை வைத்து அவ்வெடிகளை அடையாளம் காண எலிகளால் இயலும். அத்துடன் அவ்வெடிகளை செயல் இழக்க வைக்கவும் முடியும்.

ஆனால் எலிகளுக்கு பிரத்தியேக பயிற்சிகளை வழங்கி வழிக்கு கொண்டு வர வேண்டி இருக்கும்.

மொசாம்பிக் நாட்டில் சிவில் யுத்தம் 1992 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்து விட்டது.

இருந்தாலும் அங்கு நிலக் கண்ணி வெடி அச்சம் இன்றும் தொடர்கின்றது.

மாதாந்தம் 20 பேர் கண்ணி வெடியில் சிக்கி கால்களை இழக்கின்றனர். நிலக் கண்ணி வெடியில் சிக்குவோரில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் உயிர் இழக்கின்றனர்.

இந்நிலையில் இந்நாட்டில் எலிகளின் உதவியுடன் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன.

எலிகள் குறைந்தது ஒன்பது மாத கால பயிற்சியின் பின் இப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஒரு நிலக் கண்ணி வெடியை ஒரு எலி செயல் இழக்க வைக்கும்போது அத்திறமையைப் பாராட்டி ஒரு வாழைப்பழம் பரிசாக தவறாமல் கொடுக்கப்படுகின்றது. (த)



போர்த்துக்கல் நாட்டின் அதிபர் தேர்தல் நடந்தது. இதில் அந்நாட்டு ஜனாதிபதி அனிபால் கவாகோ சில்வா (இடது), அவரது மனைவி ஆகியோர் தலைநகர் லிஸ்பன் வாக்குச்சாவடியில் வாக்களிக்கின்றனர்.

# காந்திஜியின் நினைவுக் கட்டடம் மீண்டும் சிங்கப்பூரில் திறப்பு

சிங்கப்பூர்,ஜன.25

சிங்கப்பூரில், செயல்பட்டு வந்த காந்திஜியின் நினைவுக் கட்டடம் சீரமைக்கப்பட்டு, மீண்டும் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. சிங்கப்பூரில் காந்திஜி நினைவுக் கட்டடம் கடந்த 1953ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தில், காந்தியின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் எழுதிய புத்தகங்கள் கொண்ட நூலகம் செயல்படுகிறது.

இந்த நூலகத்தில், இந்தி, தமிழ், ஆங்கிலம் மற்றும் சீன மொழி புத்தகங்கள் உள்ளன. மேலும், இந்தி சொசைட்டியின் அலுவலகம், இந்தி கற்கும் மாணவர்களுக்கான வகுப்பறைகளும் உள்ளன. பல்வேறு நிகழ்ச்சிகள் நடப்பதற்கான அரங்குகளும், இந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்த கட்டடத்தை புதுப்பிப்பதற்காக மூடப்பட்டது. 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, நேற்று மீண்டு திறக்கப்பட்டது. சிங்கப்பூர் ஜனாதிபதி எல்.என்.நாதன் இந்த நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு திறந்து வைத்தார்.

# சோமாலியக் கடற்கொள்ளையர் தென்கொரியாவுக்கு எச்சரிக்கை



நியூயோர்க்,ஜன.25

சோமாலிய கடற்கொள்ளையர்கள் தென் கொரியாவை பழி தீர்க்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். சோமாலியா கடற்கொள்ளைக்காரர்கள் அண்மையில் இந்து சமுத்திரத்தில் சென்ற தென்கொரிய எண்ணெய் கப்பலை கடத்தியிருந்தனர்.

அதில் இருந்த சிப்பந்திகளையும் சிறைப் பிடித்தனர்.

இதைத்தொடர்ந்து தென்கொரிய அதிரடிப் படையினர் கடத்தப்பட்ட கப்பலுக்குள் அதிகாலை வேளை அதிரடியாக நுழைந்து அங்கு இருந்த 8 கடற்கொள்ளையர்களை சுட்டுக்கொன்றனர்.

பிறகு கப்பலையும் 21 கப்பல் சிப்பந்திகளையும் விடுவித்துள்ளனர். இதனால் சினமடைந்த கடற்கொள்ளையர்கள் தென்கொரியாவுக்கு மிரட்டல் விடுத்துள்ளனர்.

தாங்கள் கடத்திய கப்பல் சிப்பந்திகளை இதுவரை கொன்றது இல்லை என தெரிவித்துள்ள அவர்கள் இனி மேல் பழிக்கு பழி வாங்கப் போவதாக தெரிவித்துள்ளனர்.

இனிவரும் காலங்களில் தென் கொரியர்களிடம் இருந்து பணயத்தொகையை வாங்காது, தென் கொரிய கப்பலை கடத்தினால் அதை அந்த இடத்திலேயே கொளுத்தி விடப்போவதாக எச்சரித்துள்ளனர்.

சிப்பந்திகளை அங்கேயே சுட்டுக்கொன்று விடுவோம் என்று கடற்கொள்ளைக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

# மலேரியா ஒட்டுண்ணி ஊடுருவல் விஞ்ஞானிகளால் கண்டுபிடிப்பு

## ஒழிப்புமுறை சுலபம் என்றும் அறிவிப்பு

வாஷிங்டன், ஜன. 25

மனிதன் உடலில், மலேரியா ஒட்டுண்ணி, இரத்தத்தின் சிவப்பணுக்களில் எப்படி ஊடுருவுகிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம், மலேரியாவை ஒழிக்கவும், இந்தப் பாதிப்புக்கு சிறந்த சிகிச்சை அளிக்கவும் வழிமுறைகளை இனி எளிதில் கண்டறியலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொசுக்கடியால், ‘பிளாஸ்மோடியம்’ என்ற ஒட்டுண்ணி, மனித உடல்களில் பரவி, மலேரியா நோயை உருவாக்குகிறது. இதுகுறித்து, வாஷிங்டனிலுள்ள வோல்டர் அண்ட் எலிசா ஹேரால் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஆய்வு மேற்கொண்டனர்.

அவர்கள் ஆய்வுக்கு, ‘ஓ.எம்.எக்ஸ். 3டி சிம்’ என்ற அதிக அடர்புள்ளிகள் கொண்ட நுண்பெருக்கிக் கருவி பயன்படுத்தப்பட்டது. இந்தக் கருவி, மலேரியா ஒட்டுண்ணியின் செயல்பாட்டை மிகத் தெளிவாய் விளக்கியது. ஒட்டுண்ணி, இரத்தத்தின் சிவப்பணுக்களில் ஊடுருவுவது மிகத் தெளிவாகத் தெரிந்தது.

சிவப்பணு செல்லுக்குள் ஊடுருவும் ஒட்டுண்ணி, செல்லைச் சுற்றி, இறுக்கமான வலையை ஏற்படுத்திக்கொள்கிறது. பின்னர் மளமளவென வேகமாகப் பெருகுகிறது. குறிப்பிட்ட செல்லுக்குள்தான் செல்ல வேண்டும் என்ற வரையறை வைத்துக் கொள்ளாமல், அனைத்து சிவப்பணுக்களிலும் ஊடுருவுகிறது.

இதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள், இனி மலேரியாவுக்கு சக்திவாய்ந்த மருந்து கண்டறிவது எளிதாகும் எனக் கூறுகின்றனர். நுண்பெருக்கிக் கருவியின் பயன்பாட்டால், மேலும் பல சாதனைகளையும் மேற்கொள்ளலாம் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகர் தேவாலயத்தில் திருவிழா

வடபகுதி யாத்திரைத் தலங்களில் ஒன்றான குருநகர் புனித காணிக்கை அன்னை தேவாலயம் நவநாள் பெருந்திரு விழாக்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.45 மணிக்கு இடம்பெறும். கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் தொடங்கி ஆராதனை பிரசங்கம் திருப்பலி, சொரூப ஆசீர்வாதம் என்பன நடைபெறும். எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு சற்பிரசாதத்திருவிழா செபமாலையுடன் தொடங்கும். மறுநாள் மாலை 4.30 மணிக்கு மாதா திருச்சொரூப செபமாலையுடன் வீதியுலா தேர்ப்பவனி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-160)


## கும்பாபிஷேக தினமும், மணவாளக் கோலத் திருவிழாவும்

காலம் - தை 11ஆம் நாள் 25.01.2011 செவ்வாய்க்கிழமை
நேரம் - காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.
நிகழ்வுகள்- கும்பாபிஷேக தினபூசை

1008 சங்கு வைத்து சங்காபிஷேகமும்,
மதியம் விசேட அன்னதானமும் வழங்கப்படும்.
மாலை 5 மணிக்கு மணவாளக்கோலத் திருவிழாவும்
ஊஞ்சற்பாட்டு நடைபெற்று அதனைத் தொடர்ந்து
வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறும்.
மணவாளக் கோலத் திருவிழா சிறப்பாக நடைபெற
வாழ்த்துகின்றோம்.

### ஈஸ்வரன் நகைமாளிகை

இங்கு நகை வேலைக்குரிய சகல விதமான
ஆயுத உபகரணங்களும் மற்றும் சகல விதமான
கற்களும் விற்பனைக்குண்டு.

அல்வாய் வீதி,
மாலுசந்தி.

உரிமையாளர்:
தங்கராசா விமலேஸ்வரன்.



## புலமைச்சுடர் சந்தா பிரதி பெற விரும்பும் பெற்றோர்களே...

### புலமைச் சுடர்

2011-2012 04
திங்கள் தோறும்
24.01.2011 - 31.01.2011 விலை 10/-
ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் புலமைப்பரிசில் கையேடு

இக்கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகளோ அல்லது அருகில் விற்பனை முகவரிடம் இருந்து பிரதிகளை பெறுவதில் சிரமமோ உள்ள தரம் 4, 5 மாணவர்களின் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு பிரதியை பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 30 பிரதிகள் வெளிவரவுள்ளன. மொத்தமாக ரூபா 450 ஐ காசுகட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக்கணக்கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேட்டைப் பெறலாம்.

கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை

| காசுகட்டளையாயின் - (கிராண்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக்கூடியவாறு) | வங்கி வைப்பாயின் (126-1-001-0-3452799) என்ற மக்கள் வங்கி இலக்கக் கணக்கில் Landmark Enterprises கிராண்ட்பாஸ்) |
| --- | --- |

மேற்கூறிய முறைகளின் ஊடாக அனுப்பிய காசுகட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தா படிவத்துடன் இணைத்து "விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், இல. 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

புலமைச்சுடர் சந்தாப்படிவம்

1. பெயர் : ..........
2. விலாசம் : ..........
3. தொ. பேசி இலக்கம் : ..........
4. பிரதிகளின் எண்ணிக்கை : ..........
5. செலுத்தப்பட்ட பணம்:..........ரூ.
6. வைப்புசெய்த முறை : வங்கி/காசுகட்டளை

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர்
தொலைபேசி இலக்கங்கள்: 071 6850005 / 071 4273035

(இப்பகுதியை பயன்படுத்த முடியாதவர்கள் இப்படிவத்தினை பிரதி செய்து அனுப்பலாம்)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை கனகசிங்கம்

துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை கனகசிங்கம் 23.01.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கனகசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சபாரத்தினம், நந்தகுமாரி, குலரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நிர்மலா மற்றும் சாந்தநாயகி, சிவபாலன், ஊர்மிலா, கமலாசனி ஆகியோரின் மாமியாரும் நவநீதன், வாசுதேவன், சுதர்ஷனா, சிவராம், நாராயனி, கௌசல்யா, அகல்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிட்டித்தூ மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வளவு வீதி,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
தொ.பே:- 0213001538.
(சி/575211)

தகவல்:
ச.நவநீதன்(பேரன்)

## இராணுவ முகாம் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 25

உடுவில் அம்பலவாணர் வீதிக்கு அருகில் அமைந்திருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

கடந்த 15 வருடகாலமாக தனியார் ஒருவருக்குச் சொந்தமான வீடொன்றில் இந்தப் படைமுகாம் செயற்பட்டு வந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் உரிமையாளரிடம் வீட்டை இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர். (ஒ-313)

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி ஸ்ரீ சோமஸ்கந்தர்

தெல்லிப்பழை, ஆனைக்குட்டி வளவைப் பிறப்பிடமாகவும் ஸ்ரீ கந்தன் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஸ்ரீ சோமஸ்கந்தர் 22.01.2011 அன்று கொழும்பில் சிவபேறு அடைந்தார்.

அன்னார் அமரர்களான ஸ்ரீமான் விஜயரத்தினம் (ராசா அண்ணை)- தங்கம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும், அமரர்களான கனவான் சரவணமுத்து- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஸ்ரீ சோமஸ்கந்தரின் (Ret RDA TO) அருமை மனைவியும், Dr. ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து (JP - BAWANY MEDICARE, DEMATAGODA), திருக்குமரன் (Revenue Inspector, Moratuwa MC), செந்தில்குமரன் (Commercial Artist), மஞ்சுளா (மதனா DENMARK), கலைவாணி (ஆசிரியை, St. Mary's Tamil Maha Vidiyalayam Col-4), அமரர் அனுஷா ஆகியோரின் கருணைமிகு தாயாரும், DR. ஜெயந்தினி, நளினி (ஆசிரியை, Roman Catholic Tamil Mixed School, Borella), வனிதா (ஆசிரியை, D.S. Senanayake College, Col-07), குலேந்திரநாதன் (Denmark), ரவீந்திரன் (Technician Princeplastic Company) ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீ சாய் ஈஸ்வரன், அமிர்தன், பவித்திரா, கௌதம், அகிலன், அகிலேஷன் ஆகியோரின், பேர்த்தியும், அமரர்களான கமலேஸ்வரி, அப்பாத்துரை, விமலநாதன், குகநாதன் மற்றும் ஜெகநாதன், பாக்கியநாதன், சர்வேஸ்வரி, கமலநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கணேசலிங்கம், செல்வராணி, குலசிங்கம், சந்திரவதனி மற்றும் மனோன்மணி, நாகேஸ்வரி, சரோஜா விநாயகமூர்த்தி, நந்தினி, இராகினி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான மண்டவநாயகம் - தங்கமுத்து தம்பதியினரதும், துரைசாமி - வேதநாயகி தம்பதியினரதும், நவரத்தினம் (வசாவிளான், சாக்கர் செல்லப்பா) தம்பதியரின் அன்புப் பெறாமகளும், காலஞ்சென்ற தணிகாசலம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்சாலையில் 26.01.2011 புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் வியாழக்கிழமை (27.01.2011) முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை இந்துமயானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்,
DR.ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து (மகன்)
தொடர்பு:- 0112508447, 0777639554,0777168808


## தேவை

அரைக்கும் ஆலை, ராபர் வேக்ஸ், மோட்டார் மைக்கின் சுத்திகரிப்பு என்பவற்றில் அனுபவம் உள்ளவரும் பருக விரும்புபவரும் தேவை.
தொடர்பு- பிருந்தா மில்ஸ், N-18, நக்கா றோட், யாழ்ப்பாணம். Tele . 0772231096

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சித்த சுவாதீனம் அற்ற பெண் ஒருவரை வீட்டில் நின்று பராமரிப்பதற்கு முழுநேர பணியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:-0776333133, 0213218161.

## தவறிவிட்டது

129, இஸிகிரம் றோட், மாலிகாவத்தை பொன்னம்பலம் குலசிங்கம் (471503060X) என்னும் பெயர் முகவரியுடைய தே.அ. அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பிரம்படி லேனுக்கும் ஐயனார் கோயிலடிக்கும் இடையில் நேற்று (24.01.2011) திங்கட்கிழமை தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். தொடர்பு:-0212225024, 0777412948.

## மணமகள் தேவை

கனடாவில் Accountant(ACMA) ஆகப் பணிபுரியும் P.R உள்ள மண மகனுக்கு உயரமான படித்த பெண் தேவை. மணமகன் 1976ல் பூரநட்சத்திரத்தில் பிறந்தவர், 7இல் செவ்வாய், 55 கிரகபாவமுடையவர். தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0213214095

## நெற்கபே உபகரணங்கள் விற்பனைக்கு

இயங்கிக் கொண்டிருக்கும் நெற்கபேயின் 5 கணினிகள் (Dual core) Wireless net work உடன், Dialog broad band (2MB), Printer, Scanner மேசைகள் Bothகள் உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 0779202315


## இன்றும் வியாழனும் மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.25

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஜ)

## நினைவஞ்சலி

### அமரர் முதலித்தம்பி சிவபாதம்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பழை. தர்மகர்த்தா புன்னாலைக்கட்டுவன் ஞானவைரவர் கோயில்)



தோற்றம்
09.09.1934

மறைவு
25.12.2010

எமையெல்லாம் உறக்கம்தனை மறந்து
அரவணைத்துக் காத்தாயே- இன்று
மீளா உறக்கம் கொண்டே உறவை அறுத்தாயே
மறக்கமுடியாத நினைவாலே மனச்சுமை ஆகினோமே

பிரிக்கமுடியாது என்றே இருந்தோம் நாம்
உயிர் பிரிந்து போனாலும் மறக்கமுடியாத நினைவை
நெஞ்சில் சுமக்கவைத்தானே இறைவன் கண்கள்
பணித்திங்கே கன்னத்தில் வழிந்தோட
கலங்கி நின்றோமே

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
பலாலி வீதி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### வல்லிபுரம் அன்னலிங்கம்


கடந்த 26.12.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (25.01.2011) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

22/15, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (109742)

குடும்பத்தினர்.

## உயிர்ப்பிற்காய் மரணித்த ஈராண்டுப் பதிவு



### ஆரோக்கியநாதர் திருமாவளன்

மலர்வு
26.10.1975

உதிர்வு
25.01.2009

திரு விழிமூடி ஈர் பன்னிரண்டு ஆனதுவோ
இரு விழிகனக்க இதயங்கள் நொருங்க
திரு மொழி கேட்க தேடுகின்றோம்- ஆதவனே
ஈசன் நிழல் தேடி எங்கு மறைந்தனையோ

64, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியாளன்-பணியாளன்

எல்லோருக்கும் தொல்லை கொடுப்பான் - பதவியாளன்
என்றும் உற்சாகத்துடன் துணை நிற்பான் - பணியாளன்
எங்கும் அதிகாரம் காட்டுவான் - பதவியாளன்
எதற்கும் நல்ல ஆலோசனை கூறுவான்- பணியாளன்
பயம் காட்டி வேலைவாங்குவான் - பதவியாளன்
பண்புடனே உதவிடுவான் - பணியாளன்
வன்சொல் கூறிவதைப்பான்- பதவியாளன்
இன்சொல்லுடன் நல்வழிகாட்டுவான் - பணியாளன்
பிறர்குற்றம் தேடுவான்- பதவியாளன்
தன்குற்றம் காட்டுவீர் என்பான் -பணியாளன்
பேச்சிலே வேலைகாட்டுவான் - பதவியாளன்
செயலிலே செய்துகாட்டுவான் - பணியாளன்
பலவந்தமாக கௌரவமாக மோதுவான் -பதவியாளன்
சுயமாகவே பெற்றிடுவான் பணியாளன்
கடமையினை தட்டிக் கழிப்பான் பதவியாளன்.
தலைமேற் கொண்டு ஏற்றிடுவான் பணியாளன்

த.சிங்கம்.

## பிள்ளைகளின் ஒழுக்கம்

''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்று எமது முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். சிறுவயதில் இருந்து தீய பழக்க வழக்கங்களை எம்மகத்தே கொண்டோமானால் அது எம்மைத்தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

கடவுள் எவ்வாறான உருவத்தில் இருப்பார் என்பது எம்மால் கூற முடியாது. ஆனால் உள் உணர்வின் செயற்பாட்டால் கடவுள் இருக்கின்றார் என்பதை அறிய முடியும். காலையும், மாலையும் குறைந்தது ஐந்து நிமிடங்களாவது கடவுளைத் தியானியுங்கள். எமது மனதுக்குள் இருக்கும் இருள்மாயை பறந்து ஓடிவிடும்.


மனக் கட்டுப்பாடும், ஆரோக்கியமான உடற்சுத்தமும் எப்பொழுதும் எம்முடன் இருக்க வேண்டும். தன்னம் பிக்கை, விடாமுயற்சி, சுயகல்வி, அவதானமாகக் கல்வி கற்றல் பரீட்சைகளைச் சரியாக எழுதுதல் போன்றவை உங்களை எதிர்காலத்தில் நல்வழிப்படுத்தும்.

அத்துடன் நல்ல நண்பர்களுடன் உங்களது நட்பை வைத்துக்கொள்ளுங்கள். இதனால் உங்களது நண்பனும் நீங்களும் நன்மை அடைவீர்கள். மேலும் உங்களைவிட மேலானோர் அறிவுரைகள் சொல்லுமிடத்து கட்டாயம் அதனை செவிமடுங்கள். பெரியவர்கள் எப்போதும் உங்களை பின்தள்ள நினைக்கமாட்டார்கள்.

கல்வி மட்டும் எம்மை நற்பிரஜைகளாகக் காட்டாது. எம்மிடத்தில் காணப்படும் நற்பண்புகளும் தான் எம்மை ஒழுக்க சீலராக மாற்றுகின்றது என்பதை மறந்து விடாதீர்கள்.

- க.ஜீவன்.

## மாம்பழம்



மாமா வீட்டு முற்றத்திலே
மாமரம் ஒன்று நிற்கின்றது
பொன்னைப்போல பூப்பூக்கும்
பூக்களினுள்ளே பிஞ்சிருக்கும்

பச்சை மணிபோல காய்காய்க்கும்
பவளம் போல பழம் பழுக்கும்
அணில் பிள்ளை வந்து கொந்தாமல்
அடிப்பேன் மணியைப் பிந்தாமல்

இன்றைக்கு மாமா கூப்பிட்டார்
இனிப்பான பழம் தந்தார் சாப்பிட்டேன்
பொய் சொல்ல மாட்டேன் எப்போதும்
கையை மணந்து பார் இப்போது.

கி.பிருந்தாயினி.

## நரபலி சாமியார் நாகப்பா




பரமார்த்தரும் சீடர்களும் கந்தபுரம் என்ற ஊருக்குள் நுழைந்தார்கள். அப்போது அந்த ஊர் மக்கள் பெரும் அச்சத்தில் இருந்தார்கள்.

அதற்குக் காரணம் நரபலி சாமியார் நாகப்பா அந்த ஊரில் உலவுகிறான் என்பதுதான்!

''குருவே! நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் நமக்கே ஆபத்தாக முடிகிறதே! அது ஏன்?'' என்று மட்டி கேட்டான்.

''நாம் எல்லோரும் போன பிறவியில் நிறையப் பாவம் செய்து விட்டோம் போலிருக்கிறது!'' என்றார் பரமார்த்தர்.

''குருவே! உடனே இதற்கு ஏதாவது பரிகாரம் செய்தே ஆக வேண்டும்'' என்று சொன்னான், முட்டாள்.

குருவும் சீடர்களும் அன்று இரவே இரகசியமாக ஆலோசனை செய்தார்கள்.

''குருவே! முனிவர்களைப் போல யாகம் செய்தால் நம் பாவம் எல்லாம் போய்விடும்'' என்றான் மூடன்.

''அதற்கு நிறையப் பணம் செலவாகும். நம்மால் முடியாது. வேண்டுமானால், நரபலி கொடுக்கலாம்'' என்றார் பரமார்த்தர்.

''நரபலியா? ஐயையோ!'' என்று சீடர்கள் அனைவரும் அலறினார்கள்.

''சீடர்களே! நமக்கு நல்ல காலம் பிறக்க வேண்டுமானால் நரபலி கொடுத்தே ஆக வேண்டும் வேறு வழியே இல்லை'' என்று முடிவாகச் சொல்லி விட்டார், பரமார்த்தர்.

''அப்படியானால் யாரைப் பலி கொடுப்பது?'' என்று கேட்டான் மண்டு.

''வேறு யாரையாவது பிடிக்கப் போனால் மாட்டிக் கொள்வோம்! அதனால்......சீடர்களே... உங்களில் யாராவது ஒருவர்தான் பலியாக வேண்டும்! இந்த நல்ல செயலுக்கு யார் முன் வருகிறீர்கள்?'' என்றார் பரமார்த்தர்.

அவ்வளவுதான்!

''ஐயோ நான் பலியாகிவிட்டால், அப்புறம் உங்கள் சுருட்டுக்குக் கொள்ளி வைப்பது யார்?'' என்று அழ ஆரம்பித்தான் முட்டாள்.

''ஐயையோ நான் மாட்டேன்'' என்று மூடனும் மூக்கால் அழுதான்.

''குருவே! நாங்களும் பலியாக மாட்டோம்'' என்றபடி மற்ற சீடர்களும் தூர ஓடப் பார்த்தனர். பரமார்த்தருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

*(தொடரும்)*

## நான் பார்த்து வியந்த பனிமழை



2010 ஆண்டு ஜனவரி மாதம் டென்மார்க்கில் ஒல்போக் என்ற இடத்தில் இருந்தேன். அங்கு இரண்டாவது மாடியில் நாங்கள் வசித்து வந்தோம். ஒருநாள் அம்மா இரவு 11.30 மணிக்கு எங்களை நித்திரையில் இருந்து எழுப்பி முதல் முறையாக பனி பொழிவதைக் காட்டினார். வெள்ளை நிறத்தில் பஞ்சு கொட்டுவது போல வானத்தில் பனி கொட்டியதைப் பார்த்தோம். பின்னர் காலையில் பாடசாலைக்கு செல்லும்போது நிலமெல்லாம் பனிமூடி வெள்ளையாக இருந்ததைப் பார்த்தோம்.

நாங்கள் இருந்த இடத்தில் பெரிய புல்வெளி இருந்தது. அதெல்லாம் வெள்ளையாய்த் தெரிந்தது. நாங்கள் பஸ் ஏறுவதற்காக நின்றபோது எங்கள் முகத்தில் வெள்ளைப் பஞ்சு போல் பனி விழுந்தது. பனியைத் தாங்குவதற்கு ஒவ்வொரு நாளும் மூன்று உடுப்புக்கள் போடுவேன். அதற்கு மேல் Jacket போடுவேன் காலுக்கு பெரிய பூட்ஸ் போடுவேன். அன்றிலிருந்து தொடர்ச்சியாக பனி பெய்து கொண்டே இருந்தது. முழங்காலுக்கு மேல் பனி இருந்தது.

நாங்கள் போகும் பாதை, பஸ், கார் போகும் பாதையெல்லாம் ஒவ்வொரு நாளும் இயந்திரம் ஒன்றால் துப்புரவு செய்வார்கள். பனியை அகற்றி உப்புத்தூவி விடுவார்கள். நானும் தம்பியும் வீட்டின் அருகில் இருந்த புல்வெளியில் படர்ந்திருந்த பனிமேல் கால்கள் புதைய நடந்து விளையாடி இருக்கிறோம். பனியை அள்ளி ஏறிந்து விளையாடி இருக்கிறோம். தம்பியும் நானும் பனிக்கு மேலே படுத்து உருண்டு விளையாடி இருக்கிறோம். விடிய யன்னலைத் திறந்து பார்க்கும் போது கார்களையெல்லாம் பனி மூடியிருந்தது. பனியைக்கிண்டிக் காரை எடுப்பார்கள் சைக்கிள் எல்லாம் பனிக்குள் புதைந்து இருக்கும்.

பாடசாலையில் பனியை பந்து போல உருட்டி விளையாடி இருக்கிறோம். பாடசாலையில் பின்னுக்குள்ள மலையில் ஏறி சறுக்கி இருக்கிறோம். பாடசாலையில் பனிக்குள் விளையாடுவதற்கு விடுவார்கள். நாங்கள் 'ஐஸ்மான்' செய்து விளையாடுவோம். ஒரு நாள் பனிப்புயல் அடித்தது. பாட சாலையெல்லாம் நேரத்துக்கு முடித்தது. அப்பாவுக்கு போன்பண்ணிச் சொன்னார்கள். அப்பா வந்து என்னைக் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார். போகும் போது பனிப்புய லால் பாதையெல்லாம் பனியால் மூடப்பட்டது. நாங்கள் போன பஸ் போக முடியாமல் நின்று நின்று போனது. அன்றைய தினம் 17°C குளிர் இருப்பதாக சொன்னார்கள்.



பனிகொட்டியிருக்கும் போது மழை பெய்தால் பனியெல்லாம் பனிக்கட்டியாக இறுகிவிடும். அந்த நேரத்தில் நடந்து போவது கடினம். எல்லோரும் சறுக்கி விழுவார்கள். இந்த நேரம் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த மலையில் சறுக்கி விளையாடி இருக்கிறோம். அப்பா பெரிய மலையில் சறுக்கும்போது அவரது தோளைப் பிடித்தபடி சறுக்கிப் போயிருக்கிறேன். அது எனக்கு மறக்க முடியாத அனுபவம்.

தே. அபிராம்
தரம் .4E, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

## நாவடக்கப் பழக வேண்டும்

ஒரு காலத்தில் போதிஸ் தா என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய வாயாடி. அவனுக்கு சுபோதா என்ற மந்திரி ஒருவன் இருந்தான். அவன் பெரிய அறிவாளி. ஒருநாள் அரசனும் மந்திரியும் நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தவேளை மரத்திலிருந்து ஒரு குயில் குஞ்சு ஒன்று கீழே விழுந்தது. அதன் மேலெல்லாம் காயங்கள். இதனைக்கண்ட அரசன் வேதனை அடைந்து அந்தக் குஞ்சை அதன் பெற்றோர்கள் ஏன் வேதனைப்படுத்துகின்றனர் என மந்திரியிடம் கேட்டான்.மன்னனுக்கு நா அடக்கத்தைப் போதிக்க இதுதான் தருணம் என நினைத்து அரசே இந்தக் குஞ்சை இரண்டு காகங்கள் வளர்த்தன. அது குயிலின் குஞ்சு என்று அவைக்குத் தெரியாது. காக்கைகளின் கூண்டில் கள்ளத்தனமான முட்டையிட்டு வருவது குயில்களின் வழக்கம். இந்தக் குயில் சதா சள சளவென்று பேசிக்கொண்டிருக்கும். ஆனால் அந்தக் குரல் தன் இனத்தின் குரல் அல்ல. இந்தக் குஞ்சு அழையா விருந்தாளி என்பது காகங்களுக்குத் தெரிந்து விட்டது. அதனால் கூண்டிலிருந்து அந்தக் குஞ்சினைத் தள்ளிவிட்டன. அடக்கமின்றிப் பேசியதால் அது இவ்வாறு தண்டனைக்குள்ளானது. வாயை மூடிக் கொண்டிருந்தால் இவ்வாறு நடந்திருக்காது. இறகு முளைக்கும் வரை காகங்களுடன் மகிழ்ச்சியாக இருந்திருக்கலாம். மந்திரி சுட்டிக்காட்டிய நீதியை அரசன் புரிந்து கொண்டான். அன்றுமுதல் வீண் பேச்சை அவன் நிறுத்திக் கொண்டான்.

- சிலையூர்தனம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எடின் இரட்டைச் சதம் வதுஷனன் அபார பந்துவீச்சு; இன்னிங்ஸால் வென்றது யாழ்.சென்றல்


வதுஷனன்


எடின்

யாழ்ப்பாணம்,ஜன. 25
எடின் இரட்டைச் சதம், வதுஷனின் அபார பந்து வீச்சு இரண்டும் கை கொடுக்க யாழ். மத்திய கல்லூரி ஒரு இன்னிங்ஸ் 355 ஓட்டங்களால் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றிபெற்றது.

நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி களத்தடுப்பில் ஈடுபவதாகத் தீர்மானித்தது.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 85 ஓவர்கள் நிறைவில் 8வி க்கெட்டுக்களை இழந்து 418 ஓட்டங்களைப் பெற்றது.

எடின் 31 நான்கு, 7ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 247 ஓட்டங்களைப் பெற்றார். யூலியஸ், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக (26), டர்வின் 3நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டம் இழக்காமல் (21), கோகுலன் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக (20) ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 82 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பிரசன்னா 32 ஓவர்கள் பந்து வீசி 130 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் பனுஷன் 26 ஓவர்கள் பந்து வீசி 4ஓட்டமாற்ற ஓவர்களுடன் 98 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சபேசன் 8 ஓவர்கள் பந்து வீசி, ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸிற்காக துடுப் பொடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 13 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது.

அன்சியஸ் (8), வினோராஜ் (7) ஓட்டங்களைப் பெற்றனர்.

கோகுலன் 4.1 ஓவர்கள் பந்து வீசி, 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 3ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் வதுஷனன் 7ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி அணி மானிப்பாய் இந்துக்கல்லூரியை தொடர்ந்து துடுப்பெடுத்து ஆடுமாறு பணித்தது. அதற்கு அமைய மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்துதாடியது. மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும் இழந்து 31ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சபேசன் (7), சுபர்சன் (5) ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 9 ஓட்டங்கள் பெறப்பட்டன.

வதுஷனன் 6.3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையும் ஜெரிக்துசாந் 9 ஓவர்கள் பந்து வீசி, 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும் தர்சன் 3ஓவர்கள் பந்து வீசி 2ஓட்டமற்ற ஓவர்களுடன் 3 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (ஜ-23)

# வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜன.25
இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**'எ'-தரம்**

கே.கனகராஜா, பி.பார்த்தீபன், செல்வி ரி.துசியா

**'பி' தரம்**

எஸ்.வசந்தகுமார், பி. ஜெயகரன், பி. தணிகைவேல், ஜ.சசிக்குமார், எம். மதிவத னன், எஸ்.சிவ செல்வன், எஸ்.சாள்ஸ் இன்பதாஸ், எஸ்.மனோன்மணி, பி. சிவசிறி, பி.முகுந்தன், எஸ். யசிதரன், எம். ஆர் மோகனதாஸ்

**'சி'-தரம்**

ஆர். யுகராஜ், எம். நவதீபன், ரி. ஜெயதீபன், எஸ்.செல்வரதன், எஸ்.பானுராஜா, ரி. இந்துகன், ஜே. விஜிதா, கே.கஜேந்திரன், ஆர். முகுந்தன், எஸ். தயானி, எஸ். சிவகாந்தன், எம்.வினோகாந்தன்

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருக்கும் செயல் முறைப் பரீட்சை தொடர்பாக நாளை மறுதினம் வியாழக் கிழமை பி.ப. 3.30 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கலந்துரையா டல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவி ஏ.ஜே.எவ்.றூப சிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ-23)

# வெளியேறினார் 'கவர்ச்சிப் புயல்'



ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடரில், நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் பிரிவு நான்காவது சுற்று ஆட்டத்தில் ரெனிஸ் கவர்ச்சிப் புயல் மரியா ஷரபோவா அதிர்ச்சிகரமாகப் படுதோல்வியடைந்து தொடரைவிட்டு வெளியேறினார். நேற்று பெண்கள் பிரிவின் நான்காவது சுற்று ஆட்டத்தில் தரவரிசையில் 16ஆவது இடத்திலிருக்கும் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, 2-6, 3-6 என்ற செற் கணக்கில் தரவரிசையில் 33ஆவது இடத்திலிருக்கும் ஜேர்மன் வீராங்கனையான அன்டிரியா பெட்கோவிக்கிடம் தோல்வியடைந்து தொடரை விட்டு வெளியேறினார். அன்ரியா காலிறுதிக் குள் நுழைந்தார்.

# இரட்டையரில் பயஸ் - பூபதி ஜோடி வெற்றி; எதிர்த்து விளையாடியோருடன் வாக்குவாதம்!

ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த 2ஆவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி 7-6 (2), 6-4 என்ற நேர் செற் கணக்கில் ஸ்பெயினின் பெலிசியனோ லோபஸ்-ஆர்ஜென்ரீனாவின் ஜுவான் மொனாகோ ஜோடியை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறியது.

இந்த ஆட்டத்தின்போது ஒரு கட்டத்தில் வலை அருகில் நின்றுகொண்டு இரு ஜோடிகளும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டன. பின்னர் நடுவர் தலையிட்டு அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

ஆட்டத்தின் போது இந்திய வீரர்கள், 'வா...முன்னேறி வா....' என்று ஸ்பெயின் மொழியில் உரக்கக் கத்தியபடி ஆடினார்கள். இதுதான் எதிர் ஜோடியை உசுப்பேற்றியிருக்கிறது.


லியாண்டர் பயஸ் தங்களின் கோபத்தை தூண்டும் வகையில் நடந்துகொண்டார் என ஸ்பெயின் வீரர் லோபஸ் குற்றஞ்சாட்டினார்.

இதுகுறித்து பயஸ் கூறுகையில்,

''அந்த வார்த்தையைக் கடந்த 17 ஆண்டுகளாக நான் பயன்படுத்திவருகிறேன். இந்த வார்த்தைக்கு எவரும் உரிமை கொண்டாட முடியாது'' - என்றார்.

மகேஷ் பூபதி கூறுகையில்,

''உணர்ச்சிப்பெருக்கில் நடந்த சம்பவம் இது. ஆனால், உண்மையிலேயே அவர்கள் கோபப்படுவதற்கு இதில் எந்தக் காரணமும் இல்லை. லோபஸ்தான், வேண்டுமென்றே லியாண்டர் பயஸை நோக்கி பந்தால் அடித்துக் காயப்படுத்த முயன்றார்'' - என்றார்.


பூபதி-பயஸ்

இந்த ஆட்டம் முடிந்த பின்னர், கலப்பு இரட்டையர் பிரிவில் தனித்தனி ஜோடிகளுடன் இறங்கிய பயஸ், பூபதி ஜோடி முதல் சுற்றில் வெற்றி கண்டது.

லியாண்டர் பயஸ்-காரா பிளாக் (சிம்பாப்வே) ஜோடி 7-6 (7-2), 4-6, 12-10 என்ற செற் கணக்கில் அலிசா [illegible] (ரஷ்யா) - [illegible] ஜோடியை வென்றது.

மகேஷ் பூபதி - அனஸ்டசியா ரோடினோவா (ஆஸ்திரேலியா) ஜோடி 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் ஆண்ட்ரியா பெட்கோவிச் (ஜேர்மனி)-ரைபரிஸ்டென்பர்க் (போலந்து) ஜோடியை வீழ்த்தியது. (சி)

**ஆசிய உதைபந்தாட்டம்**

# ஜப்பான், உஸ்பெகிஸ்தான் அரையிறுதியில்

டோகா, ஜன. 25
கட்டார் தலைநகர் தோகாவில், 15ஆவது ஆசிய கிண்ண உதைபந்தாட்டத் தொடர் நடந்து வருகிறது.

இதன் காலிறுதிச் சுற்றில் ஜப்பான் அணி, 3-2 என்ற கோல் கணக்கில், தொடரை நடத்தும் கட்டார் அணியை வீழ்த்தியது.

ஜப்பான் சார்பாக ககாவா ஷின்ஜி 2 கோல்களையும், இனோகா மசாஹிகோ ஒரு கோல் அடித்தனர். கட்டார் அணிக்கு செபஸ்டியன், பேபியோ சீசர் மான்டசின் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

மற்றொரு காலிறுதியில் உஸ்பெகிஸ்தான் அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஜோர்தான் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் கௌரிச் விளையாடுவது சந்தேகம்



மெல்போர்ன், ஜன. 25

ஆஸ்திரேலிய வீரர் கௌரிச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ள தால் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பது கேள்விக் குறியாகியுள்ளது.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் நதன் கௌரிச்சுக்கு, இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது வலது கை தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது.

இக்காயத்துக்கு மெல்போர்னில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சத்திரசிகிச்சை செய்யப்பட வுள்ளது.

இதனால் அவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# நான்காவது சுற்றில் பெடரர், நோவாக் வெற்றி!

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்கள் பிரிவில் நேற்று நடைபெற்ற நான்காவது சுற்று ஆட்டங்களில், ரோஜர் பெடரர், நோவாக் டிஜோகோவிக், தோமஸ் பெர்டிஜ் ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர்.

நேற்று நடைபெற்ற நான்காவது சுற்று ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் இரண்டாவது இடத்திலிருக்கும் சுவிட்ஸர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், ஸ்பெயின் வீரர் ரொம்மி ரொப்ரேடோவைச் சந்தித்தார்.

ஆட்டத்தின் முதல் செற்றை 6-3 என்ற கணக்கில் வென்ற பெடரர், இரண்டாவது சுற்றை 3-6 என்ற செற் கணக்கில் பறிகொடுத்தார்.

எனினும், பினனர் முழுமையாகச் சுதாகரித்துக்கொண்ட பெடரர், 6-3, 6-2 என்ற செற் கணக்கில் அடுத்த இரண்டு சுற்றுகளையும் கைப்பற்றினார்.

இறுதியில் பெடரர் 6-3, 3-6, 6-3, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் மூன்றாவது இடத்திலிக்கும் நோவாக் டிஜோகோவிக், ஸ்பெய்ன் வீரர் நிக்கோலஸ் அல்மாரோவை 6-3, 6-4, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

அதேவேளை நடந்த இன்னொரு ஆட்டத்தில் தரவரிசையில் ஆறாவது இடத்திலிருக்கும் ஸ்பெய்ன் வீரர் தோமஸ் பெர்டிஜ் 6-4, 6-2, 6-3 என்ற செற் கணக்கில் பெர்னான்டோ வெர்டஸ்கோவை வீழ்த்தி, காலிறுதிக்குள் நுழைந்தார்.

# காலிறுதியில் ரபேல் நடால்; அதிர்ச்சியில் சோடர்லிங்!

மெல்போர்ன், ஜன. 25

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சுவீடன் வீரர் ரொபின் சோடர்லிங், அதிர்ச்சித் தோல்வியடைந்தார். அதேவேளை, நடால், அன்டி முர்ரே, டேவிட் பெரர் ஆகியோரும், பெண்கள் பிரிவில் வெரா ஸ்வோனரெவாவும் காலிறுதிக்குள் நுழைந்தனர்.

நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் நான்காவது இடத்திலிருக்கும் சுவீடன் வீரர் ரொபின் சோடர்லிங், உக்ரைன் வீரர் அலெக்ஸ்சான்டர் டோல்ஹோபோலோவை எதிர்கொண்டார். 5 சுற்றுகள் வரை நடந்த இந்த ஆட்டத்தின் இறுதியில், சோடர்லிங் 6-1, 3-6, 1-6, 6-4, 2-6 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து தொடரைவிட்டு வெளியேறினார்.

அதேவேளை, நடந்த இன்னொரு ஆட்டத்தில், தரவரிசையில் முதலாவது இடத்திலிருக்கும் நடால், சிலிக்கை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.

ஏனைய ஆட்டங்களில், அன்டி முர்ரே, டேவிட் பெரர் ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

பெண்கள் பிரிவில் நடந்த ஆட்டங்களில் பெட்ரா கோவிரொவா, வெரா ஸ்வோனரெவா, அக்னிஸ்கா ரட்வான்ஸ்கா ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றனர்.




25 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# கரோலின், நா லீ காலிறுதிக்கு



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்கள் பிரிவில் நேற்று நடைபெற்ற நான்காவது சுற்று ஆட்டங்களில், கரோலின் வொஸ்னியாக்கி, நா லீ ஆகியோர் வெற்றிபெற்று, காலிறுதிக்குள் நுழைந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்றுவரும் டென்னிஸ் தொடரில், நேற்று நடைபெற்ற நான்காவது சுற்று ஆட்டம் ஒன்றில், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள டென்மார்க் வீராங்கனை கரோலின் வொஸ்னியாக்கி, லத்வியாவின் அனஸ்டஸிஜாவை எதிர்கொண்டார்.

ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய வொஸ்னியாக்கி, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் இரண்டு சுற்றுக்களையும் வெற்றிகொண்டார்.

நான்காவது சுற்றில் வெற்றிபெற்றதன் மூலம் காலிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் பதினொராவது இடத்திலுள்ள சீன வீராங்கனையான நா லீ, தரவரிசையில் ஒன்பதாவது இடத்திலிருக்கும் விக்ரோரியா அழரன்காவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய நா லீ, 6-3, 6-3 என்ற செற் கணக்கில் இரு சுற்றுகளையும் தனதாக்கினார்.

இதனடிப்படையில் நான்காவது சுற்றில் வெற்றிபெற்ற நா லீ, காலிறுதிக்குள் நுழைந்தார். அதே வேளை, விக்கோரியா அழலன்கா பரிதாபமாக வெளியேறினார்.

வொஸ்னியாக்கி

## துளிகள்

**இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான கடைசிப் போட்டியில் இருந்து சில சுவாரஸ்யமான தகவல் கள்-**

**யூசுப் பதான் சாதனை**

7ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய யூசுப்பதான் 7ஆவது சதமடித்தார். முன்னதாக கடந்த டிசம்பர் மாதம் பெங்களூரில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 123 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இதன் மூலம் 7ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கி 2 சதங்கள் அடித்த முதலாவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார். அப்துல் ரஸாக், டோனி, முகமது கைப், கெம்ப், ஒடோயோ, பொல்லக், திலகரட்ண ஆகியோர் 7ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கி தலா ஒரு சதம் அடித்துள்ளனர்.

**பரபரப்பாக்கிய 'நோ-போல்'**

'திரிலிங்'காக முடிந்த கடைசி ஆட்டத்தில் இந்திய வீரர் சஹீர்கான் 5 ஓட்டங்களுடன் (அணியின் ஓட்ட எண்ணிக்கை 139) ஆடிக்கொண்டிருந்தபோது மோர்னே மோர்கல் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் டிவில்லியர்சிடம் பிடிகொடுத்தார். அவரும் 'பெவிலியன்' [illegible] திரும்பினார். அப்போது ந[illegible]ருக்கு திடீரென அது முறையற்ற ப[illegible] வீச்சாக (நோ-போல்) இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட, மூன்றாவது நடுவரின் உதவியை நாடினார். அதில் மோர்கல், கோட்டுக்கு (கிரீஸ்) வெளியே காலை வைத்து பந்து வீசியமை தெரிய வந்தது. இதனால், சஹீர்கான் மீண்டும் அழைக்கப்பட்டார். இதன் பிறகுதான் அவரது துணையுடன் யூசுப்பதான் பட்டையைக் கிளப்பினார்.

**தொடரும் 2ஆவது இடம்**

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை 2-3 என்ற கணக்கில் இழந்த போதிலும், ஐ.சி.சி. ஒரு நாள் போட்டிக்கான அணிகளின் தரவரிசையில் இந்தியா 119 புள்ளிகளுடன் தொடர்ந்து 2ஆவது இடத்தில் உள்ளது. ஆனால், இத்தொடர் ஆரம்ப மாவதற்கு முன்னர் இந்தியாவின் புள்ளிகளின் எண்ணிக்கை 121 ஆக இருந்தது. அதில் இப்போது 2 புள்ளிகள் குறைந்திருக்கிறது. தொடரை வென்றதன் மூலம் தென்னாபிரிக்காவுக்கு 3 புள்ளிகள் அதிகரித்துள்ள போதிலும், 118 புள்ளிகளுடன் அதே 4ஆவது இடத்தில்தான் உள்ளது. ஆஸ்திரேலியா 130 புள்ளிகளுடன் முதலிடத்திலும், இலங்கை 118 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளன.

**ஆம்லா, சோட்சோபே முதலிடம்**

இந்த தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் தென்னாபிரிக்காவின் ஆம்லா. அவர் 5 ஆட்டங்களில் 250 ஓட்டங்களைச் சேர்த்தார்.

பந்து வீச்சாளர்களில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்கள் வரிசையில் தென்னாபிரிக்காவின் சோட்சோபே 13 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## இரத்தினம் ஸ்ரீதரன்

(ஸ்ரீலங்கா ரெலிகொம் S.L.T Manpower Service ஊழியர்)

செட்டியார் வளவு, சுன்னாகத்தைச் சேர்ந்த இரத்தினம் ஸ்ரீதரன் கடந்த (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் இரத்தினம் - தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், மதிவதனி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் சகோதரனும், கீத்தாவின் அன்புக் கணவரும், சாருஜனின் அன்புத் தந்தையும், நிரோசன், நிஷாந்தன், நிலக்ஷன், நிதர்ஷன், சங்கீதன் ஆகியோரின் சிறிய தந்தையும் வசந்த ராணியின் மைத்துனரும், புஸ்பநாதன், குணசேகரம், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மருமகனும், தவமணி, லங்காதேவி, சர்வநாயகி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.01.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டியார் வளவு,
சுன்னாகம்.

(109750)

தகவல்:
குடும்பத்தினர்.



## நாகலிங்கம் யுவராஜா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், செட்டிகுளத்தில் பணிபுரிந்தவருமான ரூபியர் என்று அழைக்கப்படும் நாகலிங்கம் யுவராஜா நேற்று (24.01.2011) திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இரத்தினம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம் தம்பதியரின் மருமகனும், இரத்தினேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் (ஓவசியர்), இரத்தின லிங்கம்மா மற்றும் நாகேஸ்வரி (அளவெட்டி), சத்தியபாமா (சிங்கப்பூர்), சண்முகநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜீவராஜ் (பரிஸ்), இரத்தினராஜ் (லண்டன்),சிவன்ராஜ் (லண்டன்), ரூபராஜ் (லண்டன்), ராஜ்ஜனார்த்தனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜனார்த்தன், சாருமதி, லிங்கேஸ்வரி, கங்காதேவி, நிறஞ்சனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ப்ரி தியங்கரா, பிரசாதினி, பிரகாஸினி, யுவப்பிரியன், விஸ்வஜித், ரமா, சாரங்கன், சாம்பவி, சானுகா, சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (25.01.2011) செவ்வாய்க் கிழமை மு.ப 10.30 மணிக்கு இலக்கம் 68, 3ஆவது தெரு, சிறீதேவி காடின், சிறீலக்ஸ்மி நகர், வளசரவாக்கம், சென்னை என்ற முகவரியில் உள்ள வீட்டில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பி.ப. ஒரு மணிக்கு போரூர் மின்தகன மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக் கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு:ஜீவராஜ்:-00918939419230,இரத்தினராஜ் 00919940192516,
சிவன்ராஜ்:- 004407961800148,ரூபராஜ்:- 004407984454415,
ஜனார்த்தன்:- 004407931133354.

(109901)

# அரசியல்வாதி வீடு மீது அக்கரைப்பற்றில் சூடு

கொழும்பு, ஜன.25

அக்கரைப்பற்று மாநகரசபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸில் போட்டியிடவிருந்த எம்.முஹமட் ரிஸாமின் வீட்டின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன என்றும் அவர் வீட்டில் இருந்தபோதும் அவருக்கு எதுவும் ஏற்படவில்லை என்றும் எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

சம்பவத்தையடுத்து குறித்த பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதுடன் அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உள்ளூராட்சி தேர்தல் காலம் நெருங்குவதால் இதுபோன்ற அசம்பாவிதங்கள் அதிகரிக்க சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.(சி)

## அரியாலை கிழக்கு நெற்பயிர்கள் நாசம்

யாழ்ப்பாணம், ஜன.25

அரியாலை கிழக்கு நாவலடிப் பகுதி வயல்களில் பெரும்போக நெற்செய்கை சுமாரன விளைச்சல் கண்டுள்ளபோதிலும் கட்டாக்காலி மாடுகள் அவற்றை சேதப்படுத் துவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்னறனர்.

வயல் நிலங்களைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப் பட்டுள்ள போதிலும் கட்டாக்காலி மாடுகள் இரவில் நெற்பயிர்களை அழித்து வருவதாகக் கூறப்படுகின்றனது.

இடம்பெயர்ந்து வந்தபோது விட்டுச் சென்ற மாடுகள் பெருக்கமடைந்து கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-135)

# மாணவர்கள் மீதான தாக்குதல்கள்: பல்கலைக்கழக நிர்வாகம் பாராமுகம்!

### மறைமுக அங்கீகாரம் வழங்கியுள்ளது எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.25

றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் தொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகம் பராமுகமாக இருக்கிறது. இதன்மூலம் மாணவர்கள் மீதான தாக்குதல்களுக்குப் பல்லைக் கழக நிர்வாகம் மறைமுகமாக அங்கீகாரம் வழங்கியுள்ளது என றுகுணு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

றுகுணு பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து மாணவர்கள் 6 பேர் மீது கடந்த 14ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது.

''இத்தாக்குதல் குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முறையிடப்பட்டபோதிலும், குற்றஞ்சுமத்தப்பட்ட மாணவர்கள் மீது எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை'' என றுகுணு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் துமிந்த தாரக, நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

''தாக்குதலில் காயமடைந்த மாணவர்களில் ஒருவர் இன்னும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். கடந்த 19 ஆம் திகதியன்று கூட மாணவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

''பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்த மாணவர் மீது முகமூடியணிந்த நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதல் தொடர்பாக இரு தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும் பல்கலைக்கழக நிர்வாகம் அமைதியாக உள்ளது. இந்த அமைதியின் மூலம் பல்கலைக்கழக நிர்வாகம் தாக்குதல்களுக்கு மறைமுக அங்கீகாரம் வழங்குகிறது'' எனவும் அவர் கூறினார்.

(12)

**யாழ். கிறிஸ்தவ ஒன்றியமும், யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஒன்றிப்புக்கான ஆணைக்குழுவும் இணைந்து நடத்தும்**

*ஒன்றிப்பு வார நிறைவுக் கூட்டுறவு வழிபாடு*

காலம்:- 25.01.2011 செவ்வாய்க்கிழமை.
நேரம்:- பி.ப. 4 மணி.
இடம்:- பரி. தோமா சிற்றாலயம்
(யாழ். பல்கலைக்கழகம்)
வளாக வீதி, திருநெல்வேலி.

ஒன்றிப்புக்கான ஆணைக்குழு,
கத்தோலிக்க மறை மாவட்டம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(109748)

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்,
446, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## மனுவெல்ப்பிள்ளை செல்வராஜா (பீற்றர்)

பொற்பதி, குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனுவெல்ப்பிள்ளை செல்வராஜா (பீற்றர்) 21.01.2011 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவெல்ப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - ராசம்மா இம்மனுவேல் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், செல்வலிற்றிசியா, அமலதாஸ், டயஸ், மரினா, பிறின்சன், பமிலா, றேகன், ஸ்ரேல்லா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெயம் மற்றும் மனோரா, ஜோஜ், வண்ணமலர், மாசில்லா ஆகியோரின் அன்புச் சகோதரரும் டேவிற், விஜிதா, லிஸ்ரன், அருள்தேவி, டேவிற் ஆகியோரின் மாமனாரும், டிகான், டேமினி, டெனி, டெனிசியா, டெனுஸ்ரன், டெலின், டனுஜா, டனுசன், எல்ட்டன், செறீன், செறீயா ஆகியோரின் பேரனும், டிசானின் பூட்டனும், கிளி றோஸ்மலர், காலஞ்சென்ற இந்திராணி மற்றும் அருமை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (26.01.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ராசப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பொற்பதி, குடத்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி, குடத்தனை,
தொ.இல- 0213207774, 0779688035

(109743)

தகவல்:
குடும்பத்தினர்.

## நேர்முகத்தேர்வு

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் தையல் டிப்ளோமா பயிற்சிக்குப் பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவில் விண்ணப்பித்தோருக்கான நேர்முகத் தேர்வு நாளைமறுதினம் வியாழன் மு.ப. 9.00 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறுமென்று பருத்தித்துறைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(ஒ-319)

## கூட்டம்

பருத்தித்துறைப் பிரதேச சிறுவர் கண்காணிப்புக் கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் பிரதேச செயலகத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்ட அலுவலர்களை வருகை தருமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-319)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை முருகேசு

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசு நேற்று முன்தினம் (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது 97ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமவல்லியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சற்குணலிங்கம், நகுலேஸ் வரி மற்றும் அமுதலிங்கம் (இளைப்பாறிய மின் பொறியியலாளர்), சண்முகலிங்கம் (விவசாய சம்மேளனம், கிராம அபிவிருத்திச்சங்கம், கோப்பாய் மத்தி), இராசேஸ்வரி, பஞ்சலிங்கம், மங்களேஸ்வரி (ஆசிரியை), விநாயகலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பரமேஸ்வரி, திலகவதி, நீலாவதி, சண்முகலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சாந்தாதேவி, செந்திற்குமரன் (அதிபர்), கோமளாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் கம்சானந்தி, சசிகலா, மங்கையர்க்கரசி, மனோன்மணி, விக்கினேஸ்வரன் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி, அன்பரசி, திசங்கர், திரிகரன், சதீஸ்வரி, மைதிலி, தர்சினி, சரண்யா, பிரதாபன், பிரமோதினி, பிரதீபன், சுபாங்கி, அபர்ணாங்கி, சஞ் சீவன், கோபிகன், கபிலன், அஜந்தன், கஜரூபி, அஜந்தினி, ஞானரூபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(109749)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரிக்கும்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

இச்சேவையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத் தக்கது. அண்மைக்காலமாக நாடு முழுவதும் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றன. தேசிய சிறு வர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கிலிருந்து சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகத் எமது சபைக்கு குறைந்தளவு முறைப்பாடுகளே கிடைக்கப்பெற்றுள்ளன. சில வேளை அவர்களுக்கு .முறைப்பாடு செய்யவேண்டிய தொலைபேசி இலக்கம் தெரியாமல் இருந்திருக்கலாம்.

எனவே சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுமாயின் 1929என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு முறையிடலாம். இது வடக்குக்கு மாத்திரமல்ல நாடளாவிய ரீதியிலான இலவச சேவை என்பதும் குறிப்பிடத்தக்கது - என்றார். (சி)

## சிகிச்சை...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயிராபத்தான நோய் ஒன்றுக்காகவே ஹுஸ்டனில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

லண்டனில் உள்ள இலங்கை செய்தி நிறுவனம் ஒன்றின் தகவல்படி மஹிந்த ராஜபக்ஷ, எம்.டி.அன் டர்சன் புற்றுநோய் நிலையத்தில் சிகிச்சை பெற்றார் எனத் தெரியவருகிறது'' - இவ்வாறு 'ஸ்ரீலங்கன் கார்டியன்' இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது. (உ-சி)

## இணைய வசதியுடன்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் சமூகச் செயற்பாட்டு மையத்தின் ஒரு பகுதியிலேயே தற்காலிகமாக இந்த தகவல் கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் தனியான கட்டடத்திற்கு அது மாற்றப்படும் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

கூடத்தை திறந்து வைத்து உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் புட்டின்ஸ், ''யாழ்ப்பாணத்தில் நாம் மற்றொரு 'முதல்' காரியத்தைத் தொடக்கி வைக்கிறோம்'' என்று தெரிவித்தார். ஏற்கனவே அமெரிக்க மிஷனரிகள் யாழ்ப்பாணத்தில் வதிவிட வசதியுடன் கூடியதாக உடுவில் மகளிர் கல்லூரியை ஆசியாவிலேயே முதல் பாடசாலையாகக் கட்டியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தகவல் கூடத்தைத் திறந்து வைப்பதற்காக வந்திருந்த தூதர், நேற்றுத் தமது குழுவினருடன் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் சென்றிருந்தார். அங்கு பதில் துணைவேந்தர் நா.சண்முகலிங்கனுடன் கலந்துரையாடினார். விவசாய பீடம் அமைப்பது, மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குவது போன்ற விடயங்கள் குறித்து அவர் அங்கு அக்கறையுடன் விவாதித்தார் எனத் துணைவேந்தார் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் உதயன் பத்திரிகை அலுவலகத்திற்கும் நேரில் வருகை தந்து ஆசிரியபீட உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். (உ-15)

## அ' புரம் சிறையில்....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

டனர். இவர்களுள் ஒன்பது அதிகாரிகளும் அடங்குவர். படுகாயமடைந்த நிலையில் கொண்டுவரப்பட்ட கைதி யொருவர் பின்னர் உயிரிழந்தார். மூவர் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க் கப்பட்டனர். மேலும் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்'' என்று அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளை பழிவாங்கும் நோக்குடன் தாக்குதலை மேற்கொண்டனர் என்று கூறப்படுகி றது. இதனால் சிறைச்சாலைக்குள் கடும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

சிறையில் சுமார் 60 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். விசேட பாதுகாப்பு எனச் சொல்லி அவர்களைத் தனியாக அடைத்து வைத்திருக்கிறார்கள்.

மோதல் நடந்த இடத்திற்கு அதிகாரி கள் செல்ல முடியாத நிலை இருப்பதாக நேற்றிரவு சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் உள்ளே உயிரிழந்து இருக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை சரிவரத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் மேலும் நால்வர் வரையில் உயிரிழந்தனர் என்று சிறைச்சாலைக் குள் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. எனினும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. (உ)

## நவசமசமாஜக்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

போட்டியிட தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் நவசமசமாஜக் கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு போட்டியிடும் என என்.கே. சிவாஜிலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும், நாளை திருகோணமலையிலும், நாளை மறுதினம் மன்னார் - வவுனியா போன்ற இடங்களிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும், நவசமசமாஜக் கட்சியுடன் தாம் கடந்த தேர்தல் காலங்களில் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தாம் அக்கட்சியுடன் இணைந்து மேசைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

தமது அரசியல் பலத்தை நிரூபித்துக் காட்டுவதற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறான தீர்மானங்களுக்கும், சிந்தனைகளுக்கும் சரியான பாடம் புகட்டுவதற்கும் ஏற்றதாகத் தமது போட்டி அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# மஹிந்தவை நேரில் அழைத்து எச்சரிக்க பிரதமர் மன்மோகன் தயங்குவது ஏன்?

## தினமணி நாளேடு கேள்வி

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படும் சம்பவத்திற்கு மத்திய அரசு நியாயமாக என்ன செய்ய வேண்டும்? இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் நேரில் அழைத்து எச்சரிக்க அல்லவா வேண்டும்? ஆனாலும் தயங்குகிறார்கள், பயப்படுகிறார்கள். வலிமை மிகுந்த இந்தியா குட்டி இலங்கையிடம் பயப்படுகிறதே, ஏன்?

- இப்படி தினமணி நாளேடு கேள்வியெழுப்பியுள்ளது.

இதுகுறித்து தினமணியில் வெளியான ஆசிரியர் தலையங்கம் வருமாறு -

இலங்கைக் கடற்படையால் கடந்த 12 ஆம் திகதி மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சரியாக பத்து நாட்கள் முடிவதற்குள் நாகை மாவட்டம், புஷ்பவனத்தைச் சேர்ந்த மீனவர் ஜெயக்குமாரை இலங்கைக் கடற்படை கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கிறது.

வழக்கம்போல இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவித்து, கடற்படையின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளார். வழக்கம்போல தமிழக அரசும் இறந்த மீனவரின் குடும்பத்துக்கு ரூபா 5 இலட்சம் அறிவித்துள்ளது.

அதேபோல, இலங்கைக் கடற்படையும் இந்த மரணத்துக்கு நாங்கள் காரணமல்லர் என்று கூறியுள்ளது. அப்படியானால் யார்தான் காரணம்? மீனவர் ஜெயக்குமார் வானத்தில் கயிறு மாட்டித் தூக்கிட்டுக் கொண்டார் என்று சொல்லுமா இலங்கைக் கடற்படை?

அரபிக் கடலில் இந்திய-பாகிஸ்தான் கடல் எல்லையில் இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர் எனச் செய்திகள் வருவதில்லை.

ஆனால், தொடர்ந்து தமிழக மீனவர்கள் மட்டுமே இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனரே. இது ஏன்? எப்படி?

விடுதலைப் புலிகள் முழு பலத்துடன் இலங்கையை எதிர்த்துக் கொண்டிருந்த நேரத்தில் தமிழக மீனவர்கள் கடலில் சுட்டுக் கொல்லப்பட்ட வேளையில் சொல்லப்பட்ட ஒரே காரணம், இந்த மீனவர்கள் விடுதலைப் புலிகளுக்கான இன்றியமையாப் பொருட்கள் மற்றும் மருந்துகள், பெற்றோல், டீசல் ஆகியவற்றைக் கொண்டு சென்றனர் என்பதாகவே இருந்தது. ஆனால், இப்போது இலங்கையில் விடுதலைப் புலிகளே இல்லை. அவர்களை முற்றிலுமாக அழித்து விட்டோம் என்று இலங்கை அரசே வாக்குமூலம் வழங்கிவிட்டிருக்கும் நிலையில் நமது அப்பாவி மீனவர்கள் கொல்லப்படுவதன் காரணம்தான் என்ன?

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்குச் சென்று பொங்கல் பண்டிகையில் கலந்துகொள்கிறார்.

யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுகிறது என்பதன் இன்னொரு அடையாளமாக அங்கே அண்மையில் இந்தியன் வங்கி தனது அயல்நாட்டுக் கிளையைத் திறந்திருக்கிறது. இன்னும் நிறைய வங்கிகள் தங்கள் கிளைகளைத் திறக்கவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மாறுதல் ஏற்பட்டுவிட்ட பின்னரும், இந்திய மீனவர்கள் கடல் எல்லையைக் கடப்பது நிகழ்ந்தாலும் அது எந்த உள்நோக்கமும் இல்லாமல், மீன்பிடிக்கும் ஆர்வத்தில் எல்லை கடந்ததாக இருக்குமே தவிர, வேறு எந்தவித காரணங்களுக்காகவும் இருக்க முடியாதே! பிறகும் அவர்கள் கொல்லப்படுவதன் காரணம் என்ன?

தமிழர்கள்மீதான வெறுப்பா, இல்லை இந்திய அரசு எதுவும் செய்யாது என்கிற நினைப்பா?

தமிழக மீனவர்கள் எல்லை கடக்காமல் இருக்கும்படி செய்வதற்கான அறிவியல் கருவிகளை அளிக்க வேண்டும் என்பதும், கரையிலிருந்து குறிப்பிட்ட கடல் மைல்களைத் தாண்டும்போது எச்சரிக்கை மணியோசையுடன் கூடிய பிரத்தியேகமான ஒலிப்பான்களைப் படகுகளில் நிறுவுவதும் இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் தடுக்க உதவும். ஆனால்,தமிழக அரசு இதுவரை அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மத்திய அரசாவது அதற்காக முயற்சிகளை ஊக்குவித்ததா என்றால் இல்லை. அப்படியானால், செத்தால் சாகட்டும் என்கிற அக்கறையின்மையா?

கடந்த 12 ஆம் திகதி இலங்கைப் படையால் சுடப்பட்டு தமிழக மீனவர் இறந்தபோது சட்டப்பேரவையிலேயே இதுகுறித்து பேசப்பட்டது. இந்தியக் கடல் எல்லையை மீனவர் கடக்காதபடி, ஒளிரும் விளக்குகள் கொண்ட மிதவைகளை -அவை நகராதபடி நங்கூரம் பாய்ச்சி- மிதக்கவிடுவதாக அரசு அறிவித்தபடி செய்திருக்கலாமே, ஏன் செய்யவில்லை?

சபரிமலை விபத்தின்போது, மலையில் எவ்வளவு நெரிசல் இருக்கிறது என்பதை செயற்கைக்கோள் படங்கள் மூலம் அளித்து உதவிடத் தயார் என்று அறிவித்த இஸ்ரோ, கடல் எல்லையில் இராணுவத்தினரின் அத்துமீறலையும் செயற்கைக்கோள் உதவியுடன் படம் பிடித்துக் கொடுக்க முடியும். இலங்கை - இந்தியக் கடல் எல்லை என்பது மிகக் குறுகிய தொலைவுதான். இப்பகுதியில்இந்தியக் கடற்படையின் கப்பல் நிலையாக நிறுத்தப்பட்டு, வானுயர்ந்த பலூன்களில் சக்திவாய்ந்த கமராக்களைப் பொருத்தி, பல மைல் தூரத்துக்குக் கண்காணிப்பதும் சுலபம். நவீன உலகில் இவற்றைக் கண்காணிக்க, தடுக்க நிறைய வசதி, வாய்ப்புகள் உள்ளன. இதிலெல்லாம் தமிழக அரசும் மத்திய அரசும் அக்கறை காட்டவில்லையே, ஏன்?

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ அரசு தாக்குதல் நடத்தத் தொடங்கியது முதல் இந்திய அரசியல் போக்கில் ஒரு மிகப்பெரிய மாறுதல் ஏற்படத் தொடங்கியது. இலங்கை அரசு எது செய்தாலும் அதை ஆதரிப்பது, தவறு செய்தால் கண்களை மூடிக் கொள்வது என்கிற மத்திய அரசின் போக்குக்கு என்ன காரணம் என்பது புரியவில்லை.

தமிழிலும் இசைக்கப்பட்ட இலங்கையின் தேசிய கீதம் எந்தவித காரணமும் இல்லாமல் தடை செய்யப்பட்டது எனச் செய்தி வெளியானபோதுகூட, இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் நமது மத்திய, மாநில அரசுகள் மௌனம் சாதித்தனவே தவிர எச்சரிக்கைக் குரல்கூட எழுப்பவில்லை.

தொடர்ந்து மீனவர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். தமிழக அரசு கடிதம் எழுதுகிறது. முதல்வர் வேண்டுகோள் விடுக்கிறார். மத்திய அரசு எச்சரிக்கை செய்வதாக அறிவிக்கிறது. அத்தோடு பிரச்சினை கைகழுவப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் நேரில் அழைத்து எச்சரிக்க அல்லவா வேண்டும்? பலமுறை இலங்கைத் தூதரிடமும், வெளிவிவகார அமைச்சர் மூலமும் வேண்டுகோள், எச்சரிக்கை என்று விடுத்தும் பயனில்லாத நிலையில் அது வல்லவா அடுத்த முடிவாக இருக்கும். ஆனாலும் தயங்குகிறார்கள்.

அவரவர் குடும்பத்தில் ஒருவர் மீன் பிடிக்கப்போய் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால்தான் இவர்களுக்கு அதன் வலி தெரியும்! கொல்லப்படும் மீனவர்களின் குடும்பமும் ஒரு குடும்பம்தான் என்பது ஏன் நமது ஆட்சியாளர்களுக்கு மறந்து விடுகிறது?

எதையுமே செய்யாமல், எதையுமே கேட்டுப் பெறாமல் தமிழக அரசு கடிதம் எழுதுகிறது. கொல்லப்பட்டவர்கள் குடும்பத்துக்கு ரூபா 5 இலட்சம் வழங்குகிறது. தேர்தல் காலச் சாவு என்றால் அதிக நிதி கிடைக்கிறது. ஆனால், நீதி கிடைப்பது எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயசூரியா விளையாடினால் முற்றுகையிட்டுப் போரிடுவோம்

## அக்கினிப்புயல் சீமான் ஆவேசம்

சென்னை, ஜன. 25

சென்னையில் இலங்கைக் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூர்யா விளையாடும் கிரிக்கெட் மைதானத்தை முற்றுகையிடுவோம் - என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வர்த்தக நிறுவனங்கள் இடையேயான 6 வீரர்கள் பங்கேற்கும் சூப்பர் சிக்ஸ் கிரிக்கெட் போட்டி, சென்னையில் நடந்து கொண்டிருக்கிறது. இறுதிப் போட்டி மாயாஜால் மைதானத்தில் நடைபெறுகிறது. இதில் சர்வதேச கிரிக்கெட் வீரர்களான ஜெயசூர்யா, அரவிந்த் டிசில்வா, மொங்கியா, சஞ்சய் பாங்கர், ராபின்சிங், குளுஸ்னர், வினோத் காம்ப்ளி, சுனில்ஜோஷி ஆகியோர் ஆடுகிறார்கள்.

இதில் மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளரும், இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் சார்பில் மாத்தறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவருமான சனத் ஜெயசூர்யா 25-01-2011 (இன்று) செவ்வாய்க்கிழமை நடைபெறும் போட்டியில் விளையாடவுள்ளார். இவர் தமிழர்களுக்கு எதிராகப் பல்வேறு நச்சுக் கருத்துக்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளார். இவர் தமிழ் நாட் டில் கிரிக்கெட் விளையாடுவதை நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

எங்கள் மீனவர்களைத் தினமும் சிங்களக் கடற்படை கொலை செய்து கொண்டிருக்கின்றது. உலகின் கொடுங் குற்றங்கள் அனைத்தையும் செய்தவர் எனக் கூறப்படும் மஹிந்தவோ இது குறித்து எந்தப் பதிலும் சொல்லாமல் ஆணவத்துடனும் மமதையுடனும் தனது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரை கிரிக்கெட் விளையாட என தாய மண்ணிற்கு அனுப்பியுள்ளார். இதனை நாம் தமிழர் கட்சி ஒரு போதும் அனுமதிக்காது. ஆகவே தமிழக அரசும் இந்த விளையாட்டுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ள நிறுவனங்களும் உடனடியாக இன்று நடைபெறும் போட்டி உட்பட ஜெயசூர்யா பங்கேற்கும் அனைத்துப் போட்டியையும் இரத்து செய்ய வேண்டும்.



இதனையும் மீறி விளையாட்டை நடத்த முற்பட்டால் கிரிக்கெட் மைதானத்தையும், விளையாட்டு போட்டியை ஏற்பாடு செய்துள்ள நிறுவன்ங்களின் அலுவலகங்களையும் நாம் தமிழர் கட்சி முற்றுகையிடும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ர)

# தேர்தல் தொகுதிப் பங்கீடு குறித்து கருணாநிதி - பிரணாப் ஆலோசனை

சென்னை, ஜன. 25

முதல்வர் கருணாநிதி, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சந்திப்பின்போது, சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு பற்றி பேசப்பட்டது எனக் கூறப்படுகிறது.

இம்மாத இறுதியில் நடை பெறும் மாநில முதலமைச் சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முதல்வர் கருணாநிதி புதுடில்லி செல்கிறார். அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்து, தொகுதிப் பங்கீடு பற்றிப் பேசி இறுதி செய்வார் என்று கூறப்படுகிறது.

நடைபெறவுள்ள தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தி.மு.க. அணியில் காங்கிரஸ் கட்சி தொடர்வது என்பது உறுதியாகி விட்டது. இந் நிலையில், தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சை அவ்விரு கட்சிகளும் தொடங்கி விட்டன எனத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பின்போது, வரும் தேர்தலில் அ.தி.மு.க. அணியை வீழ்த்துவதற்கான வியூகம் பற்றியும், எத்தனை தொகுதிகள் வேண்டும் என்ற காங்கிரஸ் கட்சியின் விருப்பம், எத்தனை தொகுதிகளை ஒதுக்க முடியும் என்ற தி.மு.க.வின் நிலை ஆகியவை குறித்த தகவல்களையும் இரு கட்சிகளின் தலைவர்களும் பறிமாறிக் கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

# எச்சரிக்கத் தவறியது இந்தியா அதனால் தொடர்கிறது படுகொலை

## ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 24

இலங்கை அரசை இந்திய அரசு எச்சரிக்காததால் தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்கிறது - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுபற்றி அவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

22.1.2011 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் ஒன்றியம், புஷ்பவனம் கிராமம், மீனவர் கொலனியைச் சேர்ந்த அ.தி.மு.க. தொண்டர்களான ஜெயக்குமார், ராஜேந்திரன் மற்றும் செந்தில் ஆகிய மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைக் கடற்படை யினர் மீனவர்கள் மூவரையும் கடுமை யாகத் தாக்கி கடலில் குதிக்குமாறு மிரட்டி உள்ளனர்.

இதனையடுத்து ராஜேந்திரன், செந்தில் ஆகியோர் கடலில் குதித்துள்ளனர். ஆனால், ஆழிப்பேரலையின் போது தன் கையில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக கடலில் நீச்சல் அடிக்க முடியாது என்பதால், உயிருக்கு பயந்து கடலில் குதிக்க மறுத்து தன்னைக் காப்பாற்றுமாறு இலங்கைக் கடற்படையிடம் ஜெயக்குமார் கெஞ்சி இருக்கிறார்.

எனினும், ஈவு இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற இலங்கைக் கடற்படை யினர் ஜெயக்குமாரின் கழுத்தில் கயிற்றினால் சுருக்கிட்டு இழுத்துக் கொன்றிருக்கின்றனர். பின்னர், படகில் பிரேதத்தை அப்படியே போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

இந்தக் கொடுஞ் செயலுக்கும், கடிதம் எழுதுதல், தந்தி அடித்தல் போன்ற கபட நாட கங்களை நடத்தியே, தமிழக மீனவர்கள் அன்றாடம் கொல்லப்படுவதை வேடிக் கைப் பார்த்துக் கொண்டிருக்கும் முதல்வர் கருணாநிதிக்கும் எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இலங்கைக் கடற்படையினரின் கொடூ ரத்தாக்குதலுக்குப் பலியான ஜெயக்குமாரின் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது என்பது தொடர் கதையாக ஆகிவிட்டது. இலங்கை அரசை இந்திய அரசு கடுமையாக எச்சரிக்காததே இதுபோன்ற அவல நிலைமைக்குக் காரணம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Diploma Courses அனைத்து மாணவர்களுக்கும்
upto 90%Discount.
Ms Office - Rs.2400
Multimedia - Rs.3600
Accounting - Rs.3600
AutoCAD-2&3D - Rs.6000
Web Development - Rs.27000
Free Dip. English ICDL DTP Typing
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Rs.800 Upwards
MCS
Closing Date 26.01.2011
Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



**பத்மநாதன் புஸ்பாகரன்**
**(புஸ்பா)**
*(எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர், சாவகச்சேரி)*

பிறப்பு 1979.06.12

இறப்பு 2010.12.26

*31 நாள்கள் ஓடி மறைந்தனவே*
*உந்தன் முகம் இன்னும் எம் நெஞ்சிலிருந்து மறையவில்லை*
*ஒரு மாதம் அல்ல எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்*
*உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சோடிருக்கும்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*என்றும் உம் நினைவுகளுடன் எமது நண்பனின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் பணியாளர்கள்.*

*எரிபொருள் நிலையம், சாவகச்சேரி.*

## கண்ணீர் அஞ்சலி



**ஆசைப்பிள்ளை இரத்தினம்**
**(கப்புது இரத்தினம்)**

அன்பிலே தெய்வமாய்
அறிவிலே ஆசானாய்
பண்புடனே எம்மை வளர்த்து
பார்புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம்
எமக்களித்து இறைவனடி
சென்றீரே! என்றும் நாம்
மறவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.
தொ.இல 0213218005,
0770690358

தகவல்:
குடும்பத்தினர்

**CONSULATE GENERAL OF INDIA, JAFFNA**

**REPUBLIC DAY FUNCTION**

On the occasion of India's 61st Republic Day, there will be a Flag hoisting ceremony at CONSULATE GENERAL OF INDIA, 280, Palaly Road, Jaffna, On Wednesday, January 26, 2011 at 09.00 hours.

All Indian nationals and their families in Northen Province are cordially invited to participate in the function and are requested to reach the venue latest by 08.30 hrs. To facilitate entry into THE CONSULATE, they are requested to bring their passports or any other photo identity document.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.